11812

LIGHT LITERATURE FOR TAMIL HOMES

MUTHUMEENAKSHI



No. 3

முத்துமீனாக்ஷி

அ. மாதவையர்

The Authors' Press & Publishing-House
MYLAPORE-MADRAS
PRICE EIGHT ANNAS 1924 COPYRIGHT

செந்தமிழ் நாவல்கள்

3. முத்து மீனாக்ஷி

ஒரு பிராமணப்பெண் சுவசரிதை

“தோன்முறை மாறித் துலங்கும் புதுமுறை;
நன்முறை ஒன்றினே ஞாலம் அழுங்காமே
பன்முறையின் ஆளும் பரன்.”

இது

பத்மாவதி சரித்திரம், விஜயமார்த்தாண்டம், குசிகர் குட்டிக் கதைகள், உதயலன், திருமலைசேதுபதி, சித்தார்த்தன், புத்தசரிதை, பாலராமாயணம், பாலவிநோதக் கதைகள், பொதுதர்மசத்கீதமஞ்சரி, புதுமாதிரிக் கலியாணப் பாட்டு, ஆசாரச் சீர்திருத்தம், பாரிஸ்டர் பஞ்சநதம், தில்லைக் கோவிந்தன் முதலிய பல பிரபலமான நூல்களின் ஆசிரியரும், பஞ்சாமிர்தம் பத்திராதிபருமான

அ. மாதவையர்

இயற்றியது

திருத்திய இரண்டாம் பதிப்பு

சென்னை
ஆசிரியர் அச்சுப்பிரசுராலயம்—புஸ்தகசாலை
எட்வர்டு எலியட் ரோடு—மயிலாப்பூர்

எட்டணா] 1924 [காபிரைட்

முகவுரை

இந்த நாவல் 21 ஆண்டுகளுக்கு முன் முதலில் வெளிவந்தபொழுது, இதன் கொள்கைகளையும் வாழ்க்கைக் குறிக்கோளையும் ஹிந்து பத்திரிகை பழித்துக் கண்டித் தெழுதியது. பின்பு பத்து வருஷங்களுக்குள், அந்தக் கோட்பாடுகளின் விருத்தியுரை என்னலாகும் குசிகர் குட்டிக்கதைகளை, அதே பத்திரிகை தானே பிரசுரித்தது மன்றி, புஸ்தக ரூபமாகவும் திரட்டி வெளியிட்டு நாடெங்கும் பரவச் செய்தது. சில வாண்டுகளுக்குள் நம்மவர் அபிப்பிராயங்கள் எவ்வளவு திருந்தி முன் வந்திருக்கின்றன என்பதற்கு இதுவே தக்க சான்றாகும்.

மிகப்பல தலை முறைகளாக ஒரே பழஞ்சுவட்டில் சுற்றி வந்து கொண்டிருந்த நமது ஜனசமூக வாழ்க்கைப் பெருந்தேரானது, இவ்வண்ணம் புதுச்சுவடுகள் பற்றிப் புதியதோர் கிளர்ச்சியோடு நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வரும் புத்தியக்கத்துக்கு, நானுமே ஒரு சிறு தூண்டுகோலெனநம்பி, என்மனம் மகிழ்கின்றது.

இந்நாவலின் முதற் பதிப்புச் செலவாகிப் பல வாண்டுகளாயும் மறுபதிப்பை வெளியிட இப்பொழுதே நேர்ந்தது.

அ. மாதவையர்.

முத்துமீனாக்ஷி

ஒருபிராமணப்பெண்ணின் சுவசரிதை.

முதலாம் அதிகாரம்.

பாண்டிய நாட்டிலே, இராமபுர மென்னும் கிராமத்திலே, சங்கரையருக்கும் பார்வதி யம்மாளுக்கும் இரண்டாவது பெண்ணாகவும் மூன்றாவது குழந்தையாகவும் நான் பிறந்தேன். என் தமையன் சுப்பிரமணியன், எனக்கு ஏழெட்டு வருஷங்களுக்குமுன் பிறந்தவன். எங்களுக்கிடையே பிறந்த பெண் குழந்தை, பிரசவக் கிரகத்திலேயே கைதவறிப் போயிற்று.

சுப்பிரமணியன் முதற் குமாரனானதினாலும், அவர்களுடைய கலியாணத்துக்கு அநேக வருஷங்களுக்குப் பிற்பாடு ஜனித்தவனானதினாலும், என் தாய் தந்தையர், அவனை மிக்க அருமை பாராட்டி வளர்த்துவந்தார்கள். நான் பிறந்தவுடன், அவர்கள், முதலிற் சிறிது பயந்து, பின்பு ஆநந்தத்தையடைந்து, முத்து மீனாக்ஷி யென்னும் என் பாராட்டியாரின் பெயரை எனக்கிட்டு, அப்பாட்டியாரைப்போல் மிக்க செல்வத்தில் வெகு நாள் வாழும்படி என்னை ஆசீர்வதித்ததுமன்றி, என் மாமனாகிய சுந்தரமையரின் புத்திரன் இராமனுக்கு என்னை விவாகம் செய்து கொடுப்பதாகவும் தீர்மானஞ் செய்துவிட்டார்கள். அந்தோ! தாயா ரின்னதென் றறியாப் பெண்ணுக்கு மாப்பிள்ளை தயாராயிருந்தான்.

என் குழந்தைப் பருவத்தைப்பற்றி நினைத்துப் பார்க்கும் பொழுது, எனக்கு முதல் முதல் ஞாபகத்துக்கு வருகிறது துக்ககரமானதாகவே யிருக்கிறது. என் நாலாவது வயதில் என் தாயார் இறந்துபோய் விட்டாள். அவள் குணத்தைப்பற்றிக் கேள்வியே யன்றி நானறியேன். இவ்வளவு வருஷங்களுக்குப்பின் நினைத்துப் பார்க்கும் பொழுது, அவள் பிரேதத்தை மயானத்துக்குத் தூக்கிக் கொண்டு போகையில், தூக்குபவர்களின் காலைக் கட்டிக் கொண்டு நான் அழுததும், என் தகப்பனார், கண்ணீர் பெருக, அவள் ஊருக்குப் போவதாயும், எனக்குப் பிரியமாயுள்ள பக்ஷணங்கள் வாங்கிக்கொண்டு சீக்கிரம் வந்துவிடுவாளென்றும் சொல்லி, என் கண்ணீரைத் துடைத்து, எனக்கு வாழைப்பழம் கற்கண்டு முதலியன வாங்கிக் கொடுக்கும்படி ஒருத்தியிடத்து விட்டுவிட்டுப் போனதும், ஞாபகத்துக்கு வருகின்றன. நான், அவள் வரவை யெதிர் பார்த்து, மயானத்துக்குப் போகிற வழியிலுள்ள ஆலமரத்தடியில், அடிக்கடிபோ யுட்கார்ந்துக் கொண்டிருப்பேனும். பிற்பாடு, பிறர் சொல்வதைக் கேட்டு, நானும், "அம்மாள் செத்துப்போய் விட்டாள்" என்று சொல்லத் தொடங்கி விட்டேன். அவ்வயதிலேயே தாயாரை யிழந்தமையால் நான் பட்ட கஷ்டங்களைப்பற்றி நினைக்கையில், என் மனம் பதைபதைக்கின்றது.

என் தாயார் இறக்கும் பொழுது, என் தகப்பனாருக்கு ஐம்பது வயது. அவர், இருபது வயதுள்ள வாலிபரா யிருக்கும்பொழுது நான்கு வயதுள்ள ஒருபெண்ணை விவாகஞ் செய்துகொண்டாராம். அப்பெண், பத்தாவது வயதில் வைசூரியினு லிறந்துபோய் விட்டாளாம். பிற்பாடு, அவர், என் தாயாரை மணம்புரிந்து கொண்டாராம். அவர்களிருவரும் மிகப் பிரியமுள்ளவர்களா யிருந்ததாக எங்கள் பந்துக்கள் சொல்வதுண்டு.

என் தாயாரிறந்த மறு வருஷத்தில், அவர் மற்றொரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டார். அவ்விவாகத்தைப்பற்றி, என் ஞாபகத்திலிருந்தும், பிறர் சொல்லிலிருந்தும் விவரித்துக் கூறுகிறேன். என் தமையனு

கிய சுப்பிரமணியனுக்கு விவாகம் செய்ய வேண்டு மென்று தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு பெண்ணை ஒப்பந்தஞ் செய்தார்கள். அப்பெண்ணின் தாய் தந்தையர், தாங்கள் பத்துப் பன்னிரண்டு வருஷங்களாகப் பேணி வளர்த்த தற்குக் கூலி கிடைக்கக் காலம் வந்துவிட்ட தென்று நினைத்து, நகைகளும் பணமுமாக ஆயிர ரூபா கொடுத்து விட்டால், தங்கள் பெண்ணை விற்றுவிடுவதாகச் சொன் ஞர்கள். என் தகப்பஞர் அதற்குச் சம்மதித்து, முகூர்த் தம் வைத்தபின், தனக்காஞல் பெண்வில்லை யென்ன வென்று கேட்க, அவர்கள், சமயத்தைத் தப்பவிடக்கூடா தென்றெண்ணி, விசனத்தையடைந்த தங்கள் பெண் மன தைத்தேற்றித், தங்களுக்கு இரண்டாயிர ரூபா கொடுத்து விடவேண்டு மென்றும், தங்கள் பெண் பெயருக்கு அவ்வ ளவு விலையுள்ள நிலங்களை யெழுதிவைத்துவிட வேண்டு மென்றும் சொல்ல, அப்படியே, அதே முகூர்த்தத்தில், மருமகளாக விருந்தவள் மனைவி யாகி விட்டாள். இதைச் சொல்லும் பொழுது எனக்கு விசனமும் வெட்கமும் பொறுக்க முடியவில்லை.

அதே வருஷத்தில், எனக்கும் என் தமையனுக்கும் கலியாணம் செய்துவிடுவதாக யோசித்து, அவனுக்கு வேறொரு பெண்ணைத் திட்டஞ்செய்து, முகூர்த்த தினத் தைக் குறித்தான பின், கலியாணத்துக்கு வேண்டிய முயற்சிக ளெல்லாஞ் செய்து கொண்டிருக்கையில், என் கணவஞக நியமிக்கப்பட்டிருந்த இராமன் என்பவன், ஆற் றில் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, திடீ ரென்று வந்த வெள்ளத்தா விழுத்துக்கொண்டு போகப் பட்டு, இறந்ததாகக் கடிதம் வந்தது. எனக்கு அதைப் பற்றி நினைக்கும் பொழு தெல்லாம் மனம் பதறுகிறது.

கலியாணம் நடக்கவில்லை. என் தமையனும் வரியூ ருக்குப் படிக்கப் போய் விட்டான்.

எனக்கு ஆறு வயதாகும் பொழுது, என் மாற்றுத் தாயாராகிய தஞ்சாவூர்ப்பெண் எங்கள் வீட்டுக்கு வந் தாள். அவளுக்கு அப்பொழுது பதின்மூன்று வயது.

அவள் அழகுள்ள பெண்; தணிந்த விலையுள்ள சேலைகள் கட்டிக் கொள்ள மாட்டாள். தன்னைச் சிங்காரஞ் செய்து கொள்வதில் மிக்க விருப்பமுடையவள். நடையுடை பாவனைகளெல்லாம் புதுமாதிரியாகவே யிருந்தன. அவளுக்கு எழுத வாசிக்கத் தெரியும். வந்து சில நாள்களுக்குள் அவள் குணம் வெளிப்பட்டது. தானே வீட்டில் ஏகாந்தமாய் ஆளவேண்டுமென்ற எண்ணத்துடன், என் தாய் இறந்த நாள் முதல் வீட்டுவேலைகளைப் பார்த்துக் கொண்டு என்னை அன்புடன் வளர்த்து வந்த என் அத்தையைப்பற்றித் தன் புருஷனிடத்திற் கோட்சொல்லத் தொடங்கி, சில நாட்களில் அவளைத் துரத்திவிட்டாள். அப்புண்ணியவதி, வெகு விசனத்துடன், நான் அழுவதைக் காணப்பிரியமின்றி, வெளியே விளையாடப் போயிருக்கும் பொழுது, தன்னூருக்குப் போய்விட்டாள். நான் வீட்டுக்கு வந்தவுடன், "அத்தையம்மாள் எங்கே?" என்று கேட்டேன். அதற்கு என் மாற்றாந்தாயாகிய குட்டியம்மாள் "அத்தையுமில்லை, பாட்டியுமில்லை! முண்டையொழிந்தாள்; சனியன் தொலைந்தது" என்றாள். நான் கோவென்றலறி அழுதேன். அதற்கு அவள், "என் காலின் கீழ் முட்டாதே. நீயும் எங்கே யாவது ஒழி" என்று சொல்லிக் கொண்டே என்னைப் பிடித்திழுத்து முதுகிலடித்து, வெளியே தள்ளிவிட்டாள். நான் தெருவில் விம்மி விம்மி அழுதுகொண்டு நின்றேன். அப்பொழுது என் தகப்பனார் வந்தார். அவர் ஒன்றும் கேட்கவில்லை. திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. என் துக்கம் அதிகரித்தது. அப்பொழுது தான் நான் அனாதை யென்பதை யறிந்தேன். "அம்மா செத்துப்போனாள்" என்பதின் பொருள், அப்பொழுது தான் தெரிந்தது. குளத்திற் போய் விழுந்து இறக்கலாமென்று நினைத்தேன். ஆனால் தவளை கடிக்குமே. கிணற்றிற்போய் விழுந்துவிடுவோமென்றால், ஆமை கடிக்குமே. ஒரு விஷயமும் தெரியாது; என்ன செய்கிறது? இவ்வித யோசனைகளில் அழுகை மாறிவிட்டது. பிற்பாடு என் தோழியாகிய நாணி தம்பிக்கு வைசூரி கண்டிருந்ததனால் அவள் வீட்டுக்குப்

போகக் கூடாதென்று என் அத்தையம்மாள் எனக்குச் சொல்லி யிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. வைசூரியினு லிறக்கலா மென்று நினைத்து, அங்கே போகப் புறப்பட்டேன். நாணி வீட்டு வாசலிற் போனவுடன், வேப்பிலைகள் சிதறிக் கிடப்பதைக் கண்டு பயந்து திரும்பி விட்டேன். சாயங்காலம் சாப்பாட்டு வேளை வந்தவுடன், பசி முன்னிழுக்க, வெட்கம் பின்னிழுக்க, மெள்ள மெள்ள வீட்டருகே சென்றேன். தெருத் திண்ணையில் வீற்றிருந்த என் தகப்பனார், "முத்து! உள்ளே போய்ச் சாப்பிடு" என்றார். நான் தலையைக் கவிழ்ந்து கொண்டே வீட்டுட் சென்றேன். உடனே, என் மாற்றுத் தாய், "எடுத்துப் போட்டுக் கொண்டு தின்னு" என்றாள். என் கண்களிற் கண்ணீர் ததும்பிற்று. ஒன்றுஞ் சொல்லாமல் சோற்றுப் பானையி லிருந்து எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட்ட பின், எச்சிலைச் சுத்தி செய்து விட்டுத் திகைத்து நின்றேன். பிற்பாடு குட்டியம்மாள் கோபத்துடன் சொன்னதாவது :—"வயிற்றை நிரப்பிக் கொண்டு மண்ணுருப் போல் நிற்கின்றாயே! சும்மா கள்ளக் காளை போல் திரிய நினைக்கிறாயோ? அது நடவாது. குடத்தை யெடுத்துக் கொண்டு போய் வாய்க்காலி லிருந்து தண்ணீர் மொண்டுவா" என்றாள்.

நான் அதுவரை செல்வப் பெண்ணாகவே வளர்ந்து வந்தேன். தாயில்லாப் பெண்ணானதால் யாவரும் தாய் போலிருந்தார்கள். வேலை செய்தறியேன். ஆயினும், அவளைக் கோப மூட்டப் பயந்து, குடத்தை யெடுத்துக் கொண்டு வாய்க்காலுக்குச் சென்றேன். தண்ணீர் மொண்டான வுடன், குடத்தைத் தூக்க முடியவில்லை. வயதான பெண்பிள்ளை. பொருத்தி யிரக்கப் பட்டுக் குடத்தை யிடுப்பில் தூக்கி வைத்தாள். நான் அடிமே லடிவைத்து வருத்தத் துடன் நடந்து வரும் பொழுது, அத்தையம் மாளைப் பற்றி நினைக்கக், குடம் கைதவறிக் கீழே விழுந்து விட்டது. திரும்பவும் வாய்க்காலுக்குச் சென்று நீர் மொண்டு கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். குட்டியம் மாள் "இவ்வளவு நேர மென்ன?" என்று வினவ, நான்

நடந்ததைச் சொன்னேன். உடனே, அவள், ஆவலுடன் குடத்தைத் திருப்பிப் பார்க்க, அது அடியில் அதுங்கி யிருந்தது. நானதைப் பார்க்க வில்லை. அதற்காக அவ ளென்னை யடித்துத் திட்டினாள். நான் மனத்திற்குள் வைது கொண்டேனே யொழிய, ஒன்றுஞ் சொல்ல வில்லை. அன்று முதல், வர வர, அடிகளும் குட்டுக்களும் கிள்ளுக் களும் வசவுகளும் சகஜமாய் விட்டன. அவை யில்லா நாள் அரிதாய் விட்டது. நான் கஷ்டப் பட்டதோடு தீர்ந்து விட்டதா? அவள் மூலமாய் என் தகப்பனார் பட்ட கஷ்டத்தை என்னென்று சொல்லுவேன்.

என் அத்தை யம்மாளைத் தூரத்தியான பின், குட்டி யம்மாள் ஊருக்குக் கடிதம் எழுதினாள். அடுத்த வாரத் தில், அவளுடைய தாய் தந்தையர்களும், உடன் பிறந்த வர்களும் வந்து சேர்ந்தார்கள். அவள் தாய் ஒரு கொடிய நீலி. பொல்லாத சூதுக்காரி. ஒருவருக்கும் பயப்பட மாட்டாள். அவள் நினைத்ததை எதிர்க்க ஒருவரும் துணிய மாட்டார்கள். சாந்த குணமுள்ள அவளுடைய கணவர், அவள் முன்பு, பூனையைக் கண்ட எலிபோற் பதறி நடப் பார். அவளுடைய குழந்தைகளோ, அம்மா சொல் தட்ட மாட்டார்கள். அவர்கள் தங்கள் மகளைப் பார்த் துப் போக வந்தார்க ளென்று, நான் நினைத்திருந்தேன். அப்படி யன்று; மறுநாள் நடந்த சம்பாஷணையால், வந்த கருத்து வெளிப் பட்டது.

சாயங்காலம் நாங்கள் எல்லோரும் சமையல் அறைப் பக்கத்தில் தலை வாரிக் கொண்டு உட்கார்ந் திருந்தோம். என் தகப்பனாரும், குட்டி யம்மாளின் தகப்பனாரும், நாங் கள் இருந்த இடத்தி லிருந்தே அவர்களுடன் பேசும் படிக்கு, நடையில் உட்கார்ந்து கொண் டிருந்தார்கள். குட்டி யம்மாளின் தாயாகிய விசாலாக்ஷி அம்மாள் பேசத் தொடங்கினாள் :—

"என் காணும் மாப்பிள்ளை! இப்பொழுது தங்கம் விலை யென்ன ?"

"பவுன் பதினைந்து ரூபா; விலை உயரலாம்; இறங்குவதற்கு இடமில்லை" என்றார், என் தகப்பனார்.

விசாலாக்ஷி :—" ஆனால் உயர்வதற்கு முன்பாக நம்ம குட்டிக்கு ஒரு பவுன் மாலை செய்து போடவேண்டும். வெறும் கழுத்து விகாரமா யிருக்கிறது, எங்கள் ஊர்த் தட்டான் நல்ல வேலைக்காரன். நகைகள் வெகு நேர்த்தியாய்ச் செய்கிறான். சங்கரையர் பெண் காமாக்ஷிக்கு அறுநூறு ரூபாவுக்கு ஒரு பவுன் மாலை அவள் புருஷன் செய்து போட் டிருக்கிறான். அவனுக்கு மாதம் மூந்நூறு ரூபா கிடைக்கிறது." பெருமூச்சு விட்டுக் கொண்டு: "இம்! இவளை முதலில் அவனுக்குக் கேட்டார்கள். அதிர்ஷ்டம் வேண்டாமா? இனி மேற் சொல்லிக் கதை என்ன? என்னிடத்தில் அறுநூறு ரூபா கொடும், நான் செய்து அனுப்புகிறேன்."

என்தகப்பனார் :—" இரண்டு மூன்று வருஷம் கழித்துப் பார்ப்போம். முத்துவுக்கும் சுப்பிரமணியனுக்கும் கலியாணம் செய்ய வேண்டி யிருக்கிறது. பணமோ கையி லில்லை. இந்தச் சமயத்தில் நான் அறுநூறு ரூபாவுக்கு எங்கே போகட்டும்? அன்றியும், என் தரத்துக்கு, அறுநூறு ரூபாவுக்குப் பவுன் மாலை செய்தால் ஊரார் கை தட்டிச் சிரிப்பார்கள். பண்ணைக் கேசவையர் பெண்ணுக்குக் கூட மொத்தம் அறுநூறு ரூபாவுக்கு நகை யில்லையே. அப்படி யிருக்க—"

விசாலாக்ஷி :—" அப்படியு மிருந்தது, இப்படியு மிருந்தது! கிடக்கிறான் கைம் பெண்டாட்டி! பண்ணையாரென்றால் எனக் கென்ன? இவனைப் போல் நூறு பண்ணையாரை நான் பார்த்திருக்கிறேன். என் குழந்தை குட்டியை விட இவன் பெண் உயர்த்தியோ? என் குழந்தை இநத வயதில் நகை யில்லாம லிருப்பதோ சரி? உம்முடைய குழந்தைகளுக்குக் கலியாணம் செய்தாலும் செய்யாமற் போனாலும் எனக் கென்ன? பவுன் மாலை இப்பொழுது செய்து தீர வேண்டும்."

என் தகப்பனார்:—"பவுன் மாலை செய்வதற்குத் தடையொன்று மில்லை. இப்பொழுது முடியா தென்று தான் சொன்னேன். சர்க்கார்த் தீர்வை கூடச் செலுத்தி யாக வில்லை" என்றார். உடனே குட்டி யம்மாளின் தமக்கை யொருத்தி சொன்னதாவது:—"அம்மா; வீண் பேச்சுப் பேசுவதேன்? நான் அப்பொழுதே சொல்ல வில்லையா? இவர்கள் வீட்டுக்குக் காளை போல் உழைப்ப தற்கு நம்ம குட்டியை விட்டு விட்டோம். அவளுக்கேது நகை? சோறு போட்டாற் போதாதா? செல்லக் குழந்தை சுப்பிரமணியனுக்கு அருமைக் கலியாணம் செய்ய வேண்டாமா?" என்று கொடுமையாய்ச் சொன்னாள்.

என் தமயனைத் தூஷித்தவுடன், அடங்காக் கண்ணீர் பெருக, நான், கோபத்துடன், முன்பின் யோசியாமற் சொன்னதாவது:—"சுப்பிரமணியன் எங்களுக்கு அருமை தான். அவன் எங்கேயோ போய் வாசித்துக் கொண் டிருக்கிறான். அவனைப் பற்றி யேன் பேசுகிறீர்கள்?" என்றேன். உடனே விசாலாக்ஷி யம்மாள், அன்பாய்ப் பேசுவது போல், "அம்மா! தங்கப் பெண்ணே! முத்து மீனாக்ஷி! நீயும் அருமை தானே?" யென்று கேட்க, குட்டி யம்மாள், "சீ! சீ! அவள் எருமை" என்றாள். எனக்குக் கோபமும் வெட்கமும் அதிகரிக்க, நான் சொன்னதாவது:—"நானும் அருமையாய்த்தான் வளர்ந்து வந்தேன். உங்கள் பெண் இந்த வீட்டுள் காலெடுத்து வைத்த நாள் முதல், கலகமே தவிர வேறில்லை. அவள் தான் என் அத்தை யம்மாளையும் துரத்தி, என் அருமை யையும் கெடுத்தாள். அவளை விட அருமையாகத் தான் என்னை வளர்த்து வந்தார்கள். தேவடியாள் மினுக்கு மினுக்கிப் பெண்களை விற்பது எங்களுக்குத் தெரியாது." என் தகப்பனார், "வாயை மூடிக் கொண்டிரு" என்று கோபமாய்ச் சொன்னார். மற்றவர்கள் எல்லோரும், "முத்தம்மாளை விற்றால் உழக்குத் தவிடு கூடக் கிடைக் காது" என்றும், "மாட்டுக்குப் புல்லறுக்கக் கூட உதவ மாட்டாள்" என்றும், "அவளேன் புல்லறுக்க வேணும்?

இராணி மகன் அவளைத் தான் கலியாணம் செய்து கொள்ள விரும்புவ தாக இன்று கடிதம் வந்திருக்கிறது" என்றும், "சீ! உனக்குத் தெரியாது, இராணி மகனுக்குக் கலியாணம் ஆய்விட்டது, பொய் சொல்லாதே; இராணி பேரனுக்குத் தான் இவளைக் கலியாணம் செய்து கொடுக்கப் போகிறார்கள்" என்றும், பல விதமாய்க் கேலி பண்ணிக் கொண் டிருந்தார்கள். நானோ ஒரு மூலையில் அழுது கொண்டு நின்றேன். என் தகப்பனார் தலையைக் கவிழ்ந்து கொண்டு உட்கார்ந் திருந்தார்.

கொஞ்ச நேரத்துக்குப் பின், விசாலாக்ஷி யம்மாள் மறுபடியுஞ் சொன்னதாவது:—"மாப்பிள்ளை! இதெல்லா மிருக்கட்டும்; நீர் பணம் தர வேண்டாம். கலியாணத் துக்கு முன், என் பெண் பெயருக்கு இரண்டாயிர ரூபா விலை யுள்ள நிலம் எழுதி வைத்தீரே; அந்த நிலத்தின் இது வரை யுள்ள வருமானத்தைக் கொடும். அதைக் கொண்டு பவுன் மாலை செய்து கொள்ளுகிறோம்."

என் தகப்பனார்:—"அந்த நில வருமானத்தை நீக்கி விட்டால், சோற்றுக்குக் கூடப் போதாதே" என்று, கண்ணீர் ததும்பச் சொன்னார்.

விசாலாக்ஷி:—"அடி செருப்பாலே, ஆற்றுக்கு அப் பாலே! நன்றாய்ச் சொன்னாய்! சோற்றுக் கில்லாத கைம் பெண்டாட்டிக்கு மூன்றாம் கலியாணம் ஏனோ? இவனுக் கோ என் பெண்மணியைக் கொடுத்தேன்! கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனை? என் பெண் உனக்குச் சோ றும் போட்டுக் கொண்டு, அடியும் பட்டுக் கொண் டிருப்பா ளென்று நினைத்தாயோ? சென்ற செவ்வாய்க் கிழமை இராத்திரி ஏன் அடித்தாய்?" என்று கேட்டாள்.

[அடித்த சங்கதி எனக்கு அதுவரையும் தெரியாது.]

என் தகப்பனார்:—உங்கள் பெண்ணிடத்திலேயே கேளுங்கள். நான் சாயங்காலம் கொல்லை வழியாய் வரும் பொழுது, கிணற்றுப் பாத்திக்குப் பக்கத்தில் இவள் இராமைய ருடன் பேசிக்கொண் டிருந்தாள். இராமைய ருடைய

குணம் உங்களுக்குத் தெரியாது. அவர் கெட்ட நடத்தை யுள்ள துஷ்டர். இந்த ஊர்க் குலப் பெண்கள் ஒருவரும் அவருடன் பேச மாட்டார்கள். யோக்கியர்கள் அவரைத் தங்கள் வீட்டுக்குள் வரவொட்டார்கள். அப்படிப் பட்ட மனித னிடத்தில், அயலூர்ப் பெண்ணாகிய இவள் பேசிக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டவுடன், இராமையர் திடுக்கிட்டு ஓடிப்போய் விட்டார். நான் இவளைக் கேட்க இராமையருக்கும் தன் தமயன் சாமிநாதனுக்கும் இஷ்ட மென்றும், ஆகையால் தஞ்சாவூரி லிருந்து கடிதம் வந்த தோ வென்று கேட்டுக்கொண் டிருந்ததாயும் சொன்னாள். நான் அதெல்லாம் கூடாதென்று சொல்ல, அவள் கேட்கா மல் தகாதபடி பேசினதினால் அடித்தேன்.

விசாலாக்ஷி :—" இந்தக் கிழட்டுப் பிணத்தைக் கட்டி யழவும் வேண்டாம்; அடிபடவும் வேண்டாம். ஒரு வேளை யில்லா விட்டால் ஒரு வேளை கொன்று விடுவன். குட்டி, உன் நிலத்தை விற்றுவிட்டு நம்மூருக்குப் போவோம் வா. இவன் எக்கேடு கெட்டாவது இராந்து குடிக்கட்டும்" என்று சொல்லிக் கொண்டே யெழுந்திருந்தாள்.

விசனகரமானதை விவரித்துக் கூற வேண்டாம். என் தகப்பனார் வியாபாரத்திற் சம்பாதித்த பொருளைக் கொண்டு வாங்கின நிலமானதால், அவர்கள் விற்றதைத் தடுக்க முடிய வில்லை. சமாதானஞ் செய்யும் பொருட்டுத் தன்னிடத்தில் வந்த ஊர்க் கிரகஸ்தர்களுக் கெல்லாம், விசாலாக்ஷி யம்மாள், தன் மகளை விட்டு விட்டுப் போனால் என் தகப்பனார் அவளைக் கொன்றுவிடுவா ரென்று போக் குச் சொல்லி விட்டு, நிலம் விற்ற பணத்தை யெடுத்துக் கொண்டு, தன் மகளையுங் கூட்டிக் கொண்டு, தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தாள்.

குட்டி யம்மாள் போகவே, என் அத்தை யம்மாள் வந்தாள். அவள் வந்தவுடன் என்னை மார்போடணைத்துக் கொண்டு அழுகையில், எனக்கு ஆநந்தக் கண்ணீர் பெரு கிற்று. ஆனால், என் தகப்பனாரோ, அது முதல் தீராத துக்கத்தில் ஆழ்ந்திருந்தார். வெளியே போகிறதே யில்லை. தாம் பாடு பட்டுத் தேடிய பொருளும், தாம் ஆசைப் பட்ட

பெண்டாட்டியும் போனது மன்றி, அவமானமும் தரித்திரமும் வந்து சேர்ந்தன. அவர் முக்காடு போட்டுக் கொண்டு படுத்திருக்கும் பொழுதாவது, அல்லது தலையைக் கவிழ்ந்து கொண்டு பெருமூச் செறியும் பொழுதாவது அவரைப் பார்த்தால், எனக்குக் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிவிடும். ஐயோ! இறந்து போன தாயாருக்குத் துக்கப் பட்டதைப் பார்க்கிலும், உயிரோ டிருந்த தகப்பனாருக்கு நான் அதிகமாய்த் துக்கப் பட்டேன்.

குட்டி யம்மாள் வந்து கொஞ்ச நாள் முதல், அவர் என்னிடத்தில் அதிகமாய்ப் பேசுகிற தில்லை. அவள் போன பின்பும், துக்கத்தினாலும், அவளால் நான் பட்ட கஷ்டங்களை நினைத்தும், முன் போலவே, கொஞ்சி விளையாடிப் பேசாம லிருந்தார். ஒரு நாள் அவருக்கு ஒரு கடிதம் வந்தது. நான் தபாற்கார னிடத்தி லிருந்து அதை வாங்கி அவர் கையிற் கொடுத்து விட்டு, மூக்குக் கண்ணாடியுங் கொண்டு வந்து கொடுத்தேன். அவர் அதை வாசித்து விட்டுக் கீழே யெறிந்தார். நான் பதறிக் கொஞ்ச தூரத்தில் நின்றேன். அவர் அதை மறுபடியும் எடுத்து வாசித்து, முன் போலவே யெறிந்து விட்டு, கைகளால் தலையைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந் திருந்தார். நான் அவருக்குக் கண்ணீர் பெருகுவதை யறிந்தேன். எனக்கும் கண்ணீர் பெருகிற்று. அவர் பெரு மூச்சு விடுவதை யென்னாற் பொறுக்க முடிய வில்லை. நான் கடிதத்தை மறந்து விட்டேன். அவரைக் கட்டிக் கொண்டால் துக்கம் தணியு மென்று நினைத்தேன். உடனே ஓடிப் போய் அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டேன். இருவரும் ஒன்றுஞ் சொல்லாமல் விசித்து விசித்து அழுதோம். அவர் தம் மார்போடு என்னை யிறுகத் தழுவிக் கொண்டார். கொஞ்ச நேரத்துக்குப் பின் நான் அழுது கொண்டே சொன்னதாவது :—“ அப்பா ! நீர் ஏன் விசனப் படுகிறீர் ? நீரே விசனப் பட்டால் நான் என்ன செய்வேன் ? அத்தையம்மாள், குட்டியம் மாளால் தரித்திரம் வந்த தென்று சொன்னாள். நமக்குச் சாப்பாட்டுக்குக் காணாதா ? கொல்லம் வியாபாரத்திற் கிடைக்கும் பணம் நமக்குப் போது

மே. எங்கள் கலியாணத்திற் கென்ன; என்னைக் கன்னிகா தானம் செய்ய வேண்டாம்; எனக்கு ரூபா வாங்கினால், அதுவே என் கலியாணச் செலவுக்கும், அண்ணா கலியாணத்திற்கும் போதும். பிற்பாடு அவன் சம்பாதிக்க மாட்டானா? நீர் வீணாய் மனதைப் புண் படுத்திக் கொள்ள வேண்டாம்'' என்றேன். அவர் என்னை முன்னிலும் இறுகத் தழுவிக் கொண்டு அதிகமாய் அழுதாரே யொழிய, ஒன்றுஞ் சொல்ல வில்லை. அதற்குள் அத்தை யம்மாள் வாய்க்காலி லிருந்து வந்து சேர்ந்தாள். அவள் எங்களிருவரையும் பார்த்த வுடன் மனம் நடுங்கி, "அப்பா! சங்கரா! என்ன விசேஷம்? ஏது கடிதம்? குழந்தை மணியன் சௌக்கியமோ?'' என்று கேட்டாள். எனக்கு அப்பொழுது தான் கடிதம் ஞாபகத்திற்கு வந்தது. என் தகப்பனார் பதிற் சொல்வதற்கு முன், ஒரு நிமிஷத்தில் என் மனம் பட்ட துன்பம் சொல்ல முடியாது. அவர் மறுமொழி, நடுக் காட்டில் தாகத்தினாற் களைத்து விழுந்த பிரயாணிக்குத் தண்ணீர் எப்படி யிருக்குமோ, அப்படி யெனக் கிருந்தது. அவர் சொன்னதாவது:—"குழந்தை சௌக்கியமா யிருக்கிறான். கொல்லம் வியாபாரம் முழுகிப் போய் விட்டதாய்க் கடிதம் வந்திருக்கிறது. சொற்ப வருமானமும் போயிற்று. இந்த வீடும், ஒரு சிறு வயலுந் தான் மிச்சம். ஐயோ! என் குழந்தைகள் என்ன செய்வார்கள்?'' என்று நெற்றியிற் புடைத்துக் கொண்டு, கீழே சாய்ந்து விழுந்து விட்டார்.

இரண்டாம் அதிகாரம்.

கொல்லத்துக் கடிதம் வந்து நாலு வாரத்திற்குள் நாங்கள் இராமாபுரத்தை விட்டு வரியூருக்கு வந்து விட்டோம்: எங்கள் குடும்பத்துக்கு அவ்வூரில் நேர்ந்த பல துர்ப் பாக்கியங்களினாலும், என் தமையன் கல்விப் பயிற்சிக்கும் எங்கள் விவாகத்துக்கும் வேண்டிய பணத்தை யெவ்வித மாவது தேட விரும்பியும், என் தந்தை வெளியூர் சேர நிச்சயித்தார். அவருக்குச் சுபாவமாகவே யுள்ள

கர்வம் அதிஷ்டக் கேட்டால் அதிகரித்துக், தமக்கு ஆறுதல் சொல்ல வந்த இஷ்டர்களைத், தம்மைக் கேலி பண்ண வந்தவர்களாக வெறுக்கத் தொடங்கினர். இவ்விதக் கோபம் வரவரப் பொறுக்க முடியாததாக, எவ்விதமேனும் பணஞ் சம்பாதிக்க வேண்டுமென்ற பேராசை அவர் மனத்திற் குடி கொண்டது. அவர் எங்களுடன் சரியானபடி பேசுகிறதில்லை; நன்றாய்ச் சாப்பிடுகிறது மில்லை. எப்பொழுதும் தலையுங் கையுமாய் ஆலோசனையிலாழ்ந்திருந்தார்.

இவ்விதம் இரண்டு வாரங் கழிந்த பின்பு, அவர், ஒரு நாள் என் அத்தையிடத்திற் சொன்னதாவது:—"சங்கரீ! நான் சொல்வதை ஊடே தடுக்காமற் கேள். இந்த வீட்டையும், மீந்த வயலையும் விற்று விடப் போகிறேன். இவ்வூரில் இனிமேல் என்னால் இருக்க முடியாது. குழந்தைகள் உன்னுடன் வரியூரிலிருக்கட்டும். அவர்களுடைய சாப்பாட்டுச் செலவுக்கு நான் பண மனுப்புகிறேன். மணியனுக்குப் பள்ளிக் கூடச் சம்பளம் இல்லாமற் செய்ய முயற்சிக்க வேண்டும். ஆனால்—" "நீர் எங்கே போகிறீர்?" என்று நான் கேட்டேன். அவர் உடனே:—"பேசாதே, முத்து! சங்கரீ கேள்: நான் திருவனந்தபுரத்துக்குப் போகிறேன். நிலம் விற்ற பணம் உன்னிட மிருக்கட்டும். அதைக் கொண்டு எப்படியாவது முத்துவுக்குக் கலியாணத்தை முடித்து விடு; மணியனுக்குப் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்" என்றார். என் அத்தையம்மாள், தன்னாலின மட்டும் அவர் திருவனந்தபுரத்திற்குப் போகக் கூடாதென்றும், பிள்ளை யிருக்கும்பொழுது வயலை விற்றாலும் வீட்டை விற்கக் கூடாதென்றும், அவர் விருத்தாப்பிய காலத்தில் ஓரிடத்திற்கும் போகாமல், தன் கஞ்சியைப் பங்கிட்டுக் குடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும், பலவிதமாய்ச் சொல்லியும், நான் கூடத் திருவனந்தபுரத்திற்குப் போவேனென் றழுதும், ஒன்றும் பயன்படவில்லை. அவர் வீட்டையும் வயலையும் விற்றுப் பணத்தை என் அத்தை கையிற் கொடுத்து, என்னை யவளுடன் அனுப்பிவிட்டுத், தாம் வரியூருக்கு எங்களுடன் வந்து என்

தமயனைக் கூடப் பாராமல், நேராகத் திருவநந்தபுரத் திற்குப் போய் விட்டார்.

எங்கள் குடும்பத்துக்கு வந்த துர்ப்பாக்கியம், எனக்கு நல்லதாகவே யிருந்தது. என் அத்தை யம்மாள் என்னை யும் என் தமயனையும் மிக்க அன்புடன் நடத்தி வந்தாள். என் தமயன் கூட இருந்ததனால் நான் அளவற்ற மன மகிழ்ச்சியை யடைந்தேன். என் சிறிய இருதயத்தி லுள்ள ஆசையை யெல்லாம் அவன் பேரிலும், என் அத்தை பேரிலுஞ் செலுத்தினேன். அத்தை யம்மா ளிடத்தில் வீட்டு வேலை கற்றுக் கொள்வதிலும், என் தமயன் வாசிப்பதைப் பார்த்துக் கொண் டிருப்பதிலும், நான் சந்தோஷத்தை யடைந்தேன். என் அத்தையம்மாளை விட அன்புளவர்களும், என் தமயனிலும் படிப்பில் தேர்ந்தவர்களும், எங்கும் கிடையா தென்பது என் எண் ணம். கதைப் புஸ்தகங்களைத் தான் வாசித்த பின், மணியன் எனக்குச் சொல்லுங் கதைகளைக் கேட்டு, எனக்குப் படிப்பில் ஆசை யுண்டாயிற்று. ஆனால், பெண்கள் படிப்பதை நான் அப்பொழுது பார்த்ததில்லை.

மணியனுக்குச் சுந்தரேசன் என்றொரு சிநேகித னிருந்தான். அவனும் மணியனும் பள்ளிக் கூடத்தில் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பிரிகிறதே யில்லை. அவர்க ளிருவரு மொன்றாய் வாசித்து, எங்கள் வீட்டிலேயே படுத்துக் கொள்வது வழக்கம். அவனுக் குக் கலியாணம் முடியவில்லை. என் அத்தை யம்மாள், என்னை அவனுக்குக் கலியாணஞ் செய்யலா மென்று வேடிக்கையாய்ச் சொல்வ துண்டு. அவனும், வேடிக்கை யாய், என்னைப் "பெண்டாட்டி" என்றழைப்பான். அவ னுக்கும் மணியனுக்குஞ் சமவயது. ஒரு நாள் அவர்கள் ஒரு இங்கிலீஷ் புஸ்தகம் வாசித்துக் கொண் டிருந்தார் கள். அவர்களுடைய சந்தோஷத்தையும், சிரிப்பையும்; அவர்கள் சில பாகங்களைக் கோபத் தொனியிலுஞ், சில பாகங்களை இரக்கத் தொனியிலுஞ், சில பாகங்களை உரத் துப் பிரசங்கிப்பது போலும், வாசிப்பதையும்; சில சம யங்களில் அப் புஸ்தக மெழுதினவரைப் பற்றிப் புகழ்

வதையும் பார்த்து, நான் திறந்த வாயுடனும் விரிந்த கண்களுடனும் ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் கொஞ்சம் நிறுத்தின வுடன், "என்ன வாசிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். உடனே சுந்தரேசன் சொன்னதாவது:—"நீங்களும் பெண்களென் றிருக்கிறீர்களே! நன்றாய்ச் சட்டி சுறண்டுவீர்கள். அதற்குத் தான் பிரயோசனப் படுவீர்கள். பெண்ணென் றிருந்தால், ஐடாவைப்போ லிருக்க வேண்டும். ஓ! ஐடா! ஐடா!—முத்து மீனாக்ஷீ! நானினிமேல் உன்னைப் 'பெண்டாட்டி' என்று கூப்பிட மாட்டேன். நீயும் ஐடா வைப் போல் ஆனால் தான் நானுன்னைக் கலியாணஞ் செய்து கொள்வேன்" என்று என் முதுகில் தட்டினான். அவன் கலியாணம் என்று சொல்வது வேடிக்கை யாகத்தா னென்று எனக்குத் தெரியும். ஆனால், அவன் வழக்கம் போல் அழையாமல், என் பெயரா லழைத்தது என் காதுக்கு விரோதமாயிருந்தது. எனக்குத் தன்னை யறியாமல் துக்க முண்டாயிற்று. மணம் புரிந்திருந்த புருஷனை யிழந்தது போல் நினைத்தேன். அடங்காத துக்கத்துடன், "'ஐடா' வென்றாலென்ன?" என்று கேட்டேன். அதற்கு அவன் பதிற் சொன்னதாவது:—

"ஓர் அரசனுக்கு ஐடா என்றொரு புத்திரி யிருந்தாள். உன்னைப்போ லிருக்கும் பொழுதே, அவளை அயல் தேசத்து இராச புத்திரனுக்குப் பிற்பாடு கலியாணஞ் செய்து கொடுப்பதாக, அவ்வரசன் வாக்குக் கொடுத் திருந்தான். உன் அத்தை எனக்குச் சொல்வது போலன்று. கள்ளச் சிறுக்கி! உன்னை எவன் கலியாணஞ் செய்து கொள்ளப் போகிறானே! ஒருவன் வருகிறவரையுமாவது, நான் 'பெண்டாட்டி' யென்று கூப்பிட்டுக் கொண் டிருக்கிறேன். ஆனால், ஐடா வை நிச்சயமாக அவ் விராச குமாரனுக்கே கொடுப்பதாகத் தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஐடா கல்வியில் தேர்ச்சி யடைந்தாள். தக்க வயது வந்தவுடன், அந்தக் கலியாணத்துக் கிசையாமல், பெண்பிள்ளைகளைப் புருஷர்கள் தங்கள் அடிமைகளைப் போல நடத்துவதை வெறுத்து, அவ் விழிவான

நிலைமையி னின்றும் மாதர்களை விடுவிக்கும் பொருட்டு ஒரு சர்வகலாசாலையை யேற்படுத்தினாள். அப் பள்ளிக் கூடத்துக்குள் புருஷர்களை விடுகிறதே யில்லை. வாத்தி யார் வேலை முதல் நிலம் உழுகிற வேலை வரையும், எல்லா வற்றையும் பெண்பிள்ளைகளே பார்த்து வந்தார்கள். ஆனால் அவ்விராச குமாரனே, பாலிய மோகத்தால் வருத்த மடைந்து, வேறு வழி யின்றி, இரண்டு சிநேகிதர் களுடன் பெண் வேஷம் பூண்டு, கற்க விரும்புவார் போல் அப் பள்ளிக் கூடத்துக்குட் சென்றான். ஐடாவைக் கண்ட மாத்திரத்தில், அவன் ஆசை அளவின்றிப் பெரு கிற்று. கடைசியாய், மூவர்களுடைய பாசாங்கும் கண்டு பிடிக்கப் பட்டு, அவர்கள் வெளியே துரத்தப் பட்டார்கள். அதன் பின், ஐடாவைத் தொந்தரவு செய்ததற்காக, அவளுடைய சகோதரர் புரிந்த சண்டையில், அவ்விராச குமாரன் காயங்களால் மூர்ச்சித்தான். வெட்டுண்டவர் கள் பள்ளிக் கூடத்துக்குள் எடுத்துக் கொண்டு போகப் பட்டு, அங்கேயே சொஸ்தப் படுத்தப் பட்டார்கள். இராசகுமாரனை, ஐடாவே சொஸ்தப் படுத்தினாள். ஐடா, புருஷரை முற்றிலும் வேறாகப் பிரித்தது இயற் கைக்கு விரோதமான தென்றும், பெண்களின் நிலைமை யை விருத்தி செய்ய வேண்டியது முக்கியமா யிருந்தா லும், அதன் பொருட்டுக் காதலைப் பழித்தல் சரியல்ல வென்றும், பெண்களின் நிலைமையை விருத்தி செய்யாமல் புருஷர்கள் மாத்திரம் விருத்தி யடைவது முடியாத காரிய மென்றும், அக்காலத்தில் தான் அறிந்தாள். அவ்விராச குமாரன் பிழைக்கும் பொருட்டு, அவனுக்கு ஓர் அமிர்த சஞ்சீவி கொடுத்தாள். அதென்ன வெனில், அவள் அவனைக் கலியாணஞ் செய்து கொண்டாள். பெண் டாட்டி! நான் சொல்லுகிறது அவ்வளவு நன்றா யிராது. இங்கிலீஷில் வாசித்தால், இக்கதையின் அழகு வெளிப் படும். இந்த ஜன்மத்தில் நீ யிதைப் போன்ற புஸ்தகங் களின் இன்பத்தை அநுபவிக்கப் போகிற தில்லை. நீ கொடுத்து வைத்தது இவ்வளவு தான்" என்று, விசனத் துடன் சொன்னான்.

உடனே நான் :—" தமிழே தெரியாது. நீங்கள் சொல்லிக் கொடுக்கா விட்டால் எங்களுக்கு எப்படித் தெரியும் ?" என்றேன்.

அதற்கு அவன் :—" இன்று முதல் நீ படிக்கிறதா யிருந்தால் நான் சொல்லித் தருகிறேன் " என்றான்.

என் தமயன் :— சுந்து ! நேற்று நீ ' சிறுவர் சங்கத்'துக்கு வரவில்லையே. 'பெண் கல்வி' யைப் பற்றி ஒரு தர்க்கம் நடந்தது. பெண்களைக் கற்பித்தால் அவர்கள் காகித மூலமாய்ச் சோர நாயகர்களைத் தேடுவார்களென்றும், தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப் படிந்து நடக்க மாட்டார்களென்றும், வீட்டு வேலை செய்ய மாட்டார்களென்றும், உத்தியோகஞ் செய்யப் போகாதவர்களுக்குப் படிப்பு ஆவசியக மில்லையென்றும், நம்முடைய பாட்டியார்கள் படிக்க வில்லையென்றும் கணபதி வாதாடினான். அதற்கு நீ யென்ன சொல்லுகிறாய் ?

சுந்தரேசன் :— ஓஹோ ! அப்படியா ? நானில்லாமற் போனேனே. நான் சொல்வதைக் கேள். பெண்டாட்டி ! நீயுங் கேள். கற்றிருந்தால் சோர நாயகர்களைத் தேடுவார்களென்பது வீண் பேச்சு. தங்கள் நாயகர்கள்மேல் இஷ்டமில்லாத பெண்கள், மூடர்களா யிருந்தால், ஒரு வேளை வேறு புருஷர்களைத் தேடுவார்கள். ஆனால், சரியாய்க் கற்றுணர்ந்தவர்கள் ஒரு பொழுதும் அப்படிச் செய்ய மாட்டார்கள். கல்வியும் நாணத்தைப் போல் ஒரு கவசமாகிவிடும். அன்றியும், எழுதத் தெரியாத ஒரு குறையினால் மாத்திரம் வேறு நாயகனைத் தேடாம லிருக்கும் மனைவி இருந் தென்ன, இறந் தென்ன ? அது வீண் முகாந்தரமே. கற்றிருந்தால் வீட்டு வேலை செய்யக் கூடாதா ? தன் வீட்டில் வேலை செய்தல் ஊழியமாகுமோ ? அவ் வெண்ணம் அற்பப் படிப்பைச் சேர்ந்தது. கல்வி, பணம் சம்பாதிக்கும் பொருட்டுத்தா னென்பது மூடத்தனம். பணத்தினும் கல்வி சிறந்ததல்லவா ? அன்றியும், புத்திரர்கள் சிறந்த புத்தி யுள்ளவர்களா யிருக்க வேண்டுமாயின், தாய் தந்தையர்களும் அப்படி யிருந்தாலன்றோ

கூடும்? பாறையின் மேல் நெல் விளையுமோ? உழுது உர மிடப் பட்ட நில மன்றோ வேண்டும்?

மணியன்:— சரி: மற்ற முகாந்தரங் களுக்கு என்ன சொல்கிறாய்?

சுந்தரேசன்:—"பெண்கள் கீழ்ப்படிய மாட்டார்களென்பது வீண். சரியான காத லிருந்தால் அவ்வெண்ணமே யுண்டாகாது. அவர்க ளென்ன அடிமைகளா? இருவர் மனமும் ஒத்தலன்றோ சரி? அதற்குக் கல்வி முக்கியமானது. அதில்லாம லுண்டாகும் கீழ்ப்படிதல், பயத்தினாலும், வழக்கத்தினாலு முண்டாவதே; மன விருப்பத்தினாலுண்டாவ தன்று. புருஷனும் தக்கவனாயிருக்க வேண்டும். நேசமிருந்தால் மற்றவை யெல்லாம் தானே வரும். நமது பாட்டியார் படிக்க வில்லை யென்பதைக் கேட்க எனக்குச் சிரிப்பு வருகிறது. முற்காலத்திற் பெண்கள் கல்வித் தேர்ச்சியடைந்திருந்தார்களென்பதற்கு அநேக ஆதாரங்களிருக்கின்றன. அப்படி யில்லாவிட்டாலுந்தா னென்ன? முன்னோர்கள் மூடர்களா யிருந்தால் நாமும் அப்படியே யிருக்க வேண்டுமா? இதென்ன புதுமை!

"தம்மில் தம்மக்கள் அறிவுடைமை, மா நிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்று குறளிற் சொல்லி யிருப்பதாக நம் தமிழ் வாத்தியார் அன்று சொல்ல விலலையா? அது பெண்களுக்கும் பொருந்தாதா? அவ்வெண்ண மிருந்தால் 'அபிவிருத்தி' யென்று சொல்லே வேண்டாம்" என்றான்.

அன்று முதல், சுந்தரேசன் எனக்குத் தமிழும் கணக்கும் கற்பித்து வந்தான். அது கூடாதென்று என் அத்தை முரண்டவில்லை. முதலிற் படிப்பது வருத்தமா யிருந்தது. என் தமயன், "உனக்கு மூளை யில்லை. அதற்குப் பதிலாய்க் களிமண்தா னிருக்கிறது" என்று அடிக்கடி சொல்லுவான். நான் சரியானபடி பாடஞ் சொல்லாவிட்டால், அவனுக்குக் கோபம் வந்துவிடும். புஸ்தகத்தை யெறிந்து விட்டுப் போய் விடுவான். ஆனால், சுந்தரேசன் அப்படிச் செய்கிறதில்லை. வெகு பொறுமையுடன் சொல்

வித் தருவான். அவனுக்குக் கோபமே வராது. நான் இவ் விதமாய்ப் படித்து வந்தேன்.

மேற் கூறியவற்றை, நான் அவ் வயதிலேயே முழுதும் உணர்ந்ததாகக் கொள்ளக் கூடாது. பிற்பாடு பல முறை கேட்டுணர்ந்தவற்றைத் தான் எழுதியிருக்கிறேன். ஒரு நாட் கூடத் தவறாமல், சுந்தரேசன் எனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு வந்தான். அக்காலத்தில் நான் அடைந்த திருப்தியையும் மன மகிழ்ச்சியையும் பற்றி எந்த வேளையில் நினைத்தாலும் எனக்குச் சந்தோஷம் உண்டாகின்றது; துக்கமெல்லாம் மாறிப் போய் விடுகிறது. அப்பொழுது, நான் காலையி லெழுந்தவுடன், வீட்டில் நித்தியமாய் உபயோகிக்கப் படும் பாத்திரங்களை யெடுத்துக் கொண்டு வாய்க்காலுக்குப் போய், அவைகளைச் சுத்தி செய்து, நானும் பல் தேய்த்து முகங் கழுவியான பின், வீட்டுக்குத் திரும்பி வருவேன். நான் சுத்தி செய்ததில், அந்தப் பாத்திரங்கள் எவ்வளவுக் கெவ்வளவு பிரகாசத்தை யடைந்தனவோ, அவ்வளவுக் கவ்வளவு எனக்கும் சந்தோஷ முண்டாகும். வீட்டுக்கு வந்து சாப்பிட்டுத் தலையை வாரிப் பின்னிக் கொண்டான பின், என் அத்தையம்மாளுடன் வாய்க்காலி லிருந்து நீர் மொண்டு கொண்டு வருவேன். நான் பெரிய குடத்தில் ஜலங் கொண்டு வருவதைப் பற்றிக் கர்வத்தை யடைந்திருந்தேன். நான் குதித்துக் குதித்து நடப்பதாக, என் தோழிகள் பரிகாசஞ் செய்வதுண்டு. பிற்பாடு, புஸ்தகமும் 'சிலேட்' பலகையும் எடுத்துக் கொண்டு, மாடியில் மணியனும் சுந்தரேசனும் வாசிக்கும் இடத்துக்குப் போவேன். சுந்தரேசன் எனக்கு ஒருமணி நேரம் பாடஞ் சொல்லித் தருவான். சில நாள்களில் மணியன் சொல்லித் தருவான். முந்தினநாட் பாடத்தைச் சரியாய் ஒப்புவித்து விட்ட நாள்களில், எனக்குண்டான கர்வத்தைப் பற்றி நினைக்கும் பொழுது, சிரிப்பு வருகிறது. ஒரு நாள், என் தமயன் போட்ட ஐந்து கணக்கு விஷக்களுக்கும் பிசகாமல் பதிற் சொல்லி விட்டேன். உடனே அடங்காச் சந்தோஷத்துடன் கண்டபடி குதிக்கத் தொடங்கினேன். அவன்

விளையாட்டாக :—"முத்து! 'துள்ளின மாடு பொதி சுமக்கும்.' அதிகமாய்த் துள்ளாதே. கணக்கு மட்டுந் தெரிந்தாற் போதுமா? இன்னும் 'கொன்றைவேந்தன்' ஒப்புவிக்க வில்லையே? நீ இந்தப் படிப்புக்கு இவ்வளவு துள்ளுகிறுயே; அதிகமாய்ப் படித்து விட்டால் என்ன மாய் முடியுமோ தெரிய வில்லை. உன் சித்தியைப் போல் ஆகமாட்டாயே?" என்றான். குட்டியம்மாளைப் பற்றிச் சொன்னவுடன், வெட்கத்தினால் எனக்குக் கண்ணீர்ப் பெருகிற்று. அவனுக்கு அவளை நன்றாய்த் தெரியாது. நானோ, அவளை முற்றிலும் அறிந்திருந்தேன். அவள் பெரிய புஸ்தங்களை வைத்து வாசிப்பதை நான் பார்த்திருந்தேன். அவ்வளவு கல்வியோடு அவள் செய்த விஷயங்களைப் பற்றி யோசித்த வுடன், என் கர்வம் எல்லாம் குன்றிப் போய் விட்டது. அப்பொழுது தான், இராமாபுரத்தில் சிலர், 'குட்டி யம்மாள் தனக்கு அர்த்தமாகாத புஸ்தகங்களை வாசித்துத் தெரிந்து கொள்வது போல் பாசாங்கு பண்ணுகிறுள்,' என்று சொன்னது, மெய்யாயிருக்கலா மென்று நானெண்ணினேன். படித்து விட்டால் வேறொன்றும் வேண்டா மென்ற எண்ணம் என் மனத்திற் குடிகொண் டிருந்தது. கல்வியைப் பார்க்கினும் சிறந்தது கிடையா தென்று நினைத்திருந்தேன். என் தமயனுடைய வாத்தியாருக்குத் தெரிந்த மட்டும் நானும் படிக்க வேண்டு மென்பது, என் பேராசையா யிருந்தது. அவ்வளவு வாசித்து விட்டால், பிறந்ததன் பயன் பெற்றாய் விடும் என்பது என் எண்ணம். பெரிய புஸ்தகங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம், நான் பெரு மூச்சு விடுவதுண்டு. இந்த எண்ணத்துடன் நான் சொன்னதாவது :—" அண்ணா! சித்தி மிகப் படித்தவ ளென்று நீ நினையாதே. நம்மூரார் அநேகர், அவளைப் பாசாங்குக்காரி யென்று சொன்னார்கள். மிகப் படித்தவளா யிருந்தால், அவள் அப்படி நடப்பாளா?" என்றேன். உடனே சுந்தரேசன், வாசித்துக் கொண்டிருந்த புஸ்தகத்தை மேசை மேல் எறிந்து விட்டுச் சொன்னதாவது :—

“ஓகோ! பெண்டாட்டி! உன் எண்ணம் அப்படியோ? இதற்கு முன்பும் இரண்டு மூன்று தடவை பார்த்தேன். படித்து விட்டால் சகல நற்குணங்களும் வந்து விடுமென்று நினைத்திருக்கிறாய். நம்மை யாளும் ஆங்கிலேயர் தேசத்தில் பேக்கன் என்றொரு பிரபு விருந்தார். அவர், கல்வித் தேர்ச்சியிலும் சுயபுத்தியிலும் யாவரிலுஞ் சிறந்தவரா யிருந்தார். உலகத்தில் இதுவரையும் தோன்றிய புத்திமான்கள் ஒருவரும் அவருக்கு ஈடாகாரென்று சொல்வதுண்டு. அப் பிரபு, தம் புத்தி வல்லமையினால், சிரேஷ்ட நியாயாதிபதியின் ஸ்தானத்தை யடைந்திருந்தார். அவர் அநேக பிரபந்தங்கள் இயற்றி யிருக்கிறார். ஆங்கிலேய தத்துவ சாஸ்திரத்துக்கு மூலகர்த்தராக அவரை மதிப்பதுண்டு, அவர் சந்மார்க்க நடைகளைப் பற்றி ஒரு சிறந்த பிரபந்த மெழுதி யிருக்கிறார்.” ஆனால் அப் பிரபுவே, இழிவாயும் அயோக்கியத் தனமாயும் நடந்ததற்காக, நியாயாதிபதி உத்தியோகத்தி லிருந்து தள்ளப் பட்டு, அபராதமும் போடப் பட்டார். பார்த்தாயா! அந்த மகாபண்டிதரின் கல்வி யெல்லாம் பிரயோசனப் படவில்லை. செல்வம் பொழியும் சிரேஷ்ட நியாயாதிபதி, உத்தியோகத்தி லிருந்து கொண்டே லஞ்சம் வாங்கினார். அவர் விஷயத்தில் அவரியற்றிய சந்மார்க்கப் பிரபந்தங்களெல்லாம் ‘எட்டுச் சுரைக்காய்’ ஆய் விட்டன. அவருடைய கல்வித் திறமையையும் புத்தி விசாலத்தையும் பற்றி யோசிக்கும் பொழுது, உன் படிப்பும் என் படிப்பும் எம்மட்டு? அப்படி யிருந்தும், தாழ்ந்த ஸ்திதியிலிருக்கும் கல்வி பயிற்சி யில்லாத அநேகர், தங்கள் நாணயமான செய்கைகளால், அவரை மிஞ்சி விட்டார்கள். படிக்கிறோமென்று கர்வங் கொள்ளாதே. சற்குணம் கல்வியிலுஞ் சிறந்தது. அதைத் தான் எவ்விதமாவது தேட வேண்டும். மணியா! ஒன்பது மணியாய் விட்டது. இனிமேல் ஸ்நானம் பண்ணிச் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக் கூடத்துக்குப் போக வேண்டாமா? வாய்க்காலுக்குப் போவோம் வா” என்று சொல்லிக் கொண்டே சுந்தரேசன் எழுந்திருந்தான்.

அவர்கள் பள்ளிக் கூடத்துக்குப் போயிருக்கும் வேளைகளில், நான், என் தோழிகளுடன் 'பல்லாங்குழி,' 'கட்டம்,' 'சோகி,' 'கழச்சி,' முதலியவை விளையாடுவேன்; அல்லது, என் அத்தை யம்மாளிடத்தில், 'அல்லி ய்ரசாணி மாலை,' 'புரந்தரன்களவு மாலை,' 'வள்ளியம்மன் சோபனம்' முதலிய பாட்டுக்களைச் சொல்லிக் கொள்வேன்; அல்லது, என் பாடங்களைப் படிப்பேன். இவ்விதமாய்க் கவலையற்று வாசித்துக் கொண்டிருந்தேன்.

ஐயோ! அக்காலத்தில், அற்ப விஷயங்களுக்கெல்லாம் தன்னை யறியாமற் பொங்கின சந்தோஷத்தை, இனி மேல் அடையும் நாளும் வருமோ? இனிமேல் ஒரு நாளாவது, அப்படிக் கவலை யற்றிருக்கக் கிடைக்குமோ? அப்பொழுதுங்கூட, முற்றிலும் கவலையற் றிருக்க வில்லை. அண்ணாவாவது, அத்தையாவது, நான் செய்யுந் தப்பிதங்களுக்காகக் கோபித்துப் பேசினால், அன்று முழுவதும் விசனமாகவே யிருக்கும். அதுவும் ஒரு விசனமோ? உடனே கொஞ்சிப் பேசுவார்கள்: மனம் குளிர்ந்து விடும். வீட்டு வேலைகளிலும், பாடங்கள் படிப்பதிலும் உண்டாகும் கவலைக ளெல்லாம், அவை செய்தானவுடன் மாறி விடும். சில சமயங்களில் என் தகப்பனாரைப் பற்றி நினைப்பேன். குட்டி யம்மாளின் தாயார் சொன்ன சொற்களும், அவர் பிற்பாடு பட்ட மனவருத்தமும், கொல்லத்துக் கடிதம் வந்தவுடன் அவரும் நானும் அழுததும், உடனே ஞாபகத்துக்கு வரும. கொல்லையில் கிணற்றருகிலாவது, அல்லது மாடியில் ஒரு மூலையிலாவது போயிருந்து கொண்டு விசித்துவிசித் தழுவேன். துக்கம் மூச்சு விட முடியாமல் நெஞ்சை யடைக்கும். கொஞ்ச நேரத்தில் அழுவதின் காரணம் மறந்து போய் விடும்; எதாவது சேஷ்டை செய்து கொண்டே விசித்துக் கொண்டிருப்பேன்; பிற்பாடு அதுவும் தானாகவே நின்று விடும்; விளையாடவாவது படிக்கவாவது போய் விடுவேன். இவ்விதமாய் இரண்டு மூன்று மாதம் படித்தவுடன், எனக்குத் தமிழ் எழுதக் கொஞ்சம் தெரிந்தது. உடனே என் தகப்பனாருக்குக் கடிதம் எழுத வேண்டுமென்று யோசித்

தேன். என் தமயனும் சுந்தரேசனும் நானெழுதிய கடிதத்தைத் திருத்தாமல் அப்படியே அனுப்புவதாகச் சொன்னார்கள். முதற் கடித மெழுத, எனக்கு இரண்டு நாள் பிடித்தது. அது இப்பொழுது என் கைவச மிருக்கிறது. அதைக் கீழே வரைகிறேன். அதில் ஏராளமாய் மைப் பொட்டுக்க ளிருக்கின்றன. எவ்வளவோ எழுத்துக்களை அடித்திருக்கிறேன். அடிக்குத் தப்பின எழுத்துக்களில் அநேகம், கோழி கிண்டினாற் போல் சொரூபம் தெரியாம லிருக்கின்றன. இவற்றை யெல்லாம் அச்சிற் பதிப்பது வருத்தமா யிருப்பதால், கணக்கிட முடியாத அடிகளும் பொட்டுக்களும் இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டும் :—

கடிதம். *

“ யெந்நோ டஅப் பாவுக்குசே வுக்குறேன் னாங்கயெ ல்லாரும் சௌக் கியமாய் எருக்கரும் னீற். ஷெ மமாய் எருப்பத்தற்கு யெழுதுணம்னா ந் வாசிக்காது உமக்கு தெரியாதே சுன்துசொ ல்லித்ரான் அவன் அண்ணா யிக்ஷ டங்கணக்கும் படிக்க ரேங்வேறு. விசெக்ஷ மிலெ யிப்

படிகு உம்முடை
யகுழந்தைமுத்
துமீனாக்ஷி. ”

இந்தக் கடிதத்தை அனுப்பும்படி நான் அண்ணா வசம் கொடுத்தவுடன், அவனும் சுந்தரேசனும் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். நான் அதை அனுப்பக் கூடா தென்று சொன்னேன். அவர்கள் அதைக் கேட்காமல் அனுப்பிவிட்டார்கள். அவர்கள் மறுபடியும் அதிக மாய்ச் சிரித்ததைக் கண்டு நானும் காரண மின்றிச் சிரிக்

---

* சரியானபடி :—“ என்னுடைய அப்பாவுக்குச் சேவிக்கிறேன். நாங்கள் எல்லாரும் சௌக்கியமா யிருக்கிறோம். நீர் க்ஷேமமா யிருப்பதற்கு எழுத வேணும். நான் வாசிக்கிறது உமக்குத் தெரியாதே? சுந்தரேசன் சொல்லித் தருகிறான். அவன் மணியனுடைய இஷ்டன். கணக்கும் படிக்கிறேன். வேறு விசேஷ மில்லை.

இப்படிக்கு உம்முடைய குழந்தை
முத்து மீனாக்ஷி.

கத் தொடங்கினேன். அன்று முழுவதும் சிரிப்பாகவே யிருந்தது.

நான் கடிதமெழுதி யொருவார மாகுமுன், என் தகப்பனார் அண்ணாவுக்குக் கடித மெழுதினார். அந்தக் கடிதத்தையும் கீழே வரைகிறேன்:—

உ திருவனந்தபுரம்,

ஆவணிமீ 12உ.

சிரஞ்சீவி குழந்தை சுப்பிரமணியனுக்கு ஸர்வாபீஷ்டமும் உண்டாவதாக அநேக ஆசீர்வாதம்.

இவடம் க்ஷேமம். அவடத்தில் நீயும் முத்துவும் சங்கரியும் க்ஷேமமா யிருக்கிற விபரத்துக்கு உடனே பதிலெழுத வேண்டியது, நீயும் முத்துவும் எழுதிய லிகிதங்கள் வந்து சேர்ந்தது. பள்ளிக்கூடச் சம்பளம் இல்லாமற் செய்ய முடியவில்லை யென்றும், மிஷன் பாதிரி துரை தயவின் பேரில் அரைச் சம்பளம் கொடுத்து வருகிறதாகவும் எழுதி யிருக்கிறாய். அப்படியே செய்யவும். நான் இன்னும் இரண்டு வாரத்தில் இருபது ரூ உண்டில் அனுப்புகிறேன். உனக்கு வேண்டிய புஸ்தகங்கள் இரவல் வாங்க வேண்டிய தில்லை. விலைக்கே வாங்கிக் கொள். எப்படியாவது இந்த வருஷம் பரீக்ஷையை ஒப்பேற்றி விடு.

யாராவது அவடம் வரும்பொழுது, நல்ல பலாப் பழம் ஒன்று அனுப்புகிறேன். நீ அமிதமாய் கண் முழித்துப் படிக்க வேண்டாம். தேகத்தை சௌக்கியமாய்ப் பார்த்துக் கொள்.

முத்துவை யார் வாசிக்கச் சொன்னது. பெண்கள் வாசித்தால் கெட்டுப் போவார்கள். அவள் வாசிப்பதை உடனே நிறுத்தவும். சுந்து என்பவன் யார். அவன் வர்த்தமான மென்ன. இது விஷயங்களுக்கும் அவடத்து க்ஷேமாதிசயங்களுக்கும் உடனே பதிலெழுதவும். நீ உயர்ந்த கிளாஸில் ஒப்பேறினால், மேல் பரீக்ஷைக்கு சம்பள மில்லாமல் வாசிக்கலா மென்று கேள்விப் படுகிறேன். அதற்கு வேண்டிய முயற்சி பண்ணவும்.

வேணும் அநேக ஆசீர்வாதம்.

பத்மநாபஸ்வாமி சகாயம்,

ஜ. சங்கரய்யர்.

இந்தக் கடிதம் வந்தவுடன், எனக்கு விசனம் இவ்வளவென்றில்லை. குட்டியம்மாளின் செய்கைகளுக்காக, நான் படிப்பை நிறுத்த வேண்டிய தாயிற்று.

என் தகப்பனார் கடிதம் வந்தவுடன் நான் படிப்பை நிறுத்தவில்லை. அவரெழுதியதைப் பற்றி எனக்கு விசனம் இருந்ததைப் பார்க்கிலும் சுந்தரேசனுக்கு அதிகமாகவே இருந்தது. படிப்பு வருகிற சமயத்தில் நிறுத்திவிட்டால், பிற்பாடு எல்லாம் மறந்து போமென்று அவன் சொன்னான். என் தமயன், உடனே படிப்பை நிறுத்திவிட வேண்டுமென்று சொன்ன போதிலும், சுந்தரேசன், அவனுக்குப் போதித்து, என் தகப்பனாருக்குச் சரியானபடி கடிதமெழுதி அவருடைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்று சொல்லி, எனக்கு வழக்கம் போல் படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு வந்தான். நாங்கள், ஒரு வாரத்திற்குப் பிற்பாடு, என் தகப்பனாருக்குக் கடிதங்களெழுதினோம். அண்ணா எழுதிய கடிதத்தில், நான் கொஞ்சம் எழுதினேன். என் தகப்பனாரைத் தெரியாத போதிலும், சுந்தரேசனும் அவருக்கு ஒரு கடிதமெழுதினான். அவன் எழுதியது அந்தச் சமயத்தில் எங்களுக்குத் தெரியாது. பிற்பாடு தான் நாங்கள் அறிந்தோம். அந்தக் கடிதங்கள் இரண்டையும் கீழே வரைகிறேன்:—

1. என் தமயன் கடிதம்.

வரியூர்,
ஆவணிமீ 21உ.

ஸ்ரீமது அப்பா அவர்களுடைய திவ்ய ஸ்ரீ பாதபத்மங்களிலே குழந்தை சுப்பிரமணியன் சாஷ்டாங்க பூர்வீகமாக நமஸ்கரித்து விஜ்ஞாபனம். இவ்விடத்தில் முத்து அத்தை முதலிய யாவரும் க்ஷேமம். அவ்விடத்தில் தாங்கள் க்ஷேமமாயிருக்கிற விபரத்துக்கு எழுதியனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தாங்களெழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. இப்பொழுது 20 ரூபா வேண்டியதில்லை. இந்த மாதத்தில்

15 ரூபா அனுப்பினால், பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். எனக்கு எப். ஏ. பரீக்ஷை இந்த வருஷமில்லை. அடுத்த வருஷந் தான் பணம் கட்ட வேண்டும். நான் சிரத்தையுடன் வாசித்துக் கொண்டு வருகிறேன். தேகத்தை சௌக்கியமாய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன். தாங்கள் உண்டில் அனுப்புவதை இராவுத்தர் கடைக்கு அனுப்பி விட்டால் நான் பெற்றுக் கொள்ளுகிறேன்.

தாங்கள் முத்து படிப்பைப் பற்றி யெழுதினதைக் கேட்டு, அவள் மிகவும் விசனப் படுகிறாள். அவள் படிக்க வேண்டு மென்று ஆசைப் பட்டதினால், நானும் சுந்தரேசனும் அவளுக்குச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினோம். தங்களைக் கேளாமல் அப்படிச் செய்ததைத் தயவு செய்து மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் படிப்பு நிறுத்த வில்லை. அவளே இதன் கீழ் எழுதுகிறாள்.

தாங்கள் சுந்தரேசனைப் பற்றி யெழுதி யிருந்தீர்கள்: அவனுக்கு மதுரை. அவன் தமயனார் இவ்விடத்தில் நூறு ரூபா சம்பள முள்ள கச்சேரி உத்தியோகத்தி லிருப்பதால், அவன் இரண்டு வருஷமாய் இவ்விடத்தில் வாசித்துக்கொண் டிருக்கிறான். அவன் தான் என்னுடைய முக்கிய இஷ்டன். எங்கள் வகுப்பில் முதலாவது பையனாயிருக்கிறான். அவன் பந்துக்களில் அநேகர், உயர்ந்த சர்க்கார் வேலைகளி லிருக்கிறார்களாம். நானும் அவனும் ஒன்றாய்ப் படித்துக் கொண்டு வருகிறோம். வேறு விசேஷ மில்லை.

இப்படிக்கு
தங்கள் பணிவும் அன்புள்ள
குழந்தை
சுப்பிரமணியன்.

என்னோட அப்பாக்கு னமஸ்கார்ரம் பன்றேன் னீ, ற்யெழுதின காகிதம்வ ந்துயெ னக்கு ரொம்ப விஸநமாயிருக்கு யெநக்கு வாசிக்க ஆசை யா இருக்குநா ந் கெட்டுப் போகமா ட்டேன்னீற் சம்மதிக்கனம் யெனக்கு யிதை யெழு தரபோ் து அழுகைவரது.

உம்மோர்டுரு
ழந்தைமுத்
துமீனுக்ஷி

2. சுந்தரேசன் கடிதம்.

ஸ்ரீமது மாமா அவர்களுக்கு அநேக நமஸ்காரம்; இவ்விடத்தில் யாவரும் க்ஷேமம். தங்கள் க்ஷேமத்துக்கு எழுதி யனுப்பக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கடிதத்தைப் பார்க்கத் தங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். தங்கள் குமாரன் சுப்பிரமணியன் எழுதி யிருப்பதால், என்னைப் பற்றி நான் ஒன்றும் விசேஷமாய்ச் சொல்ல வேண்டிய தில்லை. தங்கள் கடிதத்தை சுப்பிரமணியன் காட்டிய வுடன், எனக்கு மிகவும் விசனமா யிருந்தது. நான் அந்த விஷயத்தைப் பற்றி என் தமயனுரவர்க ளிடத்திற் சொன்னேன். முத்து மீனுக்ஷி முக்கியமாய் என் மூலம் படிக்க ஆரம்பித்ததினுலும், அதனுல் தங்களுக்கு விசன முண்டானதினுலும், நான் தங்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டு மென்று அவர்கள் சொன்னுர்கள். அதன் பேரில் இந்தக் கடிதம் எழுதலானேன். நான் இதை எழுதுவது அவர்க ளொருவருக்கும் தெரியாது. தாங்கள் என்னை மன்னிக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் கொஞ்சமும் பாத்தியப் படாதவனு யிருந்த போதிலும், இன்னும் ஒரு விஷயம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தங்கள் குழந்தை படிப்பதை, தாங்கள் தடுக்காம லிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அவளுடைய புத்திசாலித்தனத்தையும் படிப்பின் பேரிலுள்ள ஆசையையும் பார்த்துத் தான், நான் படிப்புச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினேன். அதைப் பற்றித் தாங்கள் சுப்பிரமணியன் பேரில் கோபித்துக் கொள்ள வேண்டாம். என் பேரில் தான் கோபித்துக் கொள்ள வேண்டும். என் சகோதரிகள் மதுரையில் படிப்பது போலவே முத்து

வுக்கும் படிப்புச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். பிற்பாடு தங்கள் இஷ்டம். தங்களுக்குத் தெரியாததில்லை. அவளுக்குப் படிப்பின்மே லிருக்கும் ஆசையைப் பார்த்தால், நீங்களே சொல்லிக் கொடுப்பீர்க ளென்பது நிச்சயம். நான் அவர்களுடன் அதிகமாய்ப் பழகி விட்டதால் இவ்வளவு சொல்ல நேரிட்டது. நான் ஏதாவது பிழை செய்திருந்தால், பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு

வரியூர்,
ஆவணிமீ 22உ.

தங்கள் பணிவுள்ள
சுந்தரேசன்.

நாங்கள் கடிதமெழுதி யொரு வாரத்திற்குள், என்னிஷ்டப்படி வாசிக்கும்படி என் தகப்பனார் பதிலெழுதி விட்டார். அவர் கடிதத்தில் சுந்தரேசன் கடிதத்தைப் பற்றி யெழுதி யிருந்தபடியால், நான் அவன் வந்தவுடன் அதைப் பற்றிக் கேட்டேன். அவன் பதிற் சொன்னதாவது :—“ஆமாம், பெண்டாட்டி! நானும் ஒரு கடிதம் எழுதினேன். ஒரு வேடிக்கை கேள். முதலில் எழுதின கடிதத்தில் உன் பெயர் வரும்பொழுது, ‘பெண்டாட்டி’ யென்று எழுதி விட்டேன். பிற்பாடு அதைக் கிழித்து விட்டு வேறு கடிதம் எழுதினேன். எப்படியாவது அவர்கள் சம்மதித்ததே பெரிய காரியம்.”

அவன் முதற் கடிதத்தை நினைத்து, நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம். அப்பொழுது இராத்திரி போஜன காலம் ஆய்விட்டபடியால், “சுந்து! நீ யெனக்குப் படிக்கும்படி அனுமதி வாங்கித் தந்ததற்காக, இன்றைக்கு எங்களுடன் சாப்பிட வேண்டும். அன்று மத்தியானத்தைப் போல் வீண் முகாந்தரஞ் சொல்லக்கூடாது” என்றேன். உடனே அண்ணாவும், அத்தையம்மாளும் என்னுடன் சேர்ந்து அவனை வேண்டவே, நாங்கள் எல்லோரும் அன்று இரவை உல்லாசமாய்க் கழித்தோம்.

மூன்றாம் அதிகாரம்.

இவ்வதிகாரத்தில் :நான் சுந்தரேசன் வீட்டுக்காரரைப் பற்றிச் சொல்லுகிறேன். அவர்களும் எங்களைப் போல் ' சந்நிதித் தெரு'வில்தான் இருந்தார்கள். ஆனால், அவர்கள் இருந்த வீடு மிகவும் பெரிது. என் அத்தையம்மாள் ஒருநாள் சொன்னபடி, எங்கள் வரும்படி அந்த வீட்டுக்கு விளக்குப் போடத்தான் சரியா யிருக்கும். அப்படி யிருந்தபோதிலும், சுந்தரேசன், அதை விட்டு விட்டு, எங்கள் வீட்டுக்குப் படிக்க வந்துவிடுவான். எங்கள் தெருவில், அந்த வீட்டு வாசலில் மாத்திரந்தான் ' லாந்தர் ' போட்டிருக்கும். அது உத்தியோகஸ்தர் வீடு என்று பார்த்தவுடன் அறிந்து கொள்ளலாம் ; ஒரு வேளை சந்தேகம் கொஞ்ச மிருந்தால், மாடியில் வைத்திருக்கும் பூச் செடிகளைப் பார்த்தவுடன், அது நீங்கி விடும்.

சுந்தரேசன் தமயனார் பெயர் இராமபத்ர சாஸ்திரிகள். நான் முதலில் அவர் பெயரைக் கேட்டவுடன், அவர் சாஸ்திரங்களில் தேர்ச்சி யடைந்த வைதீகரென்று நினைத் திருந்தேன். பிற்பாடுதான், அவருக்குக் கிரந்த எழுத்துக்களே தெரியா தென்றும், ஆவணியவிட்டத் தன்று கூட அவர் சந்திபண்ண மாட்டாரென்றும், அவர் பாட்டனார் சாஸ்திரியா யிருந்ததால் அவரும் அப் பட்டத்தை வைத்துக் கொண்டாரென்றும், அண்ணா எனக்குச் சொன்னான். அவர் மனைவி பெயர் காமாக்ஷி. நானும் என் தமயனும், சுந்தரேசனைப் போல், அவளை ' மன்னி ' யென்று கூப்பிடுவது வழக்கம். அவளுடைய கணவர், அவளைக் 'காமு' என்று வழக்கமாய் அழைப்பார். அவர்களுக்கு மூன்று வயதுள்ள ஓர் ஆண் குழந்தையும், ஒரு வயதுள்ள ஒரு பெண் குழந்தையும் இருந்தன. அவர்களுடன் இலக்ஷ்மியும் இருந்தாள். அவள் சுந்தரேசனுடைய மூத்த சகோதரி. ஒன்பது வயதா யிருக்கும் பொழுதே புருஷனை யிழந்தவள். அவளுக்கு அப்பொழுது இருபது வயதா யிருக்கலாம். அவள் வேறு

போக்கின்றி 'மன்னி'க்குத் துணையாக இருந்தாள். அவளைப் பற்றி எனக்கு ஒன்றும் எழுதத் தோன்றவில்லை. இவர்களைத் தவிர, ஒரு பிராமண வேலைக்காரப் பையனும், இரண்டு சூத்திர வேலைக்காரர்களுமிருந்தார்கள். நான் முதல் முதல் அவர்கள் வீட்டுக்குப போனபொழுது நடந்த சமாசாரங்கள் நன்றாய் ஞாபகத்திலிருக்கிறபடியால், அவற்றைக் கூறுகிறேன்.

நான் வரியூருக்கு வந்த தினத்திலேயே, நானும் சுந்தரேசனும் இஷ்டர்களாய்விட்டோம். இரண்டு நாள்களுக்குப் பிற்பாடு, நான் என் அத்தையுடன் ஒரு மத்தியானம் அவன் வீட்டுக்குப் போனேன். அன்றைக்குச் சனிக்கிழமையாயிருந்ததால் அவன் தமயனார் 'கச்சேரி'க்குப் போயிருந்தார். நாங்கள் போகும் பொழுது, காமாக்ஷியம்மாள் வாசித்துக் கொண்டிருந்தாள். இலக்ஷ்மி தோசைக்கு அரைத்துக் கொண்டிருந்தாள்.

காமாக்ஷி :—வாருங்கள்! வாருங்கள்! அடே! பையா! சங்கரியம்மாள் வந்திருக்கிறார்கள். மணை யெடுத்துப் போடடா.

என் அத்தை :—எதற்கு? வேண்டாம். தரையில் குப்பை யில்லையே. கீழேயே உட்காருகிறேன்.

நான், காமாக்ஷியம்மாளையும், இலக்ஷ்மியம்மாளையும் சேவித்து விட்டு, என் அத்தை பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன்.

காமாக்ஷி :—புதன்கிழமை யன்று வந்தீர்களாக்கும். சுந்தரேசன் சொன்னான். இந்தக் குட்டிதான் உங்கள் மருமாளோ ?

என் அத்தை :—ஆமாம், அம்மா! அந்தக் கடன்காரி, மூன்று வயதிலேயே விட்டு விட்டுப் போய் விட்டாள்.—

காமாக்ஷி :—நாமென்ன செய்யலாம்? தெய்வச் செயல். குட்டி! உன் பேரென்னடி ?

நான் :—என் பேர், முத்துமீனாக்ஷி.

காமாக்ஷி :—(இலக்ஷ்மியம்மாளைப் பார்த்து) நீங்களேன் வாய் பார்த்துக்கொண் டிருக்கிறீர்கள் ? இன்னும்

இரண்டுவழி மாவுக்கு அரிசி யிருக்கிறதே? பிற்பாடு ஜலம் கொண்டு வர வேண்டாமா? இப்படி வாய் பார்த்தால் எப்படி?

உடனே இலக்ஷ்மியம்மாள், தலையைக் கவிழ்ந்து கொண்டு, விரைவாய் அரைக்கத் தொடங்கினாள்.

பிற்பாடு கொஞ்ச நேரத்துக்கு ஒருவரும் பேச வில்லை. என்னவோ போலிருந்தது. எனக்கு, எங்கேயோ பிடித்துக் கொண்டு போய் விட்டாற் போலிருந்தது. கடைசியாக, ஏதாவது பேசும் பொருட்டு, என் அத்தை, காமாக்ஷியம்மாளைப் பார்த்து, "அதென்ன புஸ்தகம்?" என்று கேட்டாள்.

காமாக்ஷி :—இதா? 'இராமநாடகம்.'

அத்தை :—அதென்ன?

காமாக்ஷி :—இராமாயணக் கதையைக் கீர்த்தனங் களில் பாடியிருக்கிறது. அடே பையா! சுந்தரேசனைப் பார்த்துக் கூட்டிக் கொண்டுவா. இந்தக் கீர்த்தனத்துக்கு இராகந் தெரியவில்லை. இந்தக் குட்டிக்கு எங்கே பார்த் திருக்கிறீர்கள்?

அத்தை :— எங்களுக்குள் தகுந்த பிள்ளைகளைக் காணோம். எவனுக்கு மாலையிடப் போகிறாளோ? இன் னும் ஒன்றும் நிச்சயமாக வில்லை.

காமாக்ஷி :—இனிமேல் பிறக்கப் போகிறதில்லையே? குட்டி, எங்கள் சுந்தரேசனைக் கலியாணம் பண்ணிக் கொள்கிறாயா? இங்கிலீஷ் வாசிக்கிறான்; அழகா யிருக் கிறான்.

அத்தை :—அவனுக்கு எந்தப் பாக்கியவதி மாலையும் கையுமாய்க் காத்துக்கொண் டிருக்கிறாளோ? நேற்று நான் விளையாட்டாக நீங்கள் சொன்னதையே சொன் னேன். சுந்தரேசன், என்னுடைய பவழ மாலையை யெடுத்து இவள் கழுத்திற்பூட்டி, இவள் கையைப் பிடித் துக் கொண்டு என்னை வந்து நமஸ்காரம் பண்ணினதுந் தவிர, அது முதல், இவளைப் பரிகாசமாகப் 'பெண் டாட்டி' யென்று கூப்பிடுகிறான்.

என் அத்தை யம்மாள் பேசி முடிய, சுந்தரேசனும் வந்து விட்டான். உடனே அவனைப் பார்த்துக் காமாக்ஷி யம்மாள் சிரித்துக் கொண்டு சொன்னதாவது:—

"சுந்தரம்! நீ வெகு யோக்கியன் போலிருக்கிறதே? நாங்களெல்லாம் என் அம்மங்காரை உனக்குக் கலியாணஞ் செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்க, நீயாக வேறொரு குட்டியைச் சம்பாதித்துக் கொண்டு, இப் பொழுதே முதல் 'பெண்டாட்டி' யென்று கூப்பிடவும் ஆரம்பித்து விட்டாயே? இது சரியா?"

சுந்தரேசன் தலையைக் கவிழ்ந்து புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டு, "மன்னி! எதற்குக் கூப்பிட்டாய்?" என்று கேட்டான். உடனே காமாக்ஷி யம்மாள், தான் கூப்பிட்ட விஷயத்தைச் சொல்ல, அவன், "ஓ! இந்தக் கீர்த்தனமா? இதை பைரவி ராகத்தில் இப்படிப் பாட வேண்டும்" என்று சொல்லிக், கொஞ்சம் பாடிக் காட்டி விட்டு, "நான் போகிறேன். மணியன் காத்துக் கொண் டிருப்பான். இரசமாய் வாசித்துக் கொண்டிருந்தோம்" என்று புறப்பட்டான்.

என் அத்தை யம்மாளும், "அம்மா! நாங்களும் போக வேண்டும். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. தோசைக்கு நனைத்து வைத்திருக்கிறது" என்று சொன்னாள்.

காமாக்ஷி யம்மாள், "ஆனால் சரி" என்றாள்.

அத்தை:—இலக்ஷ்மி யம்மா! நான் வரட்டுமா?

இலக்ஷ்மி:—"போகிறீர்களா? போய்விட்டு வாருங்கள்" என்று, மெதுவாய்த் தலையைக் கவிழ்ந்து கொண்டே சொன்னாள். உடனே நாங்கள் சுந்தரேசனுடன் வீட்டுக்கு வந்து விட்டோம்.

நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, இலக்ஷ்மி யம்மாள் கன்னங்களில் கண்ணீர் பெருகுவதை நான் பார்த்ததால், அதைப் பற்றி நினைத்துக் கொண்டே வந்தேன். எனக்கும், தன்னை யறியாமல், துக்கம் நெஞ்சை யடைத்தது. நான் பொறுக்க முடியாமல், "அத்தை யம்மா! இலக்ஷ்மி யம்மாள் ஏன் அழுதுக் கொண்டே யிருந்தார்கள்?" என்றேன்.

அத்தை :—“ அவர்கள் அழுதார்களா ? நான் பார்க்க வில்லையே.”

“ ஆம் ஆம். ஏன் அழுதார்கள் ? ” என்று மறுபடி யுங் கேட்டேன்.

அத்தை :—எதற்கோ அம்மா : எனக்குத் தெரியு மா ? காமாக்ஷியம்மாள் ஏதாவது சொன்னார்களாக்கும்.

சுந்தரேசன் :—“ அக்காள் அழுததை நானும் பார்த் தேன். அத்தையம்மா ! நீங்கள் தான் எனக்குத் தாயார். நான் வேறு தாயாரை யறியேன். உங்களிடத்தில் சொல்லுவதில் எனக்கு வெட்கமில்லை. மன்னி எங்களைக் கொடூரமாய் நடத்துகிறாள். அண்ணா அவர்களாவது, வேறு அந்நியராவது இருக்கும் பொழுது, என்னை வெகு பக்ஷமாய்த்தான் நடத்துகிறாள். தனித் திருந்தாலுங் கூட, அவள் அம்மங்காரை நான் கலியாணஞ் செய்து கொள்ளப் போகிறதாக, எனக்குக் கொடுமை செய்கிற தில்லை. அக்காளுக்கோ, அப்படிக் கூடவில்லை; எப் பொழுதும் கஷ்டந்தான். சகல வேலைகளும் அவள்தான் செய்ய வேண்டும். மன்னி புடைவைகளைக் கூட, அவள் தான் தோய்த்துப் போடவேண்டும். இதுவும் தவிர, அண்ணா அவர்களிடத்தில், இல்லாத கோள்களையெல்லாம் சொல்லுகிறாள். அவர்களைப் போல் எங்களுக்கு அன் புள்ள தமயனார் கிடையாது : மன்னி வருவதற்கு முன், அக்காளுக்கு நேர்ந்த கொடுங் கஷ்டத்தை அவள் சிறிதும் உணரக் கூடாதென்று, அவளைக் கண்ணுக்குக் கண்ணாய், தாயை விட அருமையாய், நடத்தி வந்தார்கள். அவர் களுக்குக் கூட இப்பொழுது சில சமயங்களில் கோபம் வந்துவிடுகிறது. மன்னி பேரிலுள்ள இஷ்டத்தால், அவள் சொல்லையே வேத வாக்காக மதிக்கிறார்கள். உண்மை தெரிந்தால், அண்ணா அவர்கள் மிகவும் விசனப் படுவார்களே யென்று நான் பயப்படுகிறேன். அன்றியும், அவர்களிடத்தில் மன்னியைப் பற்றிக் கோட் சொல்ல,

எனக்கு நாக்கெழவில்லை. நான் சில சமயங்களில் கொரோத்துக் குள்ளாவதை மறைத்துச் சகித்துக் கொண்டு, அக்காள் மனத்தையும் தேற்றிக் கொண்டே வருகிறேன். மற்றப் பிள்ளைகள் கவலையின்றி விளையாடித் திரியும் பாலிய வயதில், தாயில்லாக் குற்றத்தால், நான் இவ்வளவு கஷ்டங்களுக்கும் மன விசாரங்களுக்கும் உள்ளாகவேண்டுமென்று, பிர்ம்மா என் தலையில் எழுதினான். அநுபவித்துத் தான் தீரவேண்டும்" என்று சொன்னான்.

அவனுக்குக் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. எனக்கும் கண்ணீர் பெருகிற்று. என் அத்தையம்மாளுக்கும் கண்ணீர் பெருகிற்று. அண்ணா மாடியிலிருந்து "சுந்தரேசா! சுந்தரேசா" என்று கூப்பிட்டான். உடனே அவன், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு போய்விட்டான்.

நான்காம் அதிகாரம்.

என் சரித்திரத்தில் அடுத்த விஷயம், எனக்கு ஒன்பதாவது வயதில் நடந்த என் கலியாணம். அதற்கு என் தகப்பனார் வரவில்லை. இப்பொழுது நினைத்துப் பார்க்கையில், அவர், அமிதமான மான வுணர்ச்சியும் மனமுரண்டும் உள்ளவராகத் தோன்றுகிறது. அந்த நாட்களில், பெண்களுக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரர் பணங் கொடுப்பதன்றி, மாப்பிள்ளைக்குப் பெண் வீட்டுக்காரர் நகைகள் செய்து போட்டும், படிப்புச் செலவுக்குப் பணமுதவியும், துவிசக்கர வண்டிகள் வாங்கிக் கொடுத்தும், பணங் கொடுப்பது கிடையாது. நான் துவிதீயமாக வாழ்க்கைப் பட்டேன். எனக்கு முந்நூறு ரூபாவுக்கு நகை செய்து போட்டது மன்றி, எழுநூறு ரூபா கட்டணமாகவும் கொடுத்தார்கள். இந்தப் பணத்தில் இருநூறு ரூபாவரை

கலியாணத்திற் செலவாய் விட்டது; மிகுந்ததை என் தமயன் கலியாணத்துக்காக அத்தை யம்மாள் வட்டிக் குப் போட்டிருந்தாள். எங்கள் சமீப பந்துவில் ஒருவர், என்னைத் தாரைவார்த்துக் கொடுத்து, சம்மந்தி ஸ்தானத்தி லிருந்து விவாகத்தை நிறைவேற்றினார். என் புருஷ ருக்கு முப்பது வயது. மூன் வருஷத்தில் இறந்து போன அவர் மூத்த தாரம், என்னைப்போல ஒரு பெண்ணையும், இரண்டு சிறு பெண் குழந்தைகளையும் விட்டுப் போயிருந் தாள். அந்தப் பெண்ணுக்கும் என்னுடன் ஒரே பந்தலில் தான் கலியாணமாயிற்று. அந்தப் பெண்ணுக்கு அவள் மாமனார் கொடுத்த நானூறு ரூபாவுடன், இன்னும் மூந் நூறு ரூபா சேர்த்து, எனக்குத் தந்ததாகவே சொல்லிக் கொண்டார்கள். அவள் புருஷன் சிறுவனு யிருந்ததால் அவளுக்குச் சொற்பப் பணமும், என் புருஷர் பெரியவரா யிருந்ததால் எனக்கு அதிகப் பணமும் கிடைத்தன. ஆயி னும், கலியாணத்தில், அவளையும் அவள் புருஷனையும் மட்டும் தோளி லெடுத்தும், பல்லக்கி லேற்றியும், அடிக் கடி நலுங்கிடச் செய்தும் சீராட்டினார்கள். எனக்கு அப்படி யொன்றும் நடக்கவில்லை; அதனால் நான் அதிக மன வருத்தத்தை அடைந்தேன். கலியாண மென்றால், புதிய பட்டுப் புடவை கட்டிக் கொண்டு, இரவலோ சொந்த மோ ஏராளமான நகைகள் அணிந்து கொள்வது மாத்திர மன்றி, பாட்டும் கூத்தும் பல்லக்கும் நலுங்கும் பரிகாச மும் விளையாட்டுமா யிருக்குமென்று, நான் எண்ணி யிருந்தேன். ஆகவே, எனக்கு மட்டும் அப்படி யொன்று மின்றி, அதே பந்தலில், என்னைப் போன்ற மற்றொரு பெண்ணுக்கு அவை யெல்லாம் நடப்பதைக் காண என் மனம் பொறுக்கவில்லை. இந்த உண்மையை அறியாமல், என் விசனத்தைக் கண்ட மணியனும் அத்தை யம்மாளும், என்னிஷ்டப்படி சுந்தரேசனைக் கலியாணஞ் செய்து கொள்ள முடியாமற் போனதே என் விசனத்துக்குக் காரணமென் றெண்ணினார்கள். அந்தக் குழந்தைப்

பருவத்தில், மாப்பிள்ளையைப் பற்றி எனக்கு மனவிசாரம் இல்லவே யில்லை.

என் கலியாணம் நிறைவேறிய வுடன், கூட்டோடு கூடாய் மணியனுக்கும் கலியாணஞ் செய்துவிட வேண்டு மென்று என் அத்தை பிரயத்தனஞ் செய்தாள். ஆனால், தக்க பெண் கிடைக்கவில்லை; பதினொரு வயதுக்குத் தாழ்ந்த பெண் மணியனுக்குத் தாரம் போதாதென்பது அவள் அபிப்பிராயம்; அவனும், தனக் கப்பொழுது கலியாணம் வேண்டாமென்று தடுத்தான்.

அடுத்த வருஷத்தில், அவன் தமயனார் வேறூருக்கு மாற்றப் பட்டதால், சுந்தரேசன் வரியூரை விட்டுப் போய் விட்டான். அவனைப் பிரியும்பொழுது நாங்கள் பட்ட மனத் துயரம் சொல்லி முடியாது. அவன் போன பின்பு, என் படிப்பு மும்மரம் அடங்கி விட்டது. என் தமயன் பரீக்ஷைக்கு வாசிப்பதில் தன் முழுக் கவனத் தையும் செலுத்தினான்; அன்றியும், ஒரு நாளுமே, பொறுமையுடன் அவனால் எனக்குப் பாடம் சொல்லித் தரமுடியாது. ஆகவே, நானாகச் சிறிது சிறிது வாசித்து வந்ததைத் தவிர வேறில்லை. அந்த அற்ப சொற்பத்தை யும் கூட, நான் புஸ்தகமும் கையுமா யிருப்பதை எங்கள் வீட்டுக்கு வந்திருந்த என் கணவர் ஒரு நாள் கண்ட வுடன், நிறுத்தி விடும்படி கட்டளை யிட்டதுமன்றி, சுந்தரேசன் எனக்குத் தந்திருந்த தமிழ்ப் புத்தகங்களை யும் கிழித்தெறிந்து விட்டார். புஸ்தகங்கள் போய், மரப்பாச்சி, அம்மானை, சோகி, கழச்சிகளும், பானை, சட்டி, பாத்திரங்களுமே, அஸ்த பூஷணங்களாய்விட்டன.

என் தமயன் சுப்பிரமணியன், எப். ஏ. பரீக்ஷை கொடுத்து விட்டுப் பலனை எதிர் நோக்கி இருக்கையில், ஒரு நாள், அவனை உடனே புறப்பட்டு வரும்படி, திருவநந்த புரத்திலிருந்து என் தகப்பனார் ஒரு தந்தி

அனுப்பினர். விஷயம் இன்னதென்று குறிப்பிடப் படாமையால், எங்களுக்கு அதிக விசாரமா யிருந்தது. ஆகவே, நான், மணியன், அத்தை ஆகிய மூவரும் அன்று மாலையில் பிரயாணமானோம். நாங்கள் திருவநந்தபுரம் சேரும் முன்னமே, என் தகப்பனர் இறந்துபோய், தகன கிரியைகளும் முடிந்து விட்டன.

அதை யறிந்தவுடன் நாங்கள் துயர்க் கடலில் ஆழ்ந் தோம். நானும் அத்தையுமாவது அவர் செல்லுமுன் அவரை ஒரு முறை பார்த்திருந்தோம்; மணியனே, அவரை இரண்டு வருஷங்களாகப் பார்க்கவே இல்லை. என் அருமைத் தந்தையே! நாலு வயதிலேயே தாயை இழந்து விட்ட பாவியாகிய எனக்குப், பத்து வயதுக்குமுன் உம் மையும் இழக்க நேர்ந்ததே! அந்தோ! அவளை நான் நன் கறியேன்; ஆனல், உம்முடைய அன்பையும் பக்ஷத்தை யும் சிலநாள் அநுபவித் திருக்கிறேன்; அந்த நினைப்பி னும், உமது அகால மரணத்தால் எனக்குற்ற கஷ்ட நிஷ்டூரங்களின் நினைப்பினலும், என் ஆவியுள்ள மட்டும் உம்மை யொரு பொழுதும் மறவேன். உம்மருமை மக்க ளது சுக வாழ்க்கையைக் கண்குளிர ஒரு நாளேனும் கண்டு ஆநந்தித்து, அவர்களை ஆசிர்வதியாது நீர் இறந்தீ ரே, அதே என் மனத்தைப் புண்படுத்துகின்றது.

அபரகிரியைகளை நடத்திக் கொண்டிருக்கும் பொழு தே, மணியனுக்கு எப். ஏ. பரீக்ஷை தேறிற்றென்று தெரியவந்தது. ஐயோ! எங்கள் தகப்பனர், அதையே னும் காது குளிரக் கேட்ட பின் இறந்திருந்தா லாகாதா!

என் தகப்பனர் செய்து கொண்டிருந்த வியாபாரத் தை ஒதுக்கிக் கணக்குப் பார்த்ததில், ஐந்நூறு ரூபா கிடைத்தது. அவர் சிநேகிதரிற் சிலர், அதைக் கை முதலாகக் கொண்டு, திருவநந்தபுரத்திலே பி. ஏ. பரீக்ஷைக்கு வாசிக்கும்படி கூறிய புத்தியை அநுசரித்து,

மணியன் அப்படியே செய்யத் தொடங்கினான். அவன் மட்டும் வரியூருக்குச் சென்று, அங்கிருந்த சாமான்களை எடுத்துக்கொண்டு வந்து விட்டான். திருவநந்தபுரத்தி லுள்ள பெண்கள் பாடசாலையிற் சேர்ந்து படிக்கவேண்டு மென்று எனக்கு ஆசையா யிருந்தது. இதைப் பற்றி, மணியன், என் புக்ககத்தாருக்கு எழுதிக் கேட்டான். ஆனால், என் புருஷர் அநுமதி கொடுக்கவில்லை. வீட்டு வேலையையும் விளையாட்டையும் தவிர, கோவிலுக்கு அடிக்கடி போவதும், ஒத்த தோழிமாருடன் சென்று விழாத் தினங்களில் ஊட்டுப் புரையில் சாப்பிடுவதும், அச்சிமாருடன் பேசிப் பேசி மலையாளம் பழகுவதும், பட்டண விநோதங்களைப் பார்ப்பதுமே என் முக்கிய காரியங்களா யிருந்தன. எனக்கு அதிகச் சந்தோஷத் தைக் கொடுக்கத்தக்க தொன்றும் நேர்ந்தது: அதாவது, என் தலைமயிர், நாளுக்குநாள், கறுத்துப் பளபளத்து அடர்ந்து நீண்டு வளர்ந்து வந்தது.

இவ் வண்ணம் விநோதமாய் நாலைந்து மாதம் கழியு முன், எப்பொழுதும் கண்டிராத விநோதங்கள் என் சரீரத் திலும் காணத் தலைப்பட்டன: முதலில் மேலெங்கும் சொறியும் சிரங்கும் மூடிக்கொண்டது; பின்பு நீர் வைத்து, உடம்பு, செத்தமாடு போல, ஊதிப் பருத்துவிட்டது. துடையோடு துடை உராய்ந்து புண்ணானதால் நடப்பதே அருமையாய் விட்டது. முன்னணிந்திருந்த வளையல் கள் வெடித்துடைந்து விட்டன. கால் காப்பைக் கழற்றி விட்டேன். கண்ணாடியிற் பார்த்தால் என் முகம் எனக் கே அடையாளந் தெரியவில்லை. 'முத்து, சிப்புப்போ லிருக்காள்' என்பது போய், 'முத்து, செக்குப்போ லிருக்காள்' என்ற வார்த்தை பிறந்து விட்டது. நான் குடித்த கஷாயங்களும், விழுங்கிய மருந்துகளும், பயன் படவில்லை. கடைசியில், ஆகாரத்தில் தேட்ட மற்று, ஆளுக்கே மோசம் வந்துவிடும்போ லாயிற்று. நன்றாய்ப்

பழுத்த வெள்ளிரிப் பழத்தைப் போல ஒரு நாள் உடம்பு வெடித்து உயிர் போய்விடுமோ என்று, நானே பயந்தேன். மருந்தொன்றும் பயன்படாமையைக் கண்டு பயந்து, என் தேக ஸ்திதியை விவரித்துக் கூறி, என்னை உடனே வந்து அழைத்துப் போகும்படி, மணியன், என் புக்ககத்தாருக் குக் கடிதம் அனுப்பினான். ஆயிரம் ரூபா கொடுத்துக் கொண்ட இடாரியைச் சாகவிட, யாருக்குத்தான் மனம் வரும்? அவ்வளவு, யாருக்குத்தான் பணம் செழித்துக் கிடக்கிறது? கடிதத்தைக் கண்டவுடன், என் மூத்த மைத்துனர் புறப்பட்டு வந்து, என்னை, என் புக்ககத்தா ருக்கு அழைத்துப் போனார்.

ஐந்தாம் அதிகாரம்.

பிறந்தகத்தை நீங்கிப் புக்ககத்துக்குச் செல்லும் சிறிய பெண்கள், பலி பீடத்துக்குச் செல்லும் கடாயைப் போற் செல்வதே வழக்கம். புக்ககத்துக்குச் சென்று உயிர் பிழைப்பதினும், என் அத்தையம்மாளும் அண்ணா வும் இருந்த வீட்டிலேயே இருந்து சாவதே எனக்கும் பிரியமா யிருந்தது. ஆனால், என் அபிப்பிராயத்தை ஒருவரும் கேட்கவில்லை. என் புக்ககத்துக் காரரை அது வரையிலும் எனக்கு நன்றாய்த் தெரியாது. அவ்வீட்டில், கைம்பெண் கிழவியாகிய என் மாமியாரும், என் மூத்த மைத்துனரும், அவர் மனைவியும் நாலு குழந்தைகளும், என் புருஷரும் அவர் பெண்கள் மூவரும், இளங் கைம் பெண்களாகிய நாத்திமார் இருவரும், என் கணவருக்கு இளையவராகிய மூன்று மைத்துனருமே இருந்தார்கள். இத்தனை பேருக்கும் ஜீவனோபாயம், சொற்ப நிலமும், வைதீக வரும்படியுமே. வீட்டிற் கூட்டம் காணாமைக்கு, எழெட்டு வித்தியார்த்திகள் தினந்தோறும் வந்து, காலை

யிலும் மாலையிலும் பஞ்சாதி சொல்லிக்கொண்டு போனார்கள். வியாதிக்காரி யாகையால், எனக்கு, முதலில், உபசாரமாய்க் கிடந்தது. மெய்யன்பினாலும் ஜீவகாருண்யத்தினாலும் அவ்வாறு செய்கிறார்களோ என்று, நான் ஒரு வேளை எண்ணுவதற் கிடமின்றி, என் மாமியார், தினம் பத்து முறைக்குக் குறையாமல், "இரண்டாயிரம் ரூபாயைக் கொண்டு போய்க் கொட்டி யிருக்கிறது: அந்தச் சனியனுக்குக் கஞ்சி கொடு" என்றும்; "அவள் (என் மூத்தாள்) ஒருத்தி போனாள், இந்தப் பணமும் முழுகிப் போய் விட்டால், ஏழைக் குடும்பத்திலே இனி யென்ன செய்கிறது?" என்றும் சொல்லி, என் விலைமதிப்பை எனக்கு நினைப்பூட்டிக்கொண்டே இருந்தாள். முன் கொட்டிக் கொடுத்த பணம் போதும்; இன்னும், பாலென்றும், பழமென்றும், சருக்கரையென்றும், சவ்வரிசி யென்றும் காசை வீணாக்க வேண்டாமென்று, அவர்களுக்குச் சகாயம் செய்பவன்போல, வைத்தியனும், உப்பு, புளி, உறைப்பு, முதலியவற்றின் வாசனையே யின்றி, வெறும் கஞ்சித் தெளிவே ஆகாரமாக, என்னைக் கொல்லாத வண்ணம் கொன்றான். ஊரிலும் காடுகளிலு முள்ள மரஞ் செடிகளின் வேரொன்றுமே பாக்கி யின்றி, எல்லாவற்றையும் கஷாயம் வைத்துக் குடித்தேன். தேகத்தின் வீக்கம் நாளுக்கு நாள் வடிந்து, கடைசியில், எலும்பையும் தோலையும் தவிர, வேறொன்றுமே இன்றி வற்றிப் போயிற்று. சுவரையேனும் ஊன்று கோலையேனும் பிடித்துக்கொண்டு நடப்பதே அரிதாய்விட்டது. புது வெள்ளம் வந்து பழைய நீரையும் அடித்துக்கொண்டு போவதுபோல, முன்னிருந்த தலை மயிரும் கழிந்துபோய் விட்டது. உப்புப் புளி யுறைப்புக்கு நாக்குச் செத்து, யாரும் காணாமல் பண்டங்களைத் திருட்டுத்தனமாய் எடுத்துத் தின்னத் தலைப்பட்டேன்; இவ்விதத் தீனியே என்னைப் பட்டினியாற் சாவதினின்றும் காப்பாற்றிய

தென்று, நான் இன்றைக்கும் மனப் பூர்வமாய் நம்புகிறேன்.

என் உடம்பு சுகப்பட்ட பின்பு, அவ்வீட்டில் எனக்குள்ள சுதந்தரத்தையும் என் கடமைகளையும் அறிந்துகொண்டேன். என் மாமியார் மிகப் பொல்லாத வாயாடி; என் சித்தி குட்டி யம்மாளின் தாயாகிய விசாலாக்ஷியம்மாளும், அவளுக் கெதிராகாள். என் கணவரும், மைத்துனரும், அவள் கிறியவரையைக் கடவார்கள். எவ்விஷயத்திலும் அவள் இட்டதே சட்டம். அவள் கீழே நான் பட்ட கஷ்டங்களை நினைக்கும்பொழுது, அம்மம்ம! இன்றைக்கும் என் நெஞ்சம் பதறுகிறது. ஒருக்கால் அவள் சுவர்க்கத்தி லிருப்பின், நான் செத்த பின்பு நரகத்துக்குப் போவதே எனக்கிஷ்டம்.

நம்மவருக்குள் கைம்பெண்கள் படும் கஷ்டங்களைப் பற்றிப் பலர் பலவாறு கூறுகிறார்கள. என்னைக் கேட்டால், என் மாமியின்கீழே சுமங்கிலி மருமகளாய் வாழ்வதிலும், அவள் புத்திரிகளாகிய கைம்பெண்கள் இருவரில் ஒருத்தியா யிருப்பதே உத்தமமென்று சொல்வேன். ஆனால், அம்மாமியின் கீழேயே கைம்பெண் மருமகளா யிருக்க நேர்ந்து விட்டாலோ, சிவ! சிவ! மனம் நடுங்குகின்றது. யான் போகும்வரை, வீட்டுக்கு மூத்த நாட்டுப் பெண்ணாகிய என் ஓர்ப்படி பார்வதியே குடும்ப வேலையைப் பொறுத்துப் பார்த்து வந்தாள். என் தேகம் சௌக்கியமானபின், அவள், தன் பாரத்தை மெதுவாய் என் தோள்மே லிறக்கத் தொடங்கினாள். குழவி முதற் கிழவி வரையும், ஆண் பெண் யாவருக்கும், நான் ஊழியக்காரி ஆய்விட்டேன். விடியற்காலம் நாலரை அல்லது ஐந்து மணிக்கு எழுந்தால், இரவு பத்துமணி வரையும் மூச்சுவிட நேரமின்றி உழைக்க வேண்டியதா யிருந்தது. என் மாற்றுத்தாய் குட்டியம்மாளின் கீழ் வாழ்ந்து வந்தது சுவர்க்க போகம்போல் தோன்றிற்று. வட்டி முடக்கமாக

'இரண்டாயிர ரூபாயையும் பாழாக்கி, தினம் மூன்று வேளை வயிறு நிறையச் சோறும் போட்டு, என் மாமியோ என்னைச் சும்மா திரிய விடுவாள்? அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா? அழுதாலும், சிரித்தாலும், பசித்தாலும், புசித்தாலும், இட்ட வேலைகளைச் செய்தே தீர வேண்டியதாயிற்று. ஆகாரமோ, காலையிலும் இரவிலும் முழுவதும், பகலில் மோருக்கும், உடம்புக்குக் குளிர்மையாகப் பழைய சாதமே. இரண்டுவேளை சுடு சாதம் சாப்பிடும் என்வீட்டு வழக்கமெல்லாம் பறந்துபோய் விட்டது. இதுவுமன்றி, என் புருஷர் முப்பது வயதுக் காளையாய்த் தடிபோலிருக்க, பத்து வயதுக்கு மேலாயும் நான் இன்னும் பெரியவ ளாகவில்லை யென்று, என் மாமி, என்னை அடிக்கடி திட்டுவதும் குறைகூறுவதும் தவிர, கலைக்கொம்பைத் தேய்த்துப் பாலிற் கலக்கிக் குடிக்கத் தந்தும், இலந்தையிலையை எருமைத் தயிரிற் கலக்கித் தந்தும், பலவாறாக என்னைச் சீக்கிரம் பெரியவளாக்க முயன்றாள். என் புருஷர், அவளுக்கு எல்லாப் பிள்ளைகளினும் அருமையாம். ஆகவே, தான் சாகுமுன் அவருக்கொரு பிள்ளைக் குழந்தை பிறந்து, தானதைக் கண்டு களிக்கவேண்டு மென்பது, அவள் பேராசை.

எனக்குப் பன்னிரண்டாவது வயது நடந்துகொண்டிருந்தது. அன்று ஏதோ சுபதினம். என் மாமியார், சாயங்காலம் தன் கடைசிப் பிள்ளையிடத்திற் சொல்லிக் கொஞ்சம் சந்தனம் அரைப்பித்தாள். இராப் போசனம் ஆனபின், என் கணவர், வழக்கம்போல் ஒரு பாயையும் தலைக்கணையையும் எடுத்துக்கொண்டு வாசற் றிண்ணைக்குப் படுக்கப் போனார். என்னைத் தவிர மற்றக் குழந்தைகளெல்லாம் தூங்கி விட்டார்கள். என் மாமியார் என் கணவரை அழைத்து, "குழந்தாய்! வாசலிலே பனி ஜாஸ்தியா யிருக்கிறது. உடம்புக்காகாது. இன்று பாவுள்ளிற் படுத்துக்கொள்" என்றாள். ஒருநாளு மில்லாத

பனி அன்று மட்டும் என்னவென்று நான் சிறிது ஆச்சரியப் பட்டேன். என் கணவர் ஏதோ முணுமுணுத்தார். "இல்லை; என் சொல்லைத் தட்டாதே. உள்ளே படுத்துக் கொள்" என்றாள், என் மாமியார். கையிலெடுத்த பாயையும் தலையணையையும் கீழே வைத்துவிட்டு, என் கணவர் வெளியே போய் விட்டார். என் மாமியார் என்னை நோக்கி, "முத்தம்மா! அவன் பாயை எடுத்துக்கொண்டு போய்ப் பாவுளில் போடு" என்றாள்.

இதென்ன மழை பெய்யுமோ? 'மூதேவி,' 'சனியன்' எல்லாம்போக, எனக்கு 'அம்மாள்' பட்டம் வந்து விட்டது! அப்படியே செய்தேன். அந்தப் பாவுள்ளுக்கு ஒரே வாசல்; சன்னல்களொன்றுமே கிடையாது. அது எட்டடி நீளமும் நாலடி அகலமும் ஐந்தடி உயரமுமிருக்கலாம். நிமிர்ந்து நின்றால் எனக்குக்கூடத் தலையிடிக்கும். சாமான்கள் வைப்பதற்காக, மூன்று பக்கங்களில் சுவர்க்குச் சுவர் பரண்விட்டங்கள் ஒன்றின்மேலொன்றாய்க் கொழுவப்பட்டிருந்தன. இவ் விட்டங்கள் சாமான் பானைகளாலும், வெங்கலப் பாத்திரங்களாலும், பெட்டி கூடைகளாலும், நிறைந்திருந்தன. கதவைத் திறப்பதும் மூடுவதுமே ஜாலவித்தையா யிருந்தது. ஆகவே, இவ்வறைக்குள் ஒரு பாயை விரிப்பது மிகவும் கஷ்டமாயிருந்தது. எப்படியோ பாயைத் திணித்து விரித்துத் தலையணையையும் ஒரு பக்கத்திற் போட்டேன். பின்பு நானும் பார்வதியும் சாப்பிட்டோம். எங்கள் மாமியாரும் நாத்திமார்களும் புருஷர்கள் சாப்பிடும் பொழுதே பலகாரஞ் செய்து விட்டார்கள். நாங்கள் சாப்பிடும் பொழுது, பார்வதி, என்ன என்னவோ சொல்லிச் சிரித்து என்னைப் பரிகாசம் பண்ணினள். ஆனல் எனக்கு அவள் சொன்னதொன்றும் தெரியவில்லை. எங்கள் சாப்பாடு முடிந்து நான் பாத்திரங்களைச் சுத்தி செய்துக்கொண்டிருக்கையில், என் நாத்திமாரில் ஒருத்தி ஒரு கிணணத்தில் சாயங்காலம்

அரைத்த சந்தனத்தைக் கரைத்து, வழக்கம்போல் வாடிய வெற்றிலையின்றிக் கொஞ்சம் நல்ல வெற்றிலையையும் பாக்கு இலவங்கம் சுண்ணாம்பு முதலியவற்றையும் ஒரு தாம்பாளத்தில் எடுத்து வைத்தாள். நான் வேலையை முடித்துவிட்டு வந்து, வழக்கம்போல், "இன்னும் ஏதாவது செய்யவேண்டுமா?" என்று என் மாமியைக் கேட்டதற்கு, "அந்தத் தாம்பளத்தையும், சந்தனக் கும்பாவையும், ஒரு கைத் தீபத்தையும் பாவுள்ளுக்குள் கொண்டு போய் வை" என்றாள். என் கணவருக்கு ஒருநாளுமில்லாத உபசாரங்களும், எனக்கு 'அம்மாள்' பட்டமும் நேர்ந்ததின் காரணம் தெரியாமல் பிரமித்துக் கொண்டு, சொன்ன வண்ணம் செய்தேன். வைப்பதற்கு வேறிடமின்றி வெற்றிலைத் தாம்பாளத்தையும் சந்தனக் கிண்ணத்தையும் பாயின் மேலும், விளக்கை வெகு பத்திரமாய் ஒரு பாண் விட்டத்தின் மேலும் வைத்தேன். பின்பு, என் பாயை எடுத்துக்கொண்டு வழக்கம்போல் அடுக்களையிற் படுத்துக் கொள்ளப் புறப்படுகையில், என் மாமியார், "ஒரு இழவும் தெரியவில்லை இந்த ஜடத்துக்கு. குதிர்போல வயதானதுக்கு ஒன்றையுங் காணேன். நீ இன்று அடுக்களையில் படுத்துக்கொள்ள வேண்டாம்; அவன் வருவன் இப்பொழுது; பாவுள்ளில் போய்ப் படுத்துக்கொள்" என்றாள். முன் வாசகங்களில் 'குதிர்' 'ஜடம்' என்று என்னைக் குறிப்பிட்டிரா விட்டால், இது, பார்வதியை நோக்கிக் கூறிய மொழியென்றே நான் நினைத்திருப்பேன். ஏனெனின், மிக அருமையான சில நாட்களில், அவள் கணவர் படுக்கைக்குப் போகும்படி, என் மாமியார் பார்வதிக்கு அநுமதி யருளுவதை நான் கேட்டதுண்டு. இப்பொழுதோ, ஒருவனைத் திடீரென்று பறந்து போய் அம்புலியைப் பிடித்துவா என்று சொன்னால் எவ்வாறு திகைப்பானோ, அப்படியே திகைத்து நின்றேன். "போ

ஜடமே, போ: பாவுளுக்குள்ளே போ. நான் சொல்லு கிறேன், விழித்துக்கொண்டு நிற்கிறு யென்ன?'' என்று, சினக்குறி தோன்ற என் மாமி பறுபடியும் சொன்னுள். கையில் எடுத்த பாயைக் கீழே வைத்துவிட்டு, மறுமொழி பேசாமல் பாவுள்ளே யடைந்தேன்.

நான் உள்ளே போனபின், மற்றவர்கள், என்னவோ பேசிச் சிரித்துவிட்டுப் படுத்துக் கொண்டார்கள். வெகு நேரமான பின், என் கணவர் பாவுள்ளுக்குள் நுழைந்து, கதவைத் தாழிட்டார். இப்பொழுது நினைத்துப் பார்க் கையில், என் கணவரையும் மாமியையும் நான் அவ்வளவு அதிகம் வெறுத்துப் பகைத்ததற்கு, அன்றென்னைச் செய்த குரூரமான இம்சையும் அவமானமுமே முக்கிய காரணம் என்று தோன்றுகின்றது. நான் உயிரோ டிருக்க வேண்டுமாகுல் என்னைத் தக்ஷணமே வந்து அழைத்துப் போகும்படி, மறு நாளே, யாரும் அறியாமல், என் தமயனுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். 'லேபல்' 'கார்டு' 'காசு' ஒன்றும் இல்லாமையால், அவனே ஒரு அணுவைக் கொடுத்து வாங்கிக் கொள்ளும்படி அனுப்பி னேன். அடுத்த வாரத்தில் என் அத்தையம்மாள் வந்து சேர்ந்து, பெண் பெரியவளாகும் பொழுது செய்யவேண் டிய விசேஷச் சடங்குகளெல்லாம் பிறந்த வீட்டிற் செய்ய வேண்டி யிருக்க, அத் தருணத்தில் நான் புக்ககத்தில் இருப்பது சரியல்லவென்று சொல்லி, என்னைத் தன்னூ ருக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டாள். நாங்கள் போகும்பொழுது, என் மாமியார், எனக்கான மருந்து களும் பக்குவங்களும் என் அத்தைக்கு உபதேசித்தது மன்றி, ஒரு துண்டு கலைக்கொம்பையும் கொடுத்தனுப் பினுள்.

ஆறும் அதிகாரம்.

என் அத்தையின் ஊர் ஒரு குக்கிராமம். அங்கிருக்கும் பொழுது நெய்யும் பாலும் தயிருமாய் நன்றாய்ச் சாப்பிட்டுக் கொண்டு அதிக வேலையின்றித் திரிந்தேன். என் தோழிமாருடன் விளையாடுவதே பொழுது போக்காயிருந்தது. அவர்களிற் சிலர் தெருண்டபொழுது குடியிருக்கப் போய்ப் பாடவேண்டிய பாட்டுக்களை யெல்லாம் மனனம் செய்துகொண்டேன். அவற்றின் அசங்கியமும் மானக்கேடும் எனக்கு அப்பொழுது தெரியவில்லை. கூச்சமின்றி அவைகளைப் பாடிக் குதித்துக் கும்மி யடிப்பதுண்டு. என் அத்தை செத்துப்போனால் மாரடித்துக் கொள்வதற்கான அநேக 'ஒப்பாரிகளும்' 'பலாக்கணங்களும்' எனக்குக் குழந்தை பிறந்தால் சீராட்டுதற்கு வேண்டிய 'தாலாட்டுக்களும்' சொல்லிக்கொண்டேன். ஊரில் எவன் எவளை ஜாடை செய்தழைத்தான், எவள் எவனைப் பார்த்துச் சிரித்தாள், எந்த எந்த வீட்டில் என்ன என்ன சண்டைகள் நடந்தன, இவைபோன்ற வம்புகளில் ஒன்றுவது எனக்குத் தெரியாமலிராது. முதலில், கொஞ்சம் மறுபடியும் வாசிக்கலாமென்ற ஆசையுடன், இரண்டு மூன்று நாள்களுக்குப் புஸ்தகமும் கையுமாயிருந்தேன். அதைக் கண்டவுடன், அவ்வூர்ப் புருஷர் பெண்கள் யாவரும், "வெகு லக்ஷணம்: ஆம்படையான் பில்லுப்பிடிச்சுப் பண்ணிவச்சு ஆமசிராத்தம் வாங்கறான்; பெண்டாட்டி பொஸ்தகமும் கையுமா இலங்கறாள். வெகு லக்ஷணம்" என்று கேலி பண்ணத் தொடங்கி, என் சமாசாரமே ஊரிற் பெரிய வம்பாய்விட்டது. உடனே புஸ்தக்க் கடையைக் கட்டிவிட்டு, வெகு சீக்கிரத்தில், மேற்கூறியபடி ஊர்வம்பை அளப்பதில் ஒருவரும் இணையெதிரில்லை என்று சொல்லும்படி பேரெடுத்துவிட்டேன்.

ஆனால் இவ் வாழ்வெல்லாம் சிலமாதக் காலமே; ஏனெனின், நான் பெரியவளானவுடன், பதினாறு நாள்களுக்குள்ளேயே ஒரு சாந்தி முகூர்த்தத்தை வைக்க, நான் மறுபடியும் என் மாமியின் கீழ் வாழும்படி நேர்ந்தது. என் புக்ககத்தில் என்னைக் குறைகூறி ஏசக் கூடாதென்று, என் தமயன் அனுப்பிய இருநூறு ரூபாவுடன் என் அத்தையும் நூறு ரூபாவரை செலவழித்து, என்னைத் தக்க சீருடன் புருஷன் வீட்டுக் கனுப்பினாள். ஆனால் இவையெல்லாம் என் மாமிக்கு ஒரு திரணமாகவே தோன்றிற்று. அவள் பேசுவதைக் கேட்டவர்கள், அவள் மலையாளத்து மஹாராஜாவுடன் பிறந்தவளென்றே நினைப்பார்கள். "ஒரு கட்டிலா, வெங்கல உருளியா, கம்பிக் குத்துவிளக்கா, ஒன்றையும் காணோம். மனோகரங் கூடக் குறுணிக்கு மேலிராது. சிப்பிலுக்கும் சிப்பில், ஆப்பைக்கும் சிப்பில், கொப்பரைக்கும் சிப்பிலென்று நாட்டுப் பெண் ஆத்துக்கு வந்திட்டாள், நாட்டுப் பெண். குறைச்சலில்லை பாக்கியத்துக்கு. என் பிள்ளைக்கு ஒரு அரைநாணா, மோதிரமா, கடுக்கனா, ஒன்றையும் காணோம்' நாங்கள் கொண்டு கொட்டின ரூபாவை யாவது திருப்பித் தந்தாலும், இன்னும் எவ்வளவோ விமரிசையாயிருக்கும். ஊர்க் கேலி, நாட்டுக் கேலியாச்சு" என்று, என் மாமியார் திரட்சி முகூர்த்தத்தன்று முதலே ஏசத் தொடங்கினாள். எனக்கு இவற்றையெல்லாம் கேட்கச் சில சமயங்களிற் கண்ணீர் பெருகிற்று. சில சமயங்களில் நானும் பதிலுக்குப் பதில் நன்றாய்க் கொடை கொடுத்தேன். இப்பொழுது நினைத்துப் பார்க்குங்கால், அக்காலத்து என் குணக் கேடும் நடவடிக்கைகளும் மிகவும் அருவருக்கத் தக்கனவாய்த் தோன்றுகின்றன. அவ்வாறொழுகியவள் நான்தானோ என்ற சந்தேகங் கூட உண்டாகிறது.

என் புக்ககத்தில் நான் முன்பிருந்த பொழுது, உயிர் பிழைப்ப தரிதென்று நான் பாயும் கிடையுமாய்க் கிடந்த

காலத்திலுங் கூட, என் கணவர் என்னுடன் பேசத் துணி கிறதில்லை. என்னைக் குரூரமாய் அவமானப் படுத்திய வன்று இரவுதான் அவர் என்னுடன் முதல் முதல் பேசினார். இப்பொழுது மனையாட்டியும் மணவாளனுமாக வாழும்பொழுதும், படுக்கை அறையிலன்றி, அவரென்னுடன் பேசுகிறதில்லை. பகலில் அவர் முன் நான் இருக்கிறது மில்லை, நிற்கிறது மில்லை. சாதாரண மனிதருக்கு வருஷத்தில் இருபது நாள் விசேஷ தினங்கள் என்றால், வைதீகாநுஷ்டானம் உள்ளவருக்கு இருநூறு நாள் அப்படியாம்; மிகுந்த சிறு பாதியில், அநேக நாள்களில், ஜீவனார்த்தமாய் வெளியூர் சென்றதனாலாவது, அல்லது சிராத்த வீடுகளில் நிமிந்திரணம் சாப்பிட்டதனாலாவது, என் கணவர் என்னுடனிருக்க முடியாமற் போய்விடும்; இவை நீங்கிய மிகவும் சில தினங்களில், வீட்டில் யாதானும் அசௌகரியங்களினாலும், என் மாமியின் பொறாமையினாலும் சில நாள்கள் கழிந்துபோம்; ஆகவே, என் கணவருடன் நான் சேர்ந்திருக்கும் தினங்கள் மாதத்தில் இரண்டு மூன்று நிகழ்ந்தால் அதிகம். என் சரித்திரத்தில் நான் உண்மையையே உரைப்பதாகச் சித்தாந்தம் செய்து கொண்டிருக்கிறேன். அப்படியே செய்கிறேன். இவ் விஷயத்தைப் பற்றி எனக்குச் சிறிதும் மனவருத்தமில்லை; உள்ளுக்குள் சந்தோஷமே. எனக்கு என் கணவர்மேல் ஆசையே யில்லை; அவர் நடவடிக்கைகளினால் கொண்டவன் என்ற மரியாதையும் நாளுக்குநாள் குறைந்துவிட்டது. அவர்மேல் இஷ்டமா யிருப்பதாகப் பாசாங்கு செய்து அவரை என் கைவசப் படுத்த நான் எப்பொழுதாவது முயன்றால், அது, எனக்குப் பிரியமான காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் பொருட்டும், என் மாமியின் உபத்திரவத்தை மட்டுப்படுத்தும் பொருட்டுமே. ஆயின், இதுவும் உண்மையே: நான் வேறொரு புருஷனையும் இச்சிக்கவு மில்லை. காதல் இன்னதென்பதை நான் அப்பொழுது அறியவே யில்லை.

இவ்வாறு ஒரு வருஷகாலமாய் நான் குடித்தனஞ் செய்து வருகையில், என் தமயன் சுப்பிரமணியனுக்குக் கலியாணம் நடந்தது. அவனுக்கு பி. ஏ. பரீக்ஷை தேறி திருவநந்தபுரத்திலேயே அவன் பி. எல். பரீக்ஷக்கு வாசித்துக்கொண் டிருந்தான். அவனையறிந்த எங்கள் குலத்தார் ஒருவர், பெரிய பணக்காரர், அவனுக்குத் தன் மகளை விவாகம் செய்து கொடுத்தார். என் புக்ககத்தாருடன் நான் இக்கலியாணத்துக்குச் செல்லும்பொழுது, வீட்டுக்குக் காவலாக விடப்பட்டிருந்த என் 'ஓர்ப்படி' யைத் தவிர, மற்ற யாவரும் ஒரே வண்டியிற் சென்றோம். முதலில் நான் வண்டியிலேறிக் கொண்டு வண்டிக்காரன் பக்கத்திற்போ யுட்கார்ந்து கொண்டேன். பின்பு, என்னை என் புருஷர் பாராத வண்ணம், ஒரு திரை வண்டியினூடே கட்டப்பட்டது. மறுபுறத்தில் என் மாமியும் மைத்துனர்களும் குழந்தைகளும் எனக்கு மூத்தாள் குழந்தைகளும் ஏறிக் கொண்டார்கள். வழி யெல்லாம் அவர்கள் பக்ஷணங்கள் தின்றுக் கொண்டும், ஊர்வம்பளந்துக் கொண்டும், கதைபேசிக் கொண்டும், சிரிப்பும் கும்மாளமுமா யிருந்தார்கள். நானோ, பெருமூச்சுக்கூட விடத் துணியாமல், வண்டிக்காரனை துணையாக, ஒற்றை மரத்துக் குரங்குபோல உட்கார்ந்திருந்தேன். வண்டி யாடுவதனாலும், அவர்கள் விழுந்து விழுந்து சிரித்ததனாலும், நான் சில வேளை வண்டிக்காரன் மேலே இடிெ ான்று சாய்ந்து விழும்படி கூட நேர்ந்தது. கலியாணத்தில் என் மாமி செய்த கலகத்துக்குக் கணக்கு வழக்கில்லை. தன் பிள்ளைக்கு வாங்கிப் பரிசு கொடுத்த சோமனில் சரிகை அகலமா யில்லையென்றும், தங்களை மூன்று தரம் சாப்பிடக் கூப்பிடவில்லை யென்றும், சம்மந்தி மரியாதை தக்கபடி செய்யவில்லை யென்றும், தனக்கனுப்பிய இட்டலி தோசைகள் மிகக் குறையென்றும், தான் ஏழையானதால் தன்னை அவ்வாறு அவமானப் படுத்தினார்

கஷென்றும், தன் பிள்ளைகளுக்கு வைதிக தக்ஷிணை யோக்கியதைக்கு ஏற்றபடி கொடுக்கவில்லை யென்றும், வேண்டாத பெண்டாட்டி கால் பட்டால் குற்றம் கை பட்டால் குற்றம் என்றாற் போல, இன்னும் அநேக முகாந்தரங்களைக் கொண்டும், ஓயாமற் சச்சரவு செய்தாள். அவள் குணத்தையறிந்தபின் அவள் கோபத்தை ஒருவரும் மதியாமையைக் கண்டு, அவள் ஆவேசம் கொண்டு, மூன்றாவது நாள் கலியாணத்தன்றே ஊருக்குத் திரும்பிவிட்டாள். யார் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை; என்னை விட்டுப் போகும்படி என் தமயனும் அத்தையும் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டதற்கும் இணங்கவில்லை. ஆகவே, கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு நானும் அவளுடன் திரும்பிவிட்டேன். என் கணவரும் மூத்த மைத்துனரும் மட்டும், மிகுந்த தினங்களிற கிடைக்கக் கூடிய தக்ஷிணைக்காக அங்கே தங்கினார்கள். இச் சம்பவத்துக்குப் பின், என் வாழ்க்கை முன்னிலும் அதிகத் துக்ககர மாயிற்று. என் தமயனோ, திருவநந்தபுரம் போய்விட்டான். என் அத்தை யம்மாள், தாயினும் அருமையாக என்னைச் சீராட்டி வளர்த்து வந்த புண்ணியவதி, அனாதையான எனக்கு ஒரு கொள்கொம்பு போலிருந்தவள், நான் கடைசியாக ஒரு முறை அவள் முகத்தில் விழிக்கவும் முடியாதபடி, அடுத்த மாதத்தில் திடீரென்று அனாயாச மரணத்தை அடைந்து விட்டாள். நான் கோலிழந்த குருடனைப்போ லாய்விட்டேன்; அடித்தாலும் அணைத்தாலும், அழுதாலும் சிரித்தாலும், இருந்தாலும் இறந்தாலும், என் கொடிய மாமியைத் தவிர வேறு கதி யில்லை. என் மாமியோ முன்னிலும் பதின் மடங்கு கொடுமையாய் என்னை நடத்தலானாள். நான் வீட்டுக்கு வந்த மூன்றாவது மாதம் முதலே, என்னை 'மலடி' என்று திட்டத்தொடங்கி விட்டாள். இப்பொழுது ஒவ்வொரு பேச்சிலும் இவ் வேச்சும் கலக்கப் பட்டது. தன் விருத்தாப்பியத்தில் தன் அருமை மக

னுக்கு ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்து தான் கண் குளிரப் பார்க்க முடியவில்லை யென்று என்னைப் பலவாறு திட்டினாள். நாழி அரிசியும் மூன்று மிளகாய்ப் பழமும் தின சரிப் படியாக என்னை விலக்கி வைத்து விடுவதாகவும், வேறொரு பெண்ணை என் புருஷருக்குக் கலியாணம் செய்து வைப்பதாகவும், என்னை வெளியே துரத்திவிடுவதாகவும், பாழுக்கிறைத்தது போல் தன் பணமெல்லாம் வீண் போயிற்றென்றும், மலடி முகத்தில் விழிக்கவும் ஆகாதென்றும் என்னை ஏசிப் பயமுறுத்தினாள். ஒருவேளை அவ்வண்ணம் செய்துவிடக் கூடுமென்று பயந்து, நான் பதிலே பேசுகிறதில்லை. எப்பொழுதும் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு, வீட்டில் எவராயினும் காலால் இட்ட வேலையைத் தலையாற் செய்து கொண்டு, நடைப் பிணம் போல வாழ்ந்து வந்தேன். என் சரீரத்தின் சுபாவமான சதைப்பற்றை நோக்கி மலட்டுத்தம் என்று ஏசவே, அதைக் குறைக்குமாறு, அரை வயிறும் கால் வயிறும் உண்டு பட்டினியாய்க் கிடந்து வந்தேன். இம்மலட்டுப் பட்டத்தை நீக்குமாறு, அரசமரத்தையும் கோவில்களையும் சுற்றுத வண்ணம் சுற்றியும், வெளியூர்க் கோவில்களுக்கு மாசாந்தம் நடந்தும், என் கால்களும் ஓய்ந்தன. அந்தோ! ஒருவரும் அறியாமல் பானையிலிருந்த அரிசியைத் திருடிக் குறத்திக்குக் கொடுத்துக் குறி கேட்டேன். அந்த முண்டை என் இஷ்டப்படி யெல்லாம் சொன்னாளே யன்றி ஒன்றும் நடக்கவில்லை; மலட்டுப் பட்டத்துடன் திருட்டுப் பட்டமும் கிடைத்ததே பலனாயிற்று. ஏச்சும் திட்டும் மாத்திரமின்றி, என் மாமி எனக்கு அநேக மருந்துகள் தந்தாள். எவ்வளவு கசப்பா யிருப்பினும் மனத்தைப் பொறுத்துக்கொண்டு அவைகளை யெல்லாம் சாப்பிட்டேன். கடைசியில், ஒன்றும் பயன்படாமையைக் கண்டு, என் மாமி, என்னைப் பிள்ளைப் பூச்சியை விழுங்கச் சொன்னாள். அது சேற்றிற் கிடக்கும் பூச்சி யொன்று; மிகவும் அசங்கியமானது; பயங்கரமானது; அதைக்

காணவே நான் பதறுவேன். அதை உயிரோடு விழுங்குவ தெப்படி? ஒரு கனிந்த வாழைப் பழத் துண்டத்துக்குள் ஒரு பூச்சியை வைத்து என்னை விழுங்கச் சொன்னாள். அதைக் கையில் வாங்கவும் நான் பதறியதால் அவளே அதை என் வாயிற் போட்டாள். நான்கு முறை மனங் குமட்டி வாந்தி செய்துவிட்டேன். கண்விழி பிதுங்கி விட்டது. எப்படியானால் என்ன? என் மாமியோ விட்டுக் கொடுப்பவள்? கடைசியில் அவள் திட்டுக்கும் அதட்டுக் கும் அஞ்சி, எவ்வண்ணமோ ஒரு பூச்சியை விழுங்கி னேன். அன்று முழுவதும் மனங் குமட்டி ஒவ்வொரு நிமிஷமும் வாந்தியாகி விடும்போலிருந்தது; என் மாமி அதட்டிக் கொண்டே இருந்தாள். இதே மாதிரியாக நாலைந்து பூச்சிகள் விழுங்கியும் ஒன்றும் பயன்படவில்லை. இன்றைக்கும் அந்தப் பூச்சியைக் கண்டால் என் மனம் நடுங்குகின்றது; வாந்தி வருவதுபோல் குமட்டுகின்றது. இவ்வளவுமன்றி, அக்காலத்தில் நான் ஒரு கொடிய வயிற்றுவலி நோயால் பீடிக்கப்பட்டேன். மாதந்தப்பாது அந்நோயால் நான் பட்ட கஷ்டம் கடவுளுக்கே தெரியும். பெண்ணாகப் பிறந்ததினும் பேயாகப் பிறந்திருந்தால் நலமா யிருந்திருக்கு மென்று தோன்றிற்று. 'பெண் ஜன்மமோ புண் ஜன்மமோ' என்று என் அத்தையம்மாள் சொல்லுவது அடிக்கடி நினைப்புக்கு வந்தது.

மருந்துகள் பயன்படாமையையும் என் நோயையும் கண்டு, என் மாமி, எனக்குப் பேய் பிடித்திருப்பதாக நிச்சயித்தாள். இதன்பின் ஒரு பேயோட்டும் மந்திரவாதி வந்து வீட்டிற் பூசை செய்யத் தொடங்கினான். நான் தினமும் அதிகாலையிலெழுந்து ஸ்நாநம் செய்து, பூஜா பாத்திரங்களைச் சுத்தி செய்து, பூஜைக்குத் தயார் செய்வேன். அதற்குள் மந்திரவாதியும் நீராடிவந்து நான் போட்டிருந்த மாக் கோலங்களின்மேற் பல வர்ணப் பொடி களாற் கட்டங்கள் வரைந்து, அநேக தீபங்கள் வைத்து, அறை யெங்கும் சாம்பிராணிப் புகையால் மூச்சு முட்ட,

ஜபம் செய்வான்; நான், ஸ்நாநம் செய்த ஈரப்புடவையோடு, அவன்முன் உட்கார்ந்திருப்பேன். இவ்விதமாகப் பன்னிரண்டு மணிவரையும் பூஜை நடக்கும். அதுவரையும் எனக்கு ஒருவித ஆகாரமும் கிடையாது, உலர்ந்த வஸ்திரமும் கிடையாது. பின்பு, முதலில் அவன் ஜபித்த வெண்ணெய்யை விழுங்குவேன்; அப்புறம் பகல் போஜனம். இம்மாதிரியாக இரவிலும், பகலிலும் பத்து மணி வரையும் பூஜை நடக்கும். முதலில் இரண்டு மூன்று நாள்களுக்கு ஒன்றும் பலிக்கவில்லை. நான்காவது நாள் எனக்கு ஒருவித மயக்கமும், சோர்வும் உண்டாயிற்று; மறுநாள் உணர்வழிந்து கட்டையாய்க் கிடந்தேனும். இதைக் கண்டவுடன் மந்திரவாதி சந்தோஷங் கொண்டான்; என் மாமியும் ஒக்கலில் பேரனையே அடைந்துவிட்டது போல் மனம் பூரித்தாள். பின்பு, "நீ யார்? நீ யார்? சொல்லு; உனக்கென்ன வேண்டும்?" என்று என்னைக் கேட்டுப் பயமுறுத்தினார்கள். மறுநாள் முதல் நான் தலை சுற்றியாடவும், அவர்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் பிதற்றவும், தொடங்கி விட்டேனும்; உண்மையாகவே, எனக்குப் பேய் பிடித்து விட்டது. சில நாள்களில் தன்னுணர்வழிந்து சாப்பாடே இன்றிக் கிடந்தேன். சில நாள்களில் தன்னுணர்வு வந்தபொழுது, பேயாட்டத்தாலும் பட்டினியாலும் உயிர்போவதுபோற் சோர்வுற்று, சகித்தற்கரிய தலை நோவினாலும், மந்திரவாதி தன் பிரம்பினாலும் புளியின் மலார்களினாலும் அடித்த அடிகள் மேலெங்கும் தடித்து இரத்தம் குழம்பிக் கசிவெடுக்கும் நோவினாலும், வருந்தினேன். என்னுவினை எடுத்துப் போம்படித் தெய்வங்களை யெல்லாம் வேண்டி வேண்டிப் பரிதபித்தேன். இரண்டு மூன்று மாதங்களுக்கு இவ்வாறாகப் பேயும் நோயுமாக இருந்தபின், மந்திரவாதி, கிடைக்கக் கூடியதை யெல்லாம் பெற்றுக்கொண்டு, எனக்குப் பலிகழித்து ரக்ஷாபந்தனஞ் செய்துவிட்டுப் போய்விட்டான். அப்பொழுது என் சரீரம் ஒரு துரும்பு போலிருந்தது; தலையில் மயிரேயில்லை என்று சொல்லலாம்;

நடப்பதே அருமையா யிருந்தது. ஆனால், உடம்பு தேறியவுடன் எல்லாம் குணமாகிக் கர்ப்ப உற்பத்தியுமாகு மென்று எல்லோரும் வீணே எதிர்பார்த் திருந்தார்கள்.

ஏழாம் அதிகாரம்.

இவ்விதமாக நான் கஷ்டப்பட்டு வரும் காலத்திலே ஒரு நாள், பட்டகாலிலேபடும் என்ற பழமொழிக்கிணங்க, ஒரு பிராமணப் பெண்ணுக்கு நேரிடக் கூடிய கஷ்டங்கள் எல்லாவற்றிலும் இணை யெதிரின்றி மேலான கொடும் விபத்தாகிய வைதவ்வியமும் எனக்கு நேர்ந்தது. ஊரிலே பேதியுபத்திரவம் நடமாட்டமா யிருந்தது. ஒரு தன வான் வீட்டில் பிராமணார்த்தம் சாப்பிட்டிருந்த என் கணவருக்கு, மறுநாள் காலையில் இரண்டு மூன்று முறை பேதியாகி, மாலை மூன்று மணிக்குள் அவர் தேகவியோக மடைந்தார். அருமை மகனை யிழந்த சோகத்தில், என் துர் அதிர்ஷ்டத்தினாலேயே அவ்வாறு நேர்ந்ததென்று, என் மாமி, என் காலின்கீழ் அடித்துக் குதித்து அலங்கோலஞ் செய்தாள். எனக்கோ, துக்கத்திலும் பயமே அதிகமா யிருந்தது. எனக்கிரங்கி என்மேல் அன்பா யிருப்பவர் கள் ஒருவருமே அங்கில்லை. சவங்கழுவ நீர் கொணரப் போகும் பொழுதே, நாலைந்து கைம்பெண்டாட்டிகள், "நீயும் வந்தாயா எங்கள் கூட்டத்துக்குள்; வா; வா!" என்று மனமகிழ்ந்து வரவேற்பார்போல, என்னைக் கட்டி அணைத்து, நாற்புறமும் மெய்காவலா யிருந்து, என்னை இழுத்துச் சென்றார்கள். பத்து நாட் கழிந்தவுடன் என் தாலியை வாங்கித் தலையைச் சிரைத்து எனக்குக் கோடி போட்டு விட்டார்கள். பேயாடிப் பிழைத்தபின் சுருள் சுருளாய் வெகு அழகாய் வளர்ந்து வந்த என் தலை மயிரை யெல்லாம், அம்பட்டன் ஒரு நிமிஷத்தில் களைந்தெறிந்து விட்டான். நடைப் பிணமா யுலாவியதும் போய், விழு பிணம்போல, முக்காடு போட்டுக்கொண்டு ஒரு மூலையிற்

கிடந்தேன். தட்டுத்தடை மட்டுமரியாதையின்றி, எல்லாத் துன்பத்துக்கும் நானே காரணம் என்றும், எனக்குப் போடும் சோறு வீண் சோறென்றும், என் மாமி பேசிய தெல்லாம் என்னை ஊடுருவிப் பாய்ந்தது. எனக்கு என் தமயனைத் தவிர வேறொருவரு மில்லை; அவனோ, தூர தேசத்தில் தனியே வாசித்துக் கொண்டிருந்தான்.

முதலிற் சில நாட்களுக்கு, என்னை வேலையேவாமல், தினம் ஒரு வேளை பகலில் இரண்டு மணிக்கு, எனக்குச் சோறு போட்டுக்கொண்டு வந்தார்கள். பின்பு அந்த மரியாதையும் போய் வேலை செய்யவேண்டிய தாயிற்று. வெளியில் யார் கண்ணுக்கும் தென்படக் கூடாதாகையால், விடியற்காலம் மூன்று மணிக்கே எழுந்து வீட்டையும் பாத்திரங்களையும் சுத்தி செய்து, வீட்டிலுள்ள பெரும் பாத்திரங்களை யெல்லாம் கொல்லைப்புற வாய்க்கால் நீரால் நிரப்பிப், பின்பு, இரவு படுத்துக்கொள்ளும் வரையும் வீட்டிற்குள் உள்ள வேலைகளை யெல்லாம் செய்துவந்தேன். வீட்டு முன்வாசலைச் சுத்தஞ் செய்து கோலமிடுவதும், என் மைத்துனருக்கு அன்ன மிடுவதும் தவிர, மற்ற வேலைகளை யெல்லாம் பெரும்பாலும் நானே செய்யவேண் டிய தாயிற்று. பகலில், யாவரும் சாப்பிட்டானபின், மீந்ததைப் போட்டுக்கொண்டு இரண்டு மணிக்குச் சாப் பிடுவேன். இரவில், என் மாமியும் நாத்திமார் இருவரும் தோசை அடை கொழுக்கட்டை முதலிய பலகாரம் உண் பர்; அவர்கள் உண்டபின் ஏதாவது மீதியிருந்தால், “அடி யே! நீயும் தின்னறையோடி?” என்று கேட்பாள் ஒருத்தி. நான் வாய் திறக்குமுன், “இப்போதானே சாப்பிட்டாள்: எப்படி வேண்டியிருக்கும், இழவு? ஆம்படையானைத் தின்னால் வயிறு கசமாய் விடுமா?” என்று மற்றொருத்தி கூறுவாள். இதைக் கேட்டவுடன், நான், “எனக்குப் பசியில்லை” என்பேன். “ஆனால், வைத்து மூடிவை; உதயத்திலே குழந்தைகள் தின்னும்” என்று சொல்லி விட்டுப் போய்விடுவார்கள். வீட்டில் யார் சாப்பிடினும், இலை யெடுத்து எச்சிலைச் சுத்தம் செய்வது என் சுதந்

தாம்; சாணியினால் வீடு மெழுக்கிடுவதும், மாட்டுக் கொட்டிலைச் சுத்தம் செய்வதும் அப்படியே; தினமும் என் மாமிகளைந்த வஸ்திரத்தையும், குழந்தைகள் துணிகளையும், அநேக நாட்களில் யாதாயினும் ஒரு காரணம் பற்றி மற்றவர் வஸ்திரங்களையும், தோய்த் துலர்த்துவதும் என் சுதந்தரமே; தோசை, அடை, வடை, சுகியன் முதலியவற்றை நான் உட்கொள்வது மட்டும் தோஷமேயன்றி, எவ்வளவாயினும் அவற்றிற்கு மாவரைப்பதெல்லாம் நானே. வீட்டில் எவருக்கு எவ்வித நோய் வரினும், வயல் சரியானபடி விளையா விடினும், பசுமாடு கடாரியின்றிக் காளையை ஈனினாலும், புருஷர் வெளியே சென்ற காரியம் ஏது விக்கினமானாலும், குடும்பத்துக்கு எவ்வளவு அற்பமான விபத்து நேர்ந்தாலும், என்னையே எல்லாவற்றிற்கும் காரணமாக்கி, "இந்தக் கரிமுண்டை வீட்டிற்குள் காலெடுத்து வைத்த நாள் முதல் இப்படித்தான்; இந்தச் சனியன் எப்பொழுது தொலையுமோ? இது ஒழிந்தால்தான் க்ஷேமம் பிறக்கும். பணத்தையும் கொடுத்துப் பிணத்தையும் சுமந்த கதையாக, சோற்றையும் போட்டு இந்தக் கரிக்கா்லியை வைத்திருக்க வேண்டியிருக்கிறது" என்று, என்னைத் திட்டினார்கள். துக்கத்தினாலும், வர்தாடி வழக்கிடுவதற்கு உடம்பில் சக்தி யில்லாமலும், ஏதாவது அதிகமாய்ப் பேசினால் வெளியே அடித்துத் துரத்திவிடுவார்களென்று பயந்தும், ஒன்றுக்கும் வாய் திறவாமல், நாய்போல் உழைத்து வயிறு வளர்த்து வந்தேன். அம்மம் பஞ்சதர்ரையாகிவிடும் அளவு நான் அனாதையாவேனென்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. இப்பொர்ழுதோ அப்படியாய் விட்டது.

இதனிடையில், வீட்டுக்கு மாப்பிள்ளையும், என்னுடன் ஒரே பந்தரில் விவாகமான என் மூத்தாள் பெண்ணுடைய மணவாளனுமானவன், வேட்டகம் கொண்டாட வந்தான். அவன் தனவான் வீட்டுப் பிள்ளை; மூலைத் தாருக்கும் சாந்துப் பொட்டுக்கும் மார்காணி வட்டக் குடுமிக்கும் அர்த்தக்ஷவரத்துக்கும், 'குசால்' நடவடிக்கை

களுக்கும் வேண்டிய அளவு மட்டும், இங்கிலீஷ் படித்து நிறுத்தியவன். 'ஸார்,' 'ராஸ்கல்,' 'டாம் பெகர்' என்ற வார்த்தைகள் எப்பொழுதும் அவன் பேச்சில் வந்து கொண்டேயிருக்கும். சாப்பிடும் வேளை தவிர மற்றவேளை மேலங்கி யின்றி இருக்கவே மாட்டான்; இவற்றை யெல்லாம் கண்டு வீட்டில் யாவருக்கும் அவன்மேல் மிக்க பக்ஷம். என் மாமி அவனுக்குச் செய்த உபசாரத்துக்கு அளவு சங்கை இல்லை. விருந்துகளும், படுக்கயறைப் பக்ஷணங்களும், சந்தனபுஷ்ப தாம்பூலங்களுமாய் வீடெங்கும் முழங்கிற்று. என் மூத்தாள் பெண் சுந்தரியோ, தேவலோகத்தி லிருந்து குதித்தவள் போல, ஒரு முழம் உயர்ந்து விட்டவள்போல, கால் வீச்சும் கை வீச்சுமாய்ப் பெருமை குலாவி உலாவி வந்தாள். அவர்கள் நீராடுவதற்கு வெந்நீர் போடுவதும், எண்ணெய் காய்ச்சிச் சீயக்காய் அரைப்பதும், அவர்களுக்காக விருந்துகளும் பக்ஷணங்களும் செய்வதுமே என் வேலையாயிற்று. ஒரே பந்தவில் 'கலியாணமான இருவருக்குள், அவள் அதிர்ஷ்டம் அப்படியும் என்கதி இவ்வாறு மானதை நினைந்து வருந்தினேன். பேர் மட்டும் 'சுந்தரி'யே அன்றி, அவள் அவலக்ஷணமான கறுப்பி. வெகு 'குசால்' பேர்வழியும் அழகானவனுமான அவள் யௌவன புருஷனுக்கு அவள் மேல் அதிக ஆசை யிராதென்று நான் எண்ணினேன். என் சந்தேகம், நான் சிறிதும் எதிர்பாராத விதமாக, விரைவில் ருசுவாகியது. என் அழகைப் பற்றி நானே சொல்லிக்கொள்வது தகுதியல்ல; ஆயினும், என் அவகோலத்திலும் கூட, நான் சுந்தரியைவிட எவ்வளவோ அழகுள்ளவள் என்பது கேவலம் உண்மையே. என்னைக் 'கரிமுண்டை' என்றால், அது நிறம்பற்றியன்று. அவளைக் 'கரிச்சுமங்கலி' 'தடிச்சுமங்கலி' என்றால் முற்றும் பொருந்தும். வந்து இரண்டு மூன்று நாள் ஆகுமுன், சுந்தரி புருஷன் என்னை அடிக்கடி வெறித்து நோக்குவதையும், புன்சிரிப்பாய்ச் சிரிப்பதையும், நான் செல்லும்

இடங்களுக்கு அடிக்கடி வருவதையும், கண்களால் ஜாடை காட்டுவதையும் நான் கவனித்தேன். என் மனம் பதை பதைத்துத் தத்தளித்தது. கோபமும், வெறுப்பும், துக்கமும், நாளுக்குநாள் அதிகரித்தன. என் மனம் சிறிதும் அவன்மேற் செல்லவில்லை. ஒரே ஒருநாள் மட்டும், அவனைக் கைவசப் படுத்திக் கொண்டு அவனுடன் எங்காயினும் ஓடிப்போய் விடலாமென் றெண்ணினேன். இவ்வெண்ணம், என் புக்ககத்துக்காரர்மேல் பழி வாங்க வேண்டுமென்ற ஆசையால் உதித்தது. ஆனால் அது உடனே அவிந்து போயிற்று. யாரிடத்தும் சொல்லப் பயந்தும், அவன் சீக்கிரம் ஊருக்குப் போய்விடுவான் என்றெண்ணியும், அவன் சேஷ்டைகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் நடந்துவந்தேன். என் நல்லதிர்ஷ்டத்தால், சுந்தரியை அழைத்துக் கொண்டு அவன், ஒரு வாரத்துக்குப் பின் தன்னூர் போய்விட்டான்.

இவ்வாறு பலவிதத் துன்பங்களுக்கு உள்ளாகி நான் அடிமை வேலை செய்து வரும்பொழுது, ஒரு நாள், என் கையில் ஒரு தேள் கொட்டி விட்டது. சகிக்க முடியாத நோவுடன் நான் கஷ்டப்படுகையில், என் நாத்தனார் ஒருத்தி, மூன்றுபடி அரிசியை எடுத்து வைத்துத் தோசைக்கு அரைக்கச் சொன்னாள். தேள் கொட்டிற்று என்று சொன்னதற்கு, என் மாமி, "நன்னாயிருக்கு! உதட்டிலே புண்ணும் மாடு கறக்கப்படலையாம்! வேலைக் கள்ளிக்குப் பிள்ளைமேலே சாக்கு. இடது கையிலே தேள் கொட்டினால் ஆலம் விழுதுபோல வலதுகை தொங்கறதே. அதுக்கென்ன வந்தது? அந்தக் கையிலே பாம்பா கடிச்சிருக்கு?" என்றாள். "ஒரே போக்காய்ப் பாம்பு கடிச்சு நான் ஒழிஞ்சுட்டால் எல்லாருக்கும் தேவலை" என்று நான் பதிற் சொன்னேன். "அப்புறம் காடெல்லாம் எலும்பாய்த்தான் போய்விடும்" என்றாள் என் நாத்தனார். அதுவுமன்றி, அரிசியை என் பக்கத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டாள். துக்கம் பொறுக்காமல் கண்ணீர் ஆறாகப் பெருக, மனம் நொந்து மயங்கி, பிராணனை விட்டுவிடுதலே

நலமென்று ஒரு வெறியில் தீர்மானித்து, உடனே எழுந்து கொல்லைக்குப் போனேன். அக்கம்பக்கம் ஒருவருமில்லை. ஐந்தாறு கல்லுகளைப் பொறுக்கி மடியில் வைத்துக் கட்டிக் கொண்டு, இரண்டு கண்களையும் இறுக மூடிக் கொண்டு, கிணற்றுக்குள் குதித்து விட்டேன்.

எனக்கு மறுபடியும் பிரக்ஞை வரும்பொழுது நான் வீட்டு நடையில் கிடந்தேன். நான் பிழைத்து விட்டதை அறிந்தவுடன், எல்லாரும், 'நீலி' என்றும் 'சாகசக்காரி' என்றும் என்னைச் சண்டைப் பிடித்தார்கள். போதாக் குறைக்கு, இதை எப்படியோ கேள்விப்பட்டு வந்த 'போலீஸ்காரன்,' ஒன்று மில்லை, தவறி விழுந்துவிட்டேன் என்று மறைப்பதற்காக, இருபது ரூபா கழற்றி விட்டான். இதை யறிந்தவுடன், என் மாமி, நாத்திமார், ஓர்ப்படி எல்லோருமாக என்னைத் திட்டி ஏசி, நான் ஒரு முண்டையினாலேயே குடும்பத்துக்கு எல்லாக் கேடும் வருகிறதென்று வைதார்கள். அடங்காத துக்கத்துடனும் கோபத்துடனும், "நீங்கள் என்னிலும் பெரிய முண்டைகள் மூன்று பேரில்லையோ?" என்று கேட்டேன். உடனே அவர்கள் என்னை மேல் விழுந்து அடித்து அலங்கோலஞ் செய்து, "இனிமேல் ஒரு நிமிஷமும் நீ இந்த வீட்டி லிருக்கக்கூடாது; இறங்கு வெளியிலே" என்று, நடுத்தெருவில் தள்ளிவிட்டார்கள். உடுத்திருந்த புடவையைத் தவிர வேறு இரண்டாம் புடவையுமின்றி, அண்டை வீடு ஒன்றிற்போய் அடைக்கலம் புகுந்தேன்.

எட்டாம் அதிகாரம்.

ஒரு வாரத்தில் என் தமயன் சுப்பிரமணியன் வந்து சேர்ந்து என்னைத் திருவநந்த புரத்துக்கு அழைத்துச் சென்றான். என் புக்ககத்தார் எனக்கு 'அறுப்புக் கூலி' ஒன்றுமே தரவில்லை. என் பிறந்த வீட்டிற் போட்ட சில நகைகளைக்கூட, முன்பே அழித்தாய் விட்டதென்று பொய்

கூறி, வைத்துக்கொண்டு விட்டார்கள். அவர்களுடன் வழக்காட விருப்பமும் அவகாசமுமின்றி, சுப்பிரமணியன் என்னை அழைத்துச் சென்றான். திருவநந்த புரத்தில் நான் அவனுக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தேன். அந்த வருஷத்தில் அவனுக்கு பி. எல். பரீக்ஷை தவறிப்போயிற்று. அவன் அகமுடையாள் பெரியவளாகி வீடுவந்து சேர்ந்தாள். அவன் மாமனார், தான் பணந் தருவதாகவும், பி. எல். பரீக்ஷைக்கு மறுபடியும் வாசிக்கும்படியும் சொன்னதை அவன் மறுத்து, மாதம் முப்பது ரூபா சம்பளமுள்ள ஒரு சர்க்கார் வேலையில் அமர்ந்து, அதிலிருந்து கொண்டே, ஒருவர் கையையும் எதிர் பாராமல், பரீக்ஷைக்கும் வாசித்து வந்தான்.

என் மதினி ஆநந்தவல்லி, அதிக அழகேனும் அதிக அவலக்ஷணமேனும் இன்றிச் சாதாரணப் பெண்களைப் போல் இருந்தாள். பணக்காரர் வீட்டிலே செல்வமாய் வளர்ந்து வந்தவ ளாதலினாலே, கொஞ்சம் பெருமையும் மினுக்குமா யிருந்தாள். விலை யுயர்ந்த புடவைகளும் ரவிக்கைகளும் நகைகளும் அவளிடத்திருந்தன. அவளை யார் பார்த்தாலும், முந்நூறு ரூபா உத்தியோகஸ்தன் மனைவி யென்று மதிப்பரே அல்லாமல், முப்பது ரூபா ராயச வேலைக்காரன் பெண்டாட்டி யென்று நினையார்கள். இதனால் என் தமயனுக்குக் கொஞ்சம் அசௌகரியங்கள் ஏற்பட்டன. அவனோடொத்தவர் மனைவிமாரும், அவனுக்கு மேலான உத்தியோகஸ்தர் மனைவிமாரும், என் மதினியைக் கண்டு பொறாமை யுற்றுத் தங்கள் கணவரிடம் அவதூறாகக் கோள்கூற, அதைக் கேட்டு அவர்கள் மணியனை உபேக்ஷையோடும் பரிகாசமான மரியாதையோடும் நடத்தத் தலைப்பட்டு, அவனுக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணினார்கள்.

ஊர் வர்த்தமானம் எவ்வாறாயினும், என் தமயனும் மதினியும் வீட்டில் அந்தரங்க நேசத்தோடும் அன்போடுமே வாழ்ந்து வந்தனர். எங்கள் வீட்டுக்கு வரும்பொழுது

என் மதினிக்கு வாசிக்கத் தெரியாது. அவள் வந்தபின் நாங்கள் இருவரும் தமிழ் வாசிக்க ஆரம்பித்தோம். முதலில் நான் அவளுக்குக் குருவா யிருந்தேன். பின்பு இருவரும் மணியனிடத்தில் ஒழுங்காய் வாசித்து வந்தோம்.

இந்தக் காலத்திலே, மணியன் என் விஷயத்தில் காட்டிய அன்பும் அநுதாபமும் இரக்கமும், ஒரு நாளும் மறக்க முடியாது. வாய் தவறிக்கூட ஒரு சுடு சொல் சொல்லமாட்டான். என் மனோபீஷ்டங்களை யெல்லாம் நான் வெளியிடுமுன் நிறைவேற்றி வந்தான். பெற்ற தாயினும் அதிகப் பக்ஷமாயும் அன்பாயும் ஆதரவாயும் நடத்தி வந்தான். அவன் மனைவி வீட்டுக்கு வந்தபின், முன்னளவு கவனம் அவனால் என் விஷயத்தில் செலுத்த முடியவில்லை. ஆனால் அது கிரமமே; நான் சிறிதும் அதைப்பற்றி மனஸ்தாபப் படவில்லை. என் மதினி முதலில் உபேக்ஷையா யிருந்தாள். அவள் கர்வத்தினால், என்னை ஒரு மரியாதையான வேலைக்காரியைப் போலவே நடத்திவந்தாள். நான் பிறக்கும் பொழுதே பிறர் கையை நோக்கி வேலை செய்து பிழைக்கும் அனாதை விதவையாகவே பிறந்தேனென்று அவள் எண்ணி யிருக்கலாம். அவளுக்குக் காரியம் ஒன்றுமே தெரியாது. சமையலே நன்றாகத் தெரியாது. ஸ்நாநம் செய்யவும், தலை வாரிக் கொள்ளவும், புடவையைக் கிள்ளுக்கிள்ளாகக் கொய்சகம் வைத்து அழகாய் உடுத்திக் கொள்ளவும், நகைகளைத் துலக்கித் துலக்கிப் பூட்டிக்கொள்ளவும், தன்னைப் பல விதமாய்ச் சிங்காரஞ் செய்து கொள்ளவுமே பொழுது சரியாயிருந்திருக்கும். இவற்றுடன், வாசிப்பதும், அடிக்கடி அகமுடையானுடன் அந்தரங்கமாய்ப் போய்ப் பேசுவதும் சேரவே, அவளால் ஒரு காரியமுமே செய்யக்கூடவில்லை. ஆனால் குஞ்சும் கிழமுமான பெரும்பண்ணைக்குத் தனியே உழைத்திட்ட எனக்கு, மூன்று பேரே உள்ள எங்கள் வீட்டு வேலை பெரிதாகத் தோன்றவில்லை. ஆகவே, அவள் ஒன்றும் ஏவுதற்கிட மின்றி, எல்லா வேலை

களையும் நானே பொறுப்பாகச் செய்து வந்தேன். இதை முதலிற் கண்டவுடன், மணியன், 'வேலை செய்யாவிட்டால் உடம்பு ஊதிவிடும்' என்றும், இன்னும் சில தந்திர மொழிகளாலும், தன் மனைவியைச் சிறிது கண்டிக்கலானான். அவள் குணத்தையும், என் மன வமைதியையும் அறிந்த பின்பு, அதையும் வர வர நிறுத்தி விட்டான். வீட்டுக்குவந்த ஆருவது மாதம், என் மதினி, வளைகாப் பணிந்து கொள்ளத் தன் பிறந்தகத்துக்குப் போனாள். அங்கேயே சீமந்தம் நடந்தது. மறு வருஷத்திலே என் தமயனே குழந்தையாய்விட்டது போன்ற ஒரு பிள்ளைக் குழந்தையுடன் திரும்பிவந்து சேர்ந்தாள். இதனிடையிலே, முதலில் தொடங்கிய படிப்பைத் தாழ விடாமல், வெகு கவனமாயும் ஜாக்கிரதையாயும் நான் வாசித்து வந்தேன். வீட்டுவேலை வெகு சீக்கிரம் முடிந்துவிடும்; ஆகவே, படிப்பைத் தவிர வேறு பொழுது போக்க வழி கிடையாது. என் மதினியோ, தன் வீடு போனவுடன் படிப்பை நிறுத்திவிட்டாள். அவள் திரும்பி வந்தவுடன் நான் அவளுக்கு உபாத்திச்சி யாகிவிட்டேன். என் தமயனுக்குச் சமையல் செய்து போட்டுக்கொண்டு நான் காலந் தள்ளி வருகையிலே, அவ்வாறே என் வாழ்நாள் முழுதையும் சுலபமாய்க் கழித்துவிடலா மென்று தோன்றிற்று. மங்கலியத்தை இழந்த தீரா மனக்குறை யொன்றைத் தவிர, வேறு மனக்குறை யொன்றுமே இல்லை. அப்பொழுதைய வாழ்க்கையைத் தவிர, வேறு ஜீவனோபாயமும் ஒன்றும் புலப்படவில்லை.

என் மதினி திரும்பி வந்தபின், வரவர எல்லாம் மாறி விட்டது. ஒற்றைக் கட்டையா யிருந்தபொழுது வேலை செய்யாதவள், பிள்ளையுங் கையுமா யிருக்கும் பொழுது வேலை செய்வாளென்று நான் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. வேலைகளை யெல்லாம் நானே செய்து வந்தேன். ஆனல் நானும் சிறுபெண்ணா யிருந்தபடியால், என் மதினிக்கு வேண்டிய மருந்து முதலியவை கொடுத்து அவளைப் பேணும்பொருட்டு, அவள் சித்தி யொருத்தி,

என்னைப் போன்ற ஒரு விதவை, சுமார் நாற்பது வயதுள்ள வள், அவள்கூட வந்திருந்தாள். இந்தப் புண்ணியவதி, என் பழைய மாமியாரை நல்லவளாக்கி விட்டாள். நான் கலத்தில் நெய் குத்திக் கொள்வதுங்கூட அவளைக் கேட்டே செய்ய வேண்டியதாய் விட்டது. இந்தச் சங்கதியொன்றும் மணியனுக்குத் தெரியாது. நானும் அவனிடத்திற் சொல்லி அவன் மனத்தைப் புண்படுத்தக் கூடாதென்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன். என் அருமை மருமகனாகிய குழந்தை விஷயத்தில், என் மதினியும் அவள் சித்தியும் செய்த கொடுமையே, எல்லாவற்றினும் அதிகமாக என்னைத் துயரப் படுத்தியது: அவனை நான் எடுக்கவேகூடாது; தொடவே கூடாது; எப்பொழுதாவது மணியன் எடுத்து என் கையில் தந்தால் உடனே மதினிவந்து வாங்கிக்கொண்டு போய்விடுவாள். இதனாலுண்டான மனக்கிலேசம் சகிக்க முடியாம லிருந்தது. முதலில் இதன் காரணம் தெரியாமலிருந்தது; அதுவும் சீக்கிரம் துலங்கிவிட்டது: "அந்த துர் அதிர்ஷ்டமுண்டை கைபட்டாலும் குழந்தைக்கு ஆகாது; தூங்கி யெழுந்தவுடன் அவள் முகத்திலே விழித்தால் அன்று முழுதும் குடி தண்ணீர்கூடக் கிடையாது" என்று, என் மதினியிடத்தில் அவள் சித்தியாகிய வெள்ளைப் புடவை சுமங்கலி சொன்னது என் காதில் விழுந்தது. அதற்குப் பதிலாக, "அது எனக்குத் தெரியாதா என்ன? முந்தாநாள் படுக்கையறையி லிருந்து வரும்பொழுது அவள் முகத்தில் விழித்தேன், காலில் இரத்தக்கோறை கண்டது. நேற்று முதல் படுக்கை யறையிலேயே ஒரு கண்ணாடியை வைத்துக்கொண்டு, தூங்கி யெழுந்தவுடன் அதில் முகத்தைப் பார்த்துவிட்ட பின்பே வெளியே வருகிறேன்" என்று என் மதினி சொன்னாள். இப் பேச்சுக் காதில் விழுந்தவுடன், எனக்குண்டான மன வருத்தத்தையும் கிலேசத்தையும் என்னென்று சொல்லுவேன்? தெய்வமே! என் புக்ககத்திலே நான் பட்ட கஷ்டமெல்லாம் போதாதா?

கிராத் துயரத்தை ஒருவாறு மறந்துவந்த இவ்விடத்தி லும், இவ்வண்ணம் என்னைச் சதிக்கவா நீ திருவுளம் கொண்டாய்! பின்பு என் அற்பமனச் சமாதானமெல்லாம் மாறிப்போய் விட்டது. நானே என் செல்வ மருமகனை எடுக்க அஞ்சினேன்: ஒரு வேளை அவர்கள் கூறியது மெய்யாயிருந்தால் என்ன செய்கிறது? கொடும்பாவியாகிய என் ஸ்பரிசத்தால் எங்கள் கண்மணிக்கு ஏதாவது வந்து விட்டால் என்ன செய்கிறது, என்று பயப்பட்டேன். இவ்விதம் சோற்றுக்கும் கேடாய், பூமிக்கும் பாரமாய் உயிர் வாழ்வதினும், எவ்விதமாயினும் பிராணனை விட்டு விடுவதே திறம் என்று எண்ணினேன்.

இவ்வாறு துயரக் கடலிலே தத்தளித்துக் கொண் டிருக்கும்பொழுது, ஒருநாள் மாலை, என் தமயன் கச்சேரி யிலிருந்து வரவில்லை; என் மதினியும் அவள் சித்தியும் கோவிலில் ஏதோ திருநாள் வேடிக்கை பார்க்கப்போ யிருந்தார்கள்; குழந்தை, தொட்டிலில் தூங்கிக்கொண் டிருந்தவன், விழித்துக்கொண்டு வீறிட்டு அழுதான். உடனே நான் கைவேலையைப் போட்டுவிட்டு ஓடிப்போய், அவனை எடுக்காமல், தொட்டிற் சங்கிலியைப் பிடித்துப் பின்வரும் தாலாட்டைப் பாடி ஆட்டிக் கொண்டிருந்தேன்:

'ஆராரோ ஆராரோ ஆரார் அடித்தாரோ?
ஆரடித்து நீ அழுதாய் அஞ்சனக்கண் மைகரைய?—என்
கண்ணான கண்ணே! என் கண்குளிர்ந்த மாம்பழமே!
தின்னும் பழமே! திகட்டாத செந்தேனே!—என்

ஈச்சம் பழமே! இனித்திருக்கும் தீங்கனியே!
வாழைப்பழமே! வரிக்கண் பலாச்சுளையே!—என்
அடிக்கரும்பே! செந்நெல்லே! ஆடையின்கீழ் நற்பாலே!
குடிக்கு நல்ல குஞ்சரமே! கோதண்ட பாணியனே!—என்

கண்ணான கண்ணுக்குக் கண்ணூறு வாராதே
சுண்ணாம்பு மஞ்சளுமாய்ச் சுற்றியெறி கண்ணுக்கு!
விபூதி வேப்பிலையும் வீசியெறி கண்ணுக்கு—என்
ண்ணை அடித்தவர் யார், கற்பகத்தைத் தொட்டவர் யார்?

பொன்னை அடித்தவர் யார், பூங்கிளியைத் தொட்டவர் யார்?
ஆராரோ ஆராரோ ஆரார் அடித்தாரோ?
ஆரடித்து நீ அழுதாய், அடித்தாரைச் சொல்லியழு.'

நான் பாட்டுபாடித் தொட்டிலை ஆட்டிக்கொண்டிருக்கும்பொழுது, திடீரென்று வீட்டு வாசலிலே ஒரு வண்டி வந்து நின்றது. அதி சுந்தரரூபனான ஒரு யௌவன புருஷர் அதிலிருந்து வெளியே குதித்து, விரைவாய், "சுப்பிரமணியம்" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார். அந்தக் குரலைக் கேட்ட மாத்திரத்திலேயே எனக்கு மயிர்க் கூர்ச்சுண்டாயிற்று. ஒன்றுந் தெரியாமல் ஸ்தம்பித்து அங்கேயே நின்றுவிட்டேன். உள்ளே வந்தவர், என்னை ஒரு நிமிஷம் திகைத்து நோக்கி, "யார், என் பெண்டா,——முத்துமீனாக்ஷியா?" என்றார். தலை முக்காட்டை யிழுத்து முகத்தை மறைத்து, 'ஐயோ' என்றலறிக்கொண்டு வீட்டுக்குள் போய்விட்டேன்.

சுந்தரேசனுக்கும் மணியனுக்கும் நாலைந்து வருஷங்களாகக் கடிதப் போக்குவரவு கூட இல்லாததால், ஒருவர் சமாசாரம் மற்றவருக்குத் தெரியாமல் இருந்தது. நானாவது மணியனாவது அவரைப் பற்றி அடிக்கடி நினைப்பதுமில்லை, பேசுவதுமில்லை. அவரை முற்றிலும் மறந்துவிட்டோம் என்றே சொல்லலாம். ஆகவே இப்பொழுது அவர் வானத்திலிருந்து குதித்தாற்போல், முன் தெரிவிக்காமல் திடீரென்று வந்து சேர்ந்தவுடன், மிக்க ஆச்சரியமாயும் சந்தோஷமாயு மிருந்தது. என் தமயன் கச்சேரியிலிருந்து வந்தவுடன், அவர்களிருவரும் ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டும், முத்தமிட்டுக் கொண்டும், முதுகில் தட்டிக்கொடுத்துக் கொண்டும், கூத்தாடிக் கொக்கரித்ததை நினைக்க, எனக்கிப்பொழுதும் சிரிப்பு வருகின்றது. சிநேகிதன் மேலுள்ள வாஞ்சையில் தன்னையும் தன் குழந்தையையும் கூடத் தன் புருஷன் மறந்துவிடக் கூடுமென்று என் மதினி பயப்பட்டிருக்கலா மென்று, நான்

என்னுகிறேன். ஒன்றுக்குமே பதிற் சொல்ல இடங் கொடாமல் ஆயிரங் கேள்விகளைக் கேட்டபின், மணியன், என் மதினியைக் கையைப்பிடித்து இழுத்துச் சென்று, சுந்தரேசன் முன்னே நிறுத்தி, "அடே! சுந்து! பாரடா: இவள் தான் என் பெண்டாட்டி. அதோ தொட்டிலில் தூங்குகிறானே, அந்தப்பயல்தான் எங்கள் சீமந்த புத்திரன். உனக்கெத்தனை குழந்தைகள்?" என்று கேட்டான். அதற்குச் சுந்தரேசன், "இருபது வயசுக்கு மேலான ஒரு பையனிருக்கிறான்; அப்புறம் குழந்தைகளில்லை" என்றார். என் தமையன், "என்ன, நீதானோ? சீ! சீ! ஒரு காசுக்குப் பிரயோசனமில்லை" என்று சொன்னான். அதற்குப் பதிலாகச், சுந்தரேசன், "நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி*" என்று பாட ஆரம்பித்தார். இதைக் கேட்டவுடன், "என்ன, இன்னும் காலைக்குக் கட்டையே கட்டவில்லையோ?" என்று கேட்டதற்கு, "எல்லாம் சாவகாசமாய்ச் சொல்லுகிறேன். முதலிலே ஒரு டம்ளர் காப்பி; தின்ன ஏதாவது இருந்தாலும் வாந்தி பண்ணிவிட மாட்டேன்" என்று சொன்னார் சுந்தரேசன்.

சுந்தரேசனுக்கு அதுவரையும் கலியாணமே ஆகவில்லையாம். அவர் மதினியின் அம்மங்காராகிய பெண்ணுக்கு முந்தியிருந்த சொற்ப அழகும் வைசூரியினால் அழிந்துபோக, அவர் தமயனும் மதினியும் எவ்வளவோ சொல்லியும் கேளாமல், அந்தப்பெண்ணைத் தான்

---

* "நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி,
நலனொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்,
பூப்பிளக்கப் புறம்பாகும் புற்றீசல் போலப்,
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்;
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்;
கவர்பிளந்த மரத்துளையிற் கால் நுழைத்துக் கொண்டீர்,
ஆப்பதனை அசைத்தெடுத்த குரங்கதனைப் போல
அகப்பட்டீர்; கிடந்துழல அகப்பட்டீரே."

பட்டினத்துப் பிள்ளையார்.

கலியாணஞ் செய்துகொள்வதில்லை' என்று மறுத்து விட்டாராம். அதன்மேல் அவர்கள் கோபமும் வெறுப்பு முற்று, அவர் விவாக விஷயத்திலும் படிப்பு விஷயத்தி லுங்கூட, உபேக்ஷையா யிருந்து விட்டார்களாம். அவர் தமயனார், அவருக்குத் தக்கவயது வந்தவுடன், குடும் பச் சொத்தைப் பாகம் செய்து கொடுத்துவிட்டாராம். அதுவரையும் ஏக குடும்பமா யிருக்கும்பொழுது, தான் சம் பாதித்துச் சேர்த்ததிலும் அவர் ஒருவேளை பங்குக்கு வரக்கூடுமென்று நினைந்து, குடும்பச் செலவுகளையெல் லாம் குடும்பச்சொத்தின் வருமானத்திலேயே போட்டு வந்ததுமன்றி, தான் திரட்டிய பணத்தில் சிறிதையும் நிலத்தில்போடாமல், எல்லாவற்றையும் தன் மனைவிக்கு நகைகளாகவும் அவள் பேரில் 'பாங்கில்' போட்டும், பிரத்தியேகமாய்க் காப்பாற்றி வந்திருந்தாராம். குடும்ப விபாக காலத்தில் இவர் வாய்திறக்கவே யில்லையாம். ஆகவே, இப்பொழுது சுமார் பதினாயிர ரூபா சொத்துக் குச் சுயாதிகாரியாகி, பி. எல். பரிக்ஷை தவறிபோன பின், பலவூர்களையும் கண்டு களிக்க எண்ணிப் பிரயா ணம் புறப்பட்டுத், திருவநந்த புரத்துக்கு வந்து சேர்ந்தா ராம். ஏன் இன்னும் கலியாணஞ் செய்துகொள்ளவில்லை யென்று கேட்டதற்குத், தன் மனத்துக்கிசைந்தமனையாட்டி கிடைக்கவில்லை யென்றும், "தாலி கட்டையிலே தொட்டு நடுக்கட்டையிலே கிடத்துமட்டும் கருமம் தானே" என் றும் கூறி முடித்தார்.

முதலில் இரண்டேநா ளிருப்பதாகச் சொல்லிப், பின்பு, என் தமயன் நிர்ப்பந்தத்தின்மேல், கூட இரண்டு நாள் தங்க அரிதில் சம்மதித்தவர், கடைசிவரை, ஒரு மாதம் இருந்ததுமன்றி, கொச்சி திருச்சூர் முதலிய ஊர் கள் பார்த்துவிட்டு, மறுபடியும் வந்து ஒருவாரம் தங்கி னார். திருவநந்தபுரத்திலே யாரோ ஒரு அச்சிக்கு முண்டு கொடுத்து, அவர் அவளை வைப்பாய் வைத்துக்கொண்டி ருப்பதாயும், அதன் நிமித்தமே அவ்வாறு தங்குவதா

யும், ஒருவேளை என் தமயனையும் அவர் கெடுத்துவிடக் கூடுமென்றும், என் மதினியும் அவள் சித்தியும் அவரை அவதூறு கூறிப் பழித்து, அவர்போனால் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பதாக இரகசியமாய் வேண்டிக் கொண்டார்கள். ஆனால் அவைதல்லாம் வீண்பழியே. அவர் அவ்வாறு தங்கியதற்குக் காரணம், என் மனத்துக்கும் அவர் மனத்துக்குமே நன்று தெரியும். என் தமயனுக்குக்கூட அப்பொழுது உண்மை தெரியாது. அந்தோ! ஒருவரையொருவர் பார்த்தது முதல், எங்கள் இருவருக்கும் மெய்க்காதல் பிறந்துவிட்டது. நான் அவருடன் பேசுவதில்லை; என் தமயன் எவ்வளவு சொல்லியும், பழையநாள் பரிகாசங்களையும் பழக்கத்தையும் நினைப்பூட்டியும், என் மொட்டைத் தலையுடன் அவர் எதிரே நிற்க என்மனம் இணங்க வில்லை. அவர்கள் உள்ளே சாப்பிடவரும் போதன்றி, அவர் என்னைப் பார்ப்பது மில்லை, நான் அவரைக் காண்பது மில்லை; அப்பொழுதும் கூட, அவருக்குப் பரிமாறும்பொழுது எனக்குக் கைகால்கள் நடுங்கும்; சிலநாள்களில், என் மதினியையேனும் அவள் சித்தியையேனும் பரிமாறச் சொல்லிவிட்டு, நான் உள்ளேயே இருந்து விடுவேன். ஆயினும் என்ன? எவ்விதமாயினும், தெரிந்தோ தெரியாமலோ, எங்கள் கண்கள் தினம் ஒருமுறையாவது ஒரு நொடிப்பொழுதாவது சந்திக்கும். அந்த விநாடியில், மனத்தில் நடக்கும் குழப்பமெல்லாம் ஒருவருக்கொருவர் பகிரங்கமாய் விடும்; எவ்வளவு திடப்படுத்திக் கொண்டாலும், மறைக்கமுடியாமற் போய்விடும்.

> "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனும் இல"

என்றார், மனசின் இரகசியங்களை நன்கறிந்தமஹான். ஆகவே, ஒருவரோடொருவர் பேசாமலே, பழகாமலே, ஒருவரையொருவர் அதிகம் பாராமலே, எங்கள் காதல் நாளுக்குநாள் வளர்ந்தேறிவந்தது மன்றி, ஒரேவீட்டில்

இருவரும் இருப்பதிலேயே ஒருவித ஆநந்தமும் திருப்தியும் மனத்துக்கு உண்டாயிற்று. இக்காலத்திலே, இரவுகளில், தலையணையெல்லாம் கண்ணீரால் நனைந்துபோக, நான் பட்ட தாபத்தை எடுத்துரைப்பது தகுதியன்றென்று கூறவில்லை. அவர் திருச்சூர் முதலிய இடங்களுக்குச் சென்று திரும்பிய பின், கடைசியாகப் பிரிந்து போகும் நாளும் வந்துவிட்டது. என் துக்கம் எனக்குத் தெரியும்; அவர் மனத் துயரத்தை அவர் கண்கள் எனக்குத் தெளிவாகத் தெரிவித்தன. அவருக்கு நன்றாய்ப் பாடத் தெரியுமென்று முன்பே சொல்லி யிருக்கிறேன் அன்றோ? அவர் மனவேக்கத்துக்கும் முக வாட்டத்துக்கும் காரணம் இன்னதென்று அறியாத என் தமயன், எவ்வளவோ அவரைக் குதூகலப் படுத்த முயன்றும் பலிக்காமல், கடைசியாக, அவர் போகுமுன் எங்கள் வீட்டில் ஒரு 'பாட்டுக்கச்சேரி' வைத்து, எங்களையும் அவன் சிநேகிதர் சிலரையும் சந்தோஷப்படுத்த வேண்டுமென்று, அவரை உபத்திரவப்படுத்தினான். பாட்டிலும் அழுகைக் கச்சேரிக்கே தக்கவரா யிருந்த அவர், தம்மை மன்னித்துக்கொள்ளும்படி பிரார்த்தித்த தொன்றும் பயன்படாமல், கடைசியில், அவர் புறப்படுவதற்கு முந்திய நாள், ஞாயிற்றுக்கிழமை யன்று, எங்கள் வீட்டில் சங்கீதக் கச்சேரி நடந்தது. வீட்டுக்காரரையும் மணியனுடைய முக்கிய இஷ்டர்களில் ஐந்தாறு பேரையும் தவிர, வேறொருவரும் கிடையாது. வீட்டு முன்கட்டில், மாலை நாலுமணி முதல் ஐந்து அல்லது ஐந்தரை மணி வரையுமே, பாட்டு நடந்தது; வீட்டுப் பெண்டிராகிய நாங்கள், பின்கட்டில் மறைவாயிருந்து கேட்டுக் கொண்டிருந்தோம். நடந்ததெல்லாம் நன்றாய் எனக்கு ஞாபக மிருக்கிறது: அவர் மொத்தம் நாலு பதங்களே பாடினார்; அந் நான்கும், ஒரு காதலன் தன் காதலியை நோக்கி விரகதாபம் பொறுக்க முடியாமல் கூறும் கருத்துக்களைக் கொண்டனவே. அவர் குரலையும் பாடும் மாதிரியையும் யாவரும் புகழ்ந்துகொண்

டாடினார்கள். கடைசியில், ஒருவர், "இதெல்லாம் சிற்றின்பமாகவே போச்சு. பேரின்ப ரசமாய் ஏதாவது ஒன்று பாடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அவர் சிறிது நேரம் யோசித்துப், பின்பு,

"படமுடியா தினித்துயரப் படமுடியா தரசே! பட்டதெல்
லாம் போதுமினிப் படவேண்டா மென்றன்
உடலுயிரா தியவெல்லாம் நீ எடுத்துக் கொண்டுன் உடலுயிரா
தியவெல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்."

என்ற அருட்பாவை, மண்ணும் மரமும் உருகி யிளகும் படியான குரலில், எடுத்துப் பாடினார். யாவர்க்கும் புளகாங்கிதமாகிக் கண்களில் நீர் ததும்பிவிட்டது. அவர் பாடி நிறுத்திய பின்னும் நிச்சப்தமாய்ச் சிறிது நேரம் ஆநந்தத்தில் ஆழ்ந்திருந்து, பின்பு கரகோஷம் செய்து மெய்ச்சிப் புகழ்ந்தனர். அந்தப் பாட்டில் அவர்களெல்லோரும் பேரின்ப ரசத்தையே அநுபவித்தார்கள். அதைப் பாடியவர் அதற்குக் கற்பித்த அர்த்தம் என் மனத்துக்குமட்டுமே தெளிவாய்த் தெரிந்தது. பொறுக்க முடியாத துன்பத்தில் என்னை ஆழ்த்திவிட்டு, அவர் மறுநாள் புறப்பட்டுப் போய்விட்டார்.

ஒன்பதாவது அதிகாரம்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் மூன்று மணி சுமாருக்கு, மணியன், தன்னறையி லிருந்தபடியே என்னைக் கூப்பிட்டான். நான் போனேன். அவன் மட்டும் தனியே இருந்தான். ஒரு கடிதமும் அவன் கையில் இருந்தது. முதலில் சிறிது திகைத்துத் தியங்கிப், பின்பு, என்னைப் பார்த்து, "முத்து! எனக்கெப்பொழுதுமே புத்தி அவ்வளவு கூர்மையில்லை என்று எனக்கே சந்தேக முண்டு; இவ் விஷயத்திலும் அது ருஜுவாச்சுது. இதோ, சுந்துவினிட மிருந்து உனக்கொரு கடிதம் வந்திருக்கிறது. எனக்கு வந்த கடிதத்துக்குள் அதிருந்தது.

எனக்குச் சம்மதமாயிருந்தால் உன்னிடம் அதைக்கொடுக்கும்படி அவன் எழுதியிருக்கிறான். எனக்கொரு வேளை சம்மதமிராதென்று நினைத்து அவன் எடுத்துக் கூறியிருக்கும் நியாயங்களைப்பற்றிப் பேச வேண்டியதில்லை. ஏனெனில், உனக்குப் பிரியமிருந்தால் எனக்கும் மனப்பூர்வமாய் அது சம்மதமே. நீ எப்படியாவது சந்தோஷமாய் வாழவேண்டுமென்பதே என் கருத்து. இதோ மேஜைமேல் காகிதம், 'கவர்' எல்லாமிருக்கிறது. அதை வாசித்துப்பார்த்து உன் பதிலை எழுதிக்கொடுத்தால், அவனுக்கு அனுப்புகிறேன். ஆநந்தம், சித்தி, யாராவது வந்து உன்னை நடுவே தொந்திரவு செய்யாமல், நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொல்லி, என் ஆச்சரியம் அடங்குமுன்னமே அறைக் கதவை மூடிவிட்டு, வீட்டுக்குட் போய்விட்டான். அவன் போனபின், ஒரு நாற்காலியில் இருந்து, அவன் தந்த கடிதத்தைப் பிரித்து வாசித்தேன். எனக்கு எளிதில் விளங்கும்படி அது தெளிவாய் எழுதப்பட்டிருந்தது. அதிற் சில பாகங்களை மட்டும் கீழே எடுத்தெழுதுகிறேன் :

"இனி என்னால் பொறுக்கமுடியாது. உன் பதிலை எதிர் பார்த்து என் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன். நீ மறுத்துவிட்டால் என் பிராணன் போய்விடுமென்பது என் தாத்பரியமல்ல. உன்னை உயிர்த்துணைவியாய்ப் பெற்றாலன்றி என் வாழ்நாளெல்லாம் வெறும் பாழாகவே முடியும். * * * * * அதி பாலியத்தில் உன்னைப் 'பெண்டாட்டி' என்று விளையாட்டாக அழைத்து உன்னுடன் சல்லாபமாய்ப் பழகியபொழுது, இம்மாதிரியான காதல் உன்மேல் எனக்குப் பின்னால் உண்டாகுமென்று நான் சொப்பனத்திலும் எண்ணவில்லை. நம்மிருவருக்கும் காதலின் மெய்த்தன்மை அப்பொழுது தெரியாது. என்னோடொத்த வாலிபரில் சிலருக்கு இரண்டு மூன்று குழந்தைகள் கூட இருக்கின்றன. ஆனால், நான் மட்டும் இதுவரையும் ஒரு ஸ்திரீ விஷயத்திலாவது

உண்மையாய்க் காதல் கொள்ளவில்லை. இது கடவுளாக அருளிய பேரதிர்ஷ்டமென்று களிக்கின்றேன். நான் இப்பொழுது ஒருத்திக்குப் புருஷனாயிருந்திருந்து உன்னைக் கண்டிருந்தால், அவள் கதியும் என் கதியும் என்னமாய் முடிந்திருக்கும்?' உன் விஷயத்திலும் கடவுள் கிருபையையே நான் காண்கிறேன்: 'நாம் கேடுகளாக நினைப்பவை மறைவான நன்மைகளே,' என்று கூறுவதற்கு உதாரணமாக, உனக்கு நேர்ந்த கொடியவிபத்து, உன்னை இப்பொழுது சுயாதிகாரியாய் விட்டிருக்கிறது. ஆகவே, ஒருவருக்கொருவரென்றே பழவினைப்படி விதிக்கப்பட்டுப் பிறந்த நாமிருவரும், இடையில் சிறிது பிரிவுற்று, சுவாமி கிருபையால், இப்பொழுது மறுபடியும் சேரும்படியான நிலைமையில் இருக்கிறோம். இதினும் ஸ்பஷ்டமாக தெய்வாக்கை வெளிப்படாது. * * * * * * உலகத்தில் அவரவர் சுக துக்கங்கள் பொதுவாய் அவரவருக்கே உரியன. நாமெவ்வளவு முயன்றாலும், சுகதுக்கத்தை நேரில் அநுபவிப்பவர் அளவு, நம்மால் பகிர்ந்தநுபவிக்க முடியாது. நாம் வேறு, அவர்கள் வேறு என்பது, எப்படியாவது வெளியாகிவிடும். தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறு என்ற பழமொழி, ஆழ்ந்த கருத்தை உடையது. ஆகவே, உன் தமயன் உன்னை எவ்வளவு பக்ஷமாய் நடத்தி வந்தாலும், வீட்டிலுள்ள மற்றவர் உன்னை எவ்வளவு அன்பாய் நடத்தி வந்தாலும்—இதற்கு மாறாகவே உண்மையில் நடக்கிறதென்பதை நான் நன்கு அறிவேன்—, உன்மேற் காதலாகி உன்னைக்கொண்டு உன் காதலுக்கு உரியவனான ஒரு புருஷனோடு, உன் குழந்தைகளும் குடும்பமுமாய் நீ அநுபவிக்கக் கூடிய சுகத்தையும் ஆநந்தத்தையும், நீ ஒருபொழுதுமே வேறு விதமாய் அறியவும் முடியாது. அவ்விதச் சுகத்தை சுவாமி உன்முன் வைக்கும்பொழுது, அதை உதறித் தள்ளுதல் தோஷமேயாம். * * * * நீயுற்றிருக்கும் அவகோலத்தையும், துயரத்தினாலும் வேலையினாலும் உன் திவ்ய சரீரம் மெலிந்து வாடி

வதங்கி யிருப்பதையும், அன்பு இரக்கம் ஒன்று மில்லாரோடு தினமும் பழகி அவர்களுக்காக உழைத்து வாயில்லாப் பிராணிபோல் நீ வயிறு வளர்த்துவரும் பரிதாபத்தையும் பார்த்தவுடன், நான் இரத்தக் கண்ணீர் வடித்தேன். என் மனம் பட்ட துயரம் கடவுளுக்கே தெரியும். அந்தோ! எவ்வளவு கொடுமையானதாக இவ்வுலக வாழ்க்கை தோன்றுகின்றது! நல்லார் தாழ்வதும் பொல்லார் வாழ்வதும் எவ்வளவு சகசமா யிருக்கின்றன! * * * * புருஷனை இழந்த பெண்கள் மறுபடியும் கலியாணம் செய்து கொள்ளலா மென்பதற்கு சாஸ்திரங்களில் அத்தாட்சி யிருக்கின்றது. அம் மாதிரியான விவாகங்கள் வழக்கத்தில் இப்பொழுது நடக்கவும் செய்கின்றன. * * * * இந்தக் கடிதம் உனக்கு ஞாயிற்றுக்கிழமை யன்று கிடைக்கும். நீ மறுநாள் பதிலெழுதினாலும், வியாழக்கிழமையன்று எனக்குக் கிடைக்கவேண்டும். நான் அது வரையும் இவ்வூரிலேயே இருப்பேன். அன்று உன் சம்மதத்தைக் குறிக்கும் உன் பதில் கிடையாவிடின், பின்பு நான் என்ன செய்வேனோ இப்பொழுது சொல்ல முடியாது. என்மேல் காதலிருந்தாலும் இல்லாவிடினும், என் நிலைமைக்கு இரங்கி, பழைய பழக்கத்தை நினைந்தேனும் உடனே நல்ல பதிலனுப்பும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். * * * ''

இந்தக் கடிதத்தை வாசித்தவுடன் எனக்குக் கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. அடக்கமுடியாத ஆநந்தமும் துக்கமும் மனத்தில் கொந்தளித்தன. ஒருவாறு தாபத்தை அடக்கிக்கொண்டு, பதிலெழுதுவது தகுதியல்ல வென்றும், நன்றாலோசித்துப் பொறுத்து எழுதலா மென்றும், மணியனுடன் இதைப்பற்றிப் பேசலா மென்றும், பலவாறு யோசித்து, பின்பு உடனே பதிலெழுதுவதே தகுதி யென்று தீர்மானித்து, ஐந்தாறு கடிதங்கள் எழுதியெழுதிக் கிழித்துக், கடைசியில் ஒரு கடிதத்தை எழுதி

முடித்து ஒரு 'கவரு' க்குள் போட்டு ஒட்டி மேஜை மேல் வைத்துவிட்டு, வீட்டுக்குட் சென்றேன். அங்கே மணியன் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்தான். என்னைக் கண்டவுடன் அவன் ஒன்றும் கேட்கவில்லை. சற்றுப் பொறுத்துத் தன்னறைக்குட் போய்விட்டான். அன்றிரவு, மற்றவருக்குத் தெரியாமல், கடிதத்தை அனுப்பி விட்டதாக ஒரு வார்த்தைமட்டும் சொன்னான். பிற்பாடு அந்தப்பேச்சை எடுக்கவே யில்லை. ஒருவாரங் கழித்து வந்த பதிற்கடிதத்தை, முன்போலவே, என்னைக் கூப்பிட்டு மணியன் கொடுத்தான். அதை முழுதும் வெளிப்படுத்த எனக்கு வெட்கமா யிருக்கிறது: என் குணங்களும், அழகும் அவ்வளவு ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. சாதாரணமானவர் அதை வாசித்தால், எழுதினவருக்குப் பித்தக்கிறுக்குண்டென்று சொல்வார்கள். ஆயினும், அதினின்றும், சில பாகங்களைக் கீழே வரைகிறேன் :—"* * * ஓ! என் ஆநந்தத்தை என்னென்று சொல்வேன்! ரதியைப்பெற்ற மதனும் சசியைப் பெற்ற இந்திரனும் எனக்கு நிகரல்ல. இவ்வுலகங்களுக் கெல்லாம் ஆதிபத்தியம் கிடைத்திருப்பினும் எனக்கு இவ்வளவு சந்தோஷம் உண்டாயிராது. நானே பாக்கியவான். ஆம், சுந்தரேசா! நீ பாக்கியவானே. உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! * * * * உலகம் ஒப்பவேண்டுமா? இவ்வளவே உன் ஆக்ஷேபனை? இப்பாழான பைத்தியக்கார உலகம் ஒப்பினென்ன, ஒப்பாவிடி லென்ன? ஆறுவயதுக் குழந்தையை அறுபதுவயதுக் கிழவன் கலியாணம் செய்துகொள்வதையும்; மூன்றுவயதுப் பெண் சிசுவை நாலுவயது ஆண்சிசுவுக்கு அக்கினி சாக்ஷியாய் விவாகஞ் செய்வித்து, இருவரையும் கிரகஸ்தாசிரமத்தில் புகுத்துவதையும்; முதல் பெண்டாட்டி உயிரோடிருக்கையிலேயே இன்னும் வேறொரு பெண்ணை இரண்டு பெண்ணை மனோபீஷ்டப்படி புருஷர் மணம்புரிந்து கொள்வதையும்; தன் தர்மபத்தினி சாக்ஷியாக, வேசி

வீட்டுக்கும் தாசிவீட்டுக்கும் தன்னிஷ்டப்படி சென்றும், அவர்களைத் தன்வீட்டுக்கே அழைத்து விருந்திட்டு அவர்களோடு சுகித்தும், மானம் மரியாதையின்றி ஒழுகும் தூர்த்தனான புருஷன் ஒருவன், அவன் மனைவி யாரையேனும் களங்கமின்றித் தலைநிமிர்ந்துப் பார்ப்பதைக்கண்டு சந்தேகமுறினும், அவளை அடித்தும் மிதித்தும் சித்திரவதை செய்தும் வீட்டைவிட்டு விலக்கி அவமானப்படுத்தியும் குரூர இம்சை செய்வதையும்; வெட்கமின்றி, ஆடுமாடு மிருகங்களைப்போல், பெற்றபெண்களையே விலைபேசி விற்பதையும்; அக்கினி சாக்ஷியாக அருந்ததியைக்காட்டி ஒரு கன்னிகையை ஒருவன் உயிர்த்துணைவியாகக் கொள்ளும் புனிதமான புண்ணிய கருமத்தின் நடுவே, விலைமாதரை ஆடவும் பாடவும் விட்டு வேடிக்கை பார்ப்பதையும்; ஆடுமாடுகளைப்போலப் பெண்களை மதித்து நடத்துவதையும்; கடவுள் திருச்சந்நிதியிலேயே கற்பிழந்த கணிகையரின் ஆடல்பாடல்களைக் கண்டு களித்து அவர்களைக் காமுறுதலையும்; இன்னும் இவை போன்ற பலவிதத் தீங்குகளையும், ஆதிகாலத்து ஆசாரங்களாக மதித்துப் புகழ்ந்து, ஒப்புக்கொள்ளும் உலகம் தானே இது? பொய்ச்சாக்ஷி கூறுவோரையும், வியபிசாரஞ்செய்யும் புருஷரையும், இலஞ்சம்வாங்கும் உத்தியோகஸ்தரையும், பிறப்பொழுக்கம்குன்ற மதுபானம்செய்தும் மாமிசம் அருந்தியும் வறிதே தீங்குசெய்யும் மக்கட்பதடிகளையும், அவர்களுக்குப் பணமும் பவுஷும் மட்டுமிருப்பின், யோக்கியர்களாகவும் கனவான்களாகவும் மதிக்கும் உலகம்தானே இது? சற்குணங்களும் நல்லொழுக்கமும் நிறைந்த ஒரு உத்தமசூத்திரனிலும், பஞ்சமகா பாதகனான ஒரு பிராமண அதமனே மேலென்று நினைக்கும் உலகம்தானே இது? நாய்க்கேனும் பசுவுக்கேனும் இடும் உச்சிஷ்டத்தை, பசித்திருக்கும் பஞ்சமனொருவனுக்கு இடலாகாதென்றும்; நீரில் முழுகி இறக்

கும் தருணத்திலிருக்கும் நீசன் ஒருவனை, ஒரு பிராமணன் தொட்டிழுத்துக் கரையேற்றிக் காப்பாற்றினால், பிராயச் சித்தஞ் செய்துகொள்ள வேண்டுமென்றும், நீதிகூறும் உலகம் தானே இது? இப்புண்ணிய பூமியையன்றி, வேறு எந்தத்தரையைக் கப்பலேறிச்சென்று மிதிக்கினும் குலாசாரம் அழிந்துபோமென்று எண்ணியொழுகும் உலகம் தானே இது? புனர்விவாகம் செய்துகொண்டு கிரமமாய் வாழும் ஒரு விதவையை வெறுத்து விலக்கி, அவ்வா றின்றி இரகசியமாய் மனம்போனபடி வியபிசாரஞ் செய்யும் ஒரு விதவையை நன்குமதிக்கும் உலகம் தானே இது? வாக்குண்மையையும், மனச்சுத்தியையும், மெய்யறி வொழுக்கத்தையும் மதிக்காது, வெளிவேஷத்தையும் பகட்டையும் பணத்தையுமே பெரிதாக மதித்தொழுகும் உலகம் தானே இது? சிச்சீ! இவ்வுலகத்தின் நன்மதிப்பிலும், புகழ்ச்சியிலும், அதன் அவமதிப்பும் இகழ்ச்சியுமே மேல். இதன் மதிப்புப்படி முற்றிலும் நல்லவனென்று பெயரெடுத்தவன் நரகத்துக்கே செல்வான். இப்பாழான உலகமதிப்பை நான் ஒரு திரணமாகவும் நினைக்கவில்லை. * * * சாஸ்திரங்கள்? முதலில், சுகத்துக்கு ஏற்றதே சாஸ்திரம். ‘நம்முன்னோர் மூடரல்லர்; அவர்கள் தக்க காரணம்பற்றியே சில ஆசாரங்களை அநுசரித்து வந்திருக்கின்றனர்; ஆதலின் நாமும் இப்பொழுது அவ்வாறே ஒழுகவேண்டும்’ என்று கூறும் மொழி, இக்காலத்தில் உள்ள நமக்கும், பிரத்தியேகமான பகுத்தறிவையும் விவேகத்தையும் தந்திருக்கும் கடவுள் மூடரென்று கூறுவதுபோலாகின்றது. இருபுறமும் சுவரைவைத்து, நடுவே இரண்டு சக்கரங்களுக்கும் ஏற்றபடி சுவட்டையும் ஆழமாய்ப் பதித்து விட்டால், பின்பு அப் பாதையில் வண்டிகளை இழுத்துச் செல்லும் எருதுகளுக்குக் கண்கள் அனாவசியமே. இதென்ன நியாயம்? இதென்ன வழக்கு? இப்பொழுதுள்ள பேதங்களும், நாக

ரிகங்களும், குழப்பங்களும், சில விஷயங்களில் அறிவீன மும், சிலவற்றில் அதிகமான அறிவும், நம் முன்னோர் காலத்தில் இருந்தனவோ? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர்கள் அநுசரித்து வந்த நடை உடை பாவனை நாகரிகங்களோடேயே நாம் இப்பொழுது இருக்கின்றோ மோ? ஆறு வயதில் ஒரு குழந்தைக் கணிந்த உடுப்பு இருபது வயதில் சரியா யிருக்குமா? ஆறு வயதோ, இருபது வயதோ, எண்பது வயதோ தற்காலம் என்பது, இப்பொழுது நாம் கவனிக்க வேண்டிய தன்று. ஒரே உடை மூன்று பருவங்களுக்கும் பொருந்தாது என்பதே நாம் அறியவேண்டியது. கோடைக் காலத்திலே வெந்நீரில் மூழ்குபவனையும், கூதிர்க் காலத்திலே தண்ணீரிற் குளிப்ப வனையும் எல்லோரும் நகைத் திகழ்கின்றார்கள். நம்முடைய ஆசார அநுஷ்டான விஷயங்களிலும் ஏன் சிறிது அப் புத்தியைச் செலுத்தக் கூடாது? இது நிற்க, நம்முடைய சாஸ்திரங்களையே எடுத்துக் கொள்வோம்: ஆதி வேத மாகிய ரிக்வேதத்திலேயே, நாதனை யிழந்து துன்புறும் பெண்ணொருத்தியை நோக்கி, வீண் துயரத்தை விட்டு விட்டு, வேறொருவனை மணம்புரிந்துக் கொண்டு சுகமாய் வாழும்படி, ஒரு ரிக்குக் கூறுகின்றது. மநு, பாராசரர், நாரதர் முதலிய முனி சிரேஷ்டர்களது ஸ்மிருதிகளிலு லும் முற்காலத்தில் விதவா கலியாணங்கள் நடந்ததாகத் தெரியவருகின்றது. புராணங்களிலும் அப்படியே. ஐந்தாம் வேதமாக மதிக்கப்படும் மகாபாரதத்திலே, ஸ்திரீ களின் புனர் விவாகத்துக்கு மூன்று உதாரணங்கள் காண்கின்றன. விசித்திர வீரியன் என்ற அரசன், சந்ததி யின்றி இறந்தவுடன், அவன் தாய், அஷ்டவசுக்களில் ஒருவரும் உத்தம புருஷருமாகிய பீஷ்மாசாரியரையே நோக்கி, அவ்வரசனது விதவைகள் இருவரையும் தன் மனைவிகளாகக் கொள்ளும்படி கூறுகிறாள். அன்றியும், புருஷனை யிழந்த விதவையாகிய உலூபியை அர்ச்சுனன்

புனர் விவாகம் செய்து கொண்டதாயும், அவர்களுக்குப் பிறந்த புத்திரன் அர்ச்சுனனுக்குரிய மகனாகவே மதிக்கப் பட்டதாயும் தெரியவருகின்றது. இதுவுமன்றி, நள சரித்திரத்திலே, தன் புருஷனைப் பிரிந்த தமயந்தி, வேறொரு மணம் புரிந்துகொள்ளத், தன் தந்தை அநுமதி யோடு, இரண்டாம் முறை சுயம்வரத்தைக் கோருகிறாள். இதற்கு அழைக்கப்பட்ட அயோத்தி மன்னன், அச்செய் கையில் தவறொன்று மிருப்பதாகக் கருதாமல், சுயம்வரத் துக்கு வந்து சேர்ந்தது, அக்காலத்தில் அத்தகைய புனர் விவாகங்கள் சகசமாய் நடந்துவந்தன என்பதைக் குறிக் கின்றது. பத்மபுராணத்திலே, ஒவ்வொரு முறையும் விவாகச் சடங்குகள் நிறைவேறியவுடன் மணவாளனை இழக்கும் துர்ப்பாக்கியவதியான காசி மன்னனது பெண், திரும்பவும் திரும்பவும் இருபது முறை கலியாணஞ் செய்து கொடுக்கப் படுகிறாள். ஆகவே, சுருதி, ஸ்மி ருதி, இதிகாசம் ஆகிய மூன்று அத்தாக்ஷிகளாலும், புனர் விவாகம் ஸ்திரீகளுக்குத் தகுமென்று ஏற்படுகின்றது. இக்காலத்தில் வழக்கமும் முன்னரே ஏற்பட்டு விட்டது. இப்படி யிருக்க, உலகம் அதைப் பழிப்பது மூடத்தனமே யாகும். இவ்வளவுமே இல்லாவிடினும், இப்பொழுது நம்மவர் செய்கைகள் ஆசாரங்கள் எல்லாம் வேத சாஸ்தி ரோக்த மாகவே இருக்கின்றனவோ? இதெல்லாம் வீண் பேச்சு. * * * * *"

இனிக் கதையை வளர்ப்பதில் என்ன பயன்? என் தமயன், தனக்குப் பரிபூரண சம்மத மென்றும், நான் அவ்வாறு மணஞ் செய்துகொண்டு வாழ்ந் தாலே தன் மனம் விசாரம் நீங்கித் திருப்தி அடையு மென்றும், வற்புறுத்திக் கூறினன். பின்பு நானும் மன மிசைந்து ஒருப்பட்டு அவருக்குக் கடிதம் அனுப்பினேன்.

பத்தாம் அதிகாரம்.

இவ்வாறு என் சம்மதத்தைப் பெற்றபின்பு தனது தமயனார் சம்மதத்தை விரும்ப, அவர் அதைக்கொடுக்காததுமன்றி, என்னைக் கலியாணம் செய்துக் கொண்டால், தன் தம்பி இறந்துவிட்டான் என்று, ஸ்நாநம்செய்து விடுவதாகப் பதிலனுப்பினாராம். அவர் தமக்கையார் இலக்ஷ்மியம்மாள் கூடத் தடுத்தாளாம். ஆனால் அதை யொன்றும் அவர் மதிக்கவில்லை. எங்கள் வீட்டில், மணியன், என் மதினியுடனும் அவள் சித்தியுடனும் வேறு விதமாகப் பேச்சை விட்டு, எங்கேயோ ஒரு விதவா விவாகம் நடந்ததாகக் கூறி, அவர்கள் அபிப்பிராயத்தை நாடியதில், அது முற்றிலும் விரோதமாகவே தெரிய வந்தது. ஆதலின், அவர்களிடத்திலும் சமாசாரத்தைச் சொல்லாமல், என் பழைய புக்ககத்தாருக்குச் சென்று சில நகைகளை மீட்கப் போவதாக ஒரு பொய்யுரைத்து விட்டு, என்னை அழைத்துக் கொண்டு மணியன் சென்னபட்டணம் சென்றான். எனக்கும் சுந்தரேசனுக்கும் அங்கே விவாகம் நிறைவேறியது. அநேக கனவான்கள் வந்திருந்து நடத்தினார்கள்; சிலர் வெகுமதிகள் அனுப்பினார்கள். ஆனால் வந்தவரில் மிகச் சிலரே போஜனத்துக்குத் தங்கினார்கள். கலியாணம் முடிந்தவுடன், நானும் என் கணவரும் பம்பாய் கல்குத்தா முதலிய இடங்களுக்குப் புறப்பட்டுப் போய்விட்டோம். என் தமயன் திருவநந்தபுரத்துக்குத் திரும்பிவிட்டான்.

என் தலைமயிர் மறுபடியும் சுருள் சுருளாய் வளர்ந்ததையும், என் பிராணேசர் அதற்காக மாதம் இருபது ரூபா வரை தைலங்களிற் செலவிட்டதையும், எனக்கு அவர் பட்டுப்புடவைகளும் நாகரிகமான நகைகளும் வாங்கித் தந்ததையும் பற்றி விவரிப்பதும்; எங்கள் இல்லறச் சுகத்

தையும் காதலின்பத்தையும் பற்றிக் கூறுவதும் அனாவசியமே. எங்கள் காதல் முத்திரையும் குலதீபமுமாக வந்து பிறந்த செல்வக் குழந்தைக்கு, இவற்றிற்கெல்லாம் பிரதம காரணனா யிருந்த என் தமயன் சுப்பிரமணியன் பெயரையே இட்டிருக்கிறோம். அந்தக் குழந்தை, எங்களிருவர் நான்கு கண்களுக்கும் ஒரே மணியாக விளங்கி, வளர்ந்து வருகிறான். எங்கள் இணைபிரியாக் காதலும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஆனால் எனக்குள்ள ஒரு மனக்குறை மட்டும், வெளியிட்டால் தான் சிறிது தீரும்: என்னை என் கணவர் பழையபடி 'பெண்டாட்டி' என்றே கூப்பிடுகிறார். அது கிடக்கிறது. நானும் அவரை 'சுந்து' என்றே கூப்பிட வேண்டி யிருக்கிறது. 'ஞள்' 'இந்தாருங்கள்' 'உங்களைத்தானே' 'என்ன' என்று எவ்விதமாக அழைத்தாலும், செவிடரைப்போல் இருந்து விடுகிறார். பேசும் பொழுது, நான் ஒரு முறை 'நீங்கள்' என்று சொன்னால், அவர் அன்று முழுதும் எனக்குத் 'தாங்கள்' பட்டம் கொடுக்கிறார். இந்த நிர்ப்பந்தத்துக்காக அவரைச் 'சுந்து' என்றழைத்து, அவருடன் ஏக வசனத்திற் பேசுகிறேன். எங்கள் வீட்டுக்கு ஒருவருமே வருகிற வழக்கமில்லாமையால், இதில் ஒரு அசௌகரியமும் நேரவில்லை. இதை நானெழுதும் பொழுதே அவர் வாசித்துப் பார்த்து, "சும்மா எழுது; இதற்கெல்லாம் பயந்த புள்ளி யில்லை" என்று கும்மாளம் போடுகிறார்.

உலகம் எங்களை நடத்தும் விதத்தைப் பற்றிச் சிறிது கூறி, என் வரலாற்றை நிறுத்துகிறேன்.

நாங்கள் ஒரு பட்டணத்திலே பிராமணர் குடியிருக்கும் வீதியிலே ஒரு வீட்டிலிருந்தோம். அந்தப் பட்டணத்துக்கு முதலிற் போனவுடன் சத்திரத்தில் இறங்கியிருந்தோம். எங்கள் விருத்தாந்தம் தெரியவந்த வுடன், எங்களைச் சத்திரத்தினின்றும் வெளியாக்கச் சிலர் முயன்

ரூர்கள். அது "லோகல் பண்டு" சத்திரமானபடியால், அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை. பின்பு அவ்வூரிலே பிராமணர் தெருவில் வீடு கொடுக்கக் கூடாதென்று முயன் ரூர்கள். என் கணவரும் பிடிவாதக்காரர். அத்தெருவி லேயே குடியிருக்கிறதென்று நிச்சயித்தார். முன்பொரு வர் மாதம் மூன்று ரூபா குடிக்கூலி கொடுத்துவந்த வீட் டை, மாதம் ஏழு ரூபாவுக்குத் திட்டம் செய்து, பிராமணர் வீதிக்கே குடிப்போனோம். நம்மவர் வைதீகக்கொள்கை களும் அபிப்பிராயங்களும் ரூபாயைப் பொறுத்தவை களே. என் கணவர் இஷ்டப்படி, நான் அத்தெருவில் ஒவ்வொரு பெரிய மனுஷன் வீட்டுக்கும் சென்று, வீட்டு எஜமானிகளை ஒரு முறை பார்த்து வந்தேன். அவர்கள் ஒருவரும் என் வீட்டுக்கு என்னைப் பார்க்க வரவேயில்லை. அந்தத் தெருப் பிராமணர் வீடுகளில் பால் மோர் தயிர் விற்பதுண்டு. ஆனால் எங்களுக்குக் கொடுப்ப தில்லை என்று சொல்லிவிட்டார்கள். அடுப்பு நெருப்புக்கூட எங் களுக்குத் தருகிற தில்லை. அவ்வூருக்குப் போகும்பொ ழுது, மாதம் பதினைந்து ரூபா சம்பளமாகச் சென்னப் பட்டணத்திலிருந்து ஒரு பிராமண வேலைக்காரனை அழைத் துப் போயிருந்தோம். ஒரு மாதத்திற்குள் அத்தெரு வார் அவனை ஓட்டிவிட்டார்கள். நானே வீட்டு வேலை களை யெல்லாம் செய்யவேண்டிய தாயிற்று. இதைக்கண்ட என் கணவர், வீட்டைச் சுத்தம் செய்து குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும், வஸ்திரங்களைத் தோய்த்துப்போட வும், எனக்கு உடம்பு சரியாக இல்லாவிட்டால் ஜலம் கூட மொண்டு வரவும், ஒரு சூத்திர வேலைக்காரியைத் திட்டம் செய்துவிட்டார். ஆவணி மாதத்தில் உபாகர்மம் வந்தது. எங்கள் வீட்டுக்குப் புரோகிதர் வரவில்லை. என் கணவர் ஒன்றும் செய்யவு மில்லை. அமாவாசை சிராத்த தினங் களுக்குக் கூடப் புரோகிதர் வருகிறதுமில்லை; என் கணவர் ஒன்றும் செய்கிறது மில்லை. அதனால் ஏதாவது தோஷம்

நேரிட்டால், அதெல்லாம் அவ்வூர்ப் பிராமணரைச் சேர்ந்ததே என்று சொல்லிவிட்டார். நான் ஒரு தடவை சுரத்தினால் சாகக் கிடந்தேன். சகல வேலைகளையும் விட்டுவிட்டு, எனக்குத் தானே பத்தியம் செய்து போட்டு, வேண்டிய ஊழியங்களெல்லாம் செய்து, ஒரு நிமிஷமும் என் படுக்கையை விட்டசையாது, இராப் பகல் தூக்கமின்றி அவரே என்னைப் பேணிக் காப்பாற்றினார். அக்கம் பக்கம் வீட்டார் எட்டிப் பார்க்கவுமில்லை. என் பெண் குழந்தைகளில் ஒன்று, இரண்டாவது மாதத்தில் இறந்து போய்விட்டது. ஒருவருமே வரவில்லை. அவரே அதை எடுத்துக்கொண்டு போய்ப் புதைத்துவிட்டு வந்தார். இது நடந்தபின், அது கருமசண்டாளர் தெருவென்றும், அதிலிருந்தால் தமக்குள்ள பிரமணியமும் போய் விடுமென்றும், அடுத்த நாளே சூத்திரர் தெருவுக்குக் குடிபோய் விட்டார். அவர் செய்யும் வியாபார விஷயத்திற்கூட அவரைக் கெடுக்க முயன்றார்கள். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. அவர் தமயனோ, தன் வீட்டு விசேஷங்கள் ஒன்றுக்கும் எங்களை அழைக்கிறதே யில்லை. எங்கள் வீட்டுக்கும் வருகிறதே யில்லை. அவர் பந்துக்கள் அனைவரும் எங்களை அவ்வண்ணமே விலக்கிவிட்டார்கள். நான் என் தமயன் வீட்டுக்குப் போக முடியவில்லை. அவன் மட்டும் எப்பொழுதாவது வந்து எங்களுடன் இரகசியமாய்த் தங்கிப் போவான். என் மதினியையேனும் அவர்கள் குழந்தைகளையேனும் நான் பின்பு பார்த்ததே யில்லை. இவை யெல்லாம் எனக்கு மிகவும் மனவருத்த மாகவே இருக்கின்றன. ஆனால், என் மாமியின் கீழ் நான் வாழ்ந்ததையும், என் தமயன் வீட்டில் அவன் குழந்தையைத் தொட முடியாமல் நான் இருந்ததையும் நினைத்துப் பார்த்தால், இது சுவர்க்கமே அன்றோ? அன்றியும், என் பிராண நாதர் அன்பும் ஆதரவும் அளப்பரிய காதலும் என்னை எப்பொழுதும் சந்தோஷப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அவரோ, இதற்கெல்லாம் விசாரப்படவே

இல்லை. முந்தாநாள் எங்களுக்குள் நடந்த சம்பாஷணையை மட்டும் கூறி, முடித்து விடுகிறேன். குண்டூரில் ஒரு விதவா விவாகம் நடந்ததென்று பத்திரிகை மூலமாய்த் தெரியவந்தபொழுது, அவ் விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது,

நான் :—"யார் என்ன சொன்னாலும், விதவா விவாகம் இரண்டாம் பக்ஷம்தான்" என்றேன்.

என் கணவர் :—கேவலம் உண்மையே. பெண்கள் விதவைகளாகப் பிறக்கிறதில்லை. ஆனால் கர்ப்பத்திலிருக்கும் பொழுதே கலியாணம் செய்ய ஆரம்பித்து விட்டால், இப்பொழுது போன்ற விதவா விவாகம் மூன்றாம் பக்ஷமாகி விடக் கூடும்.

நான் :—இதென்ன கேலி? குதர்க்கமே பேசுகிறீர்களே.

என் கணவர் :—தாங்கள் தமிழில் சொன்னதைத் தான் நான் தென் மொழியில் சொல்கிறேன்.

நான் :—இனிமேலில்லை. மன்னித்துக்கொள். ஒரு ஸ்திரீ ஒரு புருஷன்மேல் காதலாயிருந்தபின் வேறொருவனை மணம்புரிவதெப்படி?

என் கணவர் :—புருஷன் எப்படிச் செய்கிறானோ அப்படியே. ஒரு புருஷன் ஏக காலத்தில் இரண்டு ஸ்திரீகளைப் பெண்டாகக் கொண்டிருக்கிறானே; அதெப்படி? அதில்லாவிட்டாலும், எல்லா விதவைகளும் கலியாணம் செய்துக் கொண்டே தீரவேண்டுமென்று சட்டத்தை ஒருவரும் கோரவில்லையே. அவரவர் இஷ்டம்போல் நடக்க இடந் தரவேண்டுமென்று மாத்திரமே கேட்கிறோம்.

நான் :—அதெல்லாம் இருக்கட்டும்; நீ சொல்கிறதே சரியாக விருக்கட்டும்,—

என் கணவர் :—என்ன தயவு! என்ன பொறுமை!

நான் :—கேலி பண்ணாதே. குழந்தைகள் பெரியவர்களாய் விட்டால், பின் யோசனை யென்ன? எத்தனை நாளைக்கு இப்படி உலகத்தை எதிர்த்து நடக்கலாம்?

என் கணவர் :—உலகம் இவ்வாறு உபத்திரவப் படுத்துகிற வேறு சிலரைப்போல, நாமும் நடக்கிறது. உலகம் நம்மை விலக்கினால், உலகத்தை நாம் விலக்கி விடுகிறது.

நான் :—நீ சொல்வது நன்றாகத் தெரியவில்லை.

என் கணவர் :—இனிமேல் அரவத்திலே சொல்லுகிறேன்; கேள், பெண்டாட்டி :—

இப்பொழுது, பள், பறை, சாணர், முதலிய 'கீழ் சாதிகள்' இருக்கிறார்களே அவர்களை, உலகம், அதாவது மேல் சாதிக்காரார், அதாவது முக்கியமாய்ப் பிராமணரும் வேளாளரும், உபத்திரவப் படுத்துகிறார்கள். மலைமலையாய்ப் பணமிருந்தாலும் வெள்ளிச் சோறும் தங்கச் சோறும் கிடையாது. கீழ்ச் சாதிக்காரார் உழுது பயிர் விளைத்தால்தான் மேல் சாதிக்காரார் உண்டுகொழுத்து வேதாந்தமும் சாஸ்திரமும் பேசலாம். இதைக் கூட அறியாமல் அவர்களை உபத்திரவப் படுத்துகிறார்கள். மேல்சாதிப் பிராமணர் முன்போல வேதமே ஓதிக்கொண்டிருந்தால், கீழ்ச்சாதிக்காரரும் பணிந்து உழுவார்கள். 'நான் உத்தியோகம் பண்ணுகிறேன்; நீ முன்போலவேயிரு' என்றால் சரிப்படவில்லை. இவர்கள் உபத்திரவம் பொறுக்க முடியாமல், இவர்கள் சாதிக் கட்டில் மேற்கிளம்ப முடியாமல், அவர்கள் ஆயிரக் கணக்காய் கிறிஸ்து வேதத்திற் சேருகிறார்கள். ஹிந்துவான பறையன் தான் கிட்ட வரக்கூடாதே ஒழிய, கிறிஸ்தவன் ஆகி விட்டால் வரலாம். படிப்பிலும் நாகரிகத்திலும் மற்றெவ்விஷயத்திலும், சுதேச கிறிஸ்தவர் வெகு சீக்கிரத்தில் எவ்வளவு முன்னுக்கு வந்திருக்கிறார்களென்பதையும்; அதே சாதிகளைச் சேர்ந்த ஹிந்துக்கள் எந்த நிலைமையில் இன்னும்

இருக்கிறார்க ளென்பதையும் கவனித்துப் பார்த்தால், சாதிக் கட்டு எவ்வளவு தடை செய்கின்றதென்பது வெளியாகிவிடும். உண்பதையும், உடுப்பதையும், உறங்குவதையும், சகல கிருத்தியங்களையும் மதத்தோடு கலந்தே நாம் பாழாகிறோம். கிறிஸ்தவர்களுக் குள்ளோ, அப்படியில்லை. மதம் வேறு, மற்றவை வேறு. பின்னை என்ன? நம்மை இந்தப் பாழுலகம் எப்பொழுதுமே இப்படிச் சதித்தால் கிறிஸ்தவர்களாகி விடுவதே உத்தமம். எந்த நாமத்தால் எந்த ரூபத்தால் கடவுளைத் தியானித்தாலும், எல்லாவற்றையும் சர்வேசுரனே ஏற்றுக் கொள்கிறானென்று சந்தியாவந்தனத்திலேயே சொல்லி யிருக்கிறது. ஹிந்துக்களது மூடத்தனமான பொறாமையால் கிறிஸ்தவ மதம் இலாபமடையட்டும். பிற்பாடு இவ்விதத் தொந்திரவுகள் ஒன்றுமே யிருக்கமாட்டாது. நம்முடைய குழந்தைகளேனும் சுகமாய் வாழ்வார்கள்.

நான்:—இது நிஜமாகத்தானா சொல்கிறாய்?

என் கணவர்:—பின்னை யென்ன, பெண்டாட்டி! நீயே ஆலோசித்துப் பார். இவ்விதச் சாதிக் கட்டும் பழைய ஆசாரங்களும் இந்தக் காலத்தில் எத்தனை நாட் செல்லும்? இதை மட்டும் உறுதியாகக் கொள்: நம்முடைய பெரியவர்கள் கூடி மதத்தையும் மற்றவைகளையும் பிரித்தாலன்றி, அல்லது, காலத்துக்குத் தக்கபடி ஒழுக இடங் கொடுத்தாலன்றி, நாம் ஒருநாளும் முன்னுக்கு வரமாட்டோம். நமக்குள் இருப்பது போன்ற சாதிக்கட்டு வேறு எத்தேசத்திலு மில்லை. நம்மைப்போல் புருஷர் புத்தி சாலிகளா யிருக்கும் எத்தேசத்திலும், பெண்கள் இவ்வளவு ஜடங்களா யில்லை. நமக்குள்ளும் இவையெல்லாம் மாறும் காலம் நெருங்கிவிட்டது. மூன் ஆலோசனையோடு தக்கவாறு நடந்து கொண்டாலன்றி, பெருங் கேடுகள் விளைந்துவிடும். குளம் நிறைந்து தண்ணீர் எதிர்க்கும் பொழுது, மதகுகளைத் திறந்து தண்ணீருக்குப் போக்கு விடாவிட்டால் என்னாகும்? மதகு, கரை, எல்லாவற்றை

யும் வாரிக்கொண்டு போய்விடும்; அப்படியே காலவேற்றுமை விஷயத்திலும்.

நான்:—சரி; எப்படியானாலும் சரி. என்னைக் கைவிட்டுவிட மாட்டாயே?

என் கணவர்:—பருப்பில்லாமல் கலியாணமா? 'பெண்டாட்டி' இல்லாத வாழ்வா? உன்னைக் கைவிடுவதாயிருந்தால் இவ்வளவுக்கு வருவானேன்? நீதான் ஒரு வேளை எனக்குப் பைத்தியம் என்று நினைத்துப் பின்தங்கி விடுவாயோ, என்னவோ?

நான்:—எனக்குத் தாயும் நீயே, தகப்பனும் நீயே, தெய்வமும் நீயே. உனக்கு நான் பட்டிருக்கும் கடன், என் தோலை யுரித்து உன் காலுக்குச் செருப்பாகத் தைத்துப் போட்டாலும் தீராது. இன்னொரு ஜன்மத்தில் நான் புருஷனாகவும் நீ என் பெண்டாட்டியாகவும் பிறந்து, என் கடனை ஒருவாறு தீர்க்க இடந்தர வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

என் கணவர்:—ஒரே ஒரு சிறிய சந்தேகம்: முதல் புருஷனா, இரண்டாம் புருஷனா? முதல் பெண்டாட்டியா, இரண்டாம் பெண்டாட்டியா? மாமியார் உண்டா, இல்லையா?

நான்:—"போடா, எல்லாம் கேலிதான் உனக்கு. என் மனத்தி லிருக்கிறதை நீ என்ன கண்டாய்? இந்தப் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? நான் முன்னிருந்த கதியென்ன, இப்பொழுது அநுபவிக்கும் ஆநந்தமென்ன? உலக மதிப்புப் பெரிதல்ல என்று, நீ எழுதினது இப்பொழுதுதான் தெரியவருகிறது" என்றேன்.

இதற்கு என் கணவர் சொன்னதாவது: "எல்லாம் எனையாளும் ஈசன் செயல். ஆனால் மனுஷப் பிரயத்தனமின்றி ஒன்றும் நடக்காது. மனிதனும் தெய்வத்தின் அம்சமே; ஆதலின், அவன் முயற்சிகளினாலும் செய்கை

களினாலுமே திருவுளக் கருத்து வெளியாகும். ஒன்றுஞ் செய்யாமல் சும்மா இருந்தால் ஒன்றுமே பலன் கிடையாது."

பின்னுரை

மேலே கண்டபடி என் சரித்திரத்தை நான் எழுதி நிறுத்தி இருப தாண்டுகளுக்கு மேலாயின. இக்காலத்தின் முன்பாகத்தில் நாங்கள் பட்ட கஷ்ட நிஷ்டூரங்களையும், நாளடைவில் அவை குறைந்து வந்ததையும் விரித்தெழுத வேறொரு புஸ்தகம் வேண்டும். நவ நாகரிகமும் பெண் கல்வியும் நாட்டிலே ஒருவாறு தழைத்து வரும் இந்நாளிலுமே, பல இடங்களிலும் பல குடும்பங்களிலும் நான் பட்ட கஷ்டங்களை இன்னும் பலர் அநுபவித்து வருவது பிரத்தியக்ஷம். இவை யாவும் ஒழிந்து, ஆண்களைப் போலவே பெண்களும் சம சுதந்தரம் பெற்று, ஒவ்வொரு ஹிந்து குடும்பத்திலும் "காத லிருவர் கருத்தொக்க ஆதரவு பட்ட இன்பம்" தழைத் தோங்குமாறு கடவுள் அருள் புரிவாராக!

PRINTED AND PUBLISHED BY A. MADHAVIAH
AT THE AUTHORS' PRESS AND PUBLISHING-HOUSE, MYLAPORE, MADRAS.



பத்திராதிபர் அ. மாதவையர்	சந்தா வெளிநாடு-ரூ 6-0-0 உள்நாடு-ரூ 5-0-0 தனிப்பிரதி 0-8-0

விளம்பர விகிதம்
பக்கத்துக்கு 10 ரூபா
½ பக்கம் ரூ 5—8—0
நீடித்தவற்றுக்கு விகிதம் எழுதி அறிக.

பத்திரிகை மாதம்	பக்கங்கள்	சித்திரப்படங்கள்	தலையங்கங்கள்
சித்திரை 1924	88	18	28
வைகாசி ,,	90	18	19
ஆனி ,,	88	9	19
ஆடி ,,	84	16	23
4 மாத மொத்தம்	350	61	89

இதுவரை பத்திரிகையில் எழுதியவருள் சிலர்:- லேடி சதாசிவையர், T. V. சேஷகிரி ஐயர், சேலம் வி. ராஜகோபாலாசாரியார், சுதேசமித்ரன் பத்திராதிபர் எ. ரங்கசாமி ஐயங்கார், S. சத்தியமூர்த்தி ஐயர், K. G. சேஷையர், Rev. பாப்புலி, வெ. ப. சுப்பிரமணிய முதலியார், பண்டிதை அசலாம்பிகையம்மாள், M. லக்ஷ்மியம்மாள், அ. மாதவையர் முதலியோர்.

சில அபிப்பிராயங்கள்

(1) ஸ்ரீ. டி. வி. சேஷகிரி ஐயர், மாஜி ஹைகோர்ட் ஜட்ஜு:— "பத்திரிகை இப்படித்தான் இருக்கவேண்டும்" (2) சேலம் ஸ்ரீ. வி. இராஜகோபாலாசாரியார்:— "வெகு நன்றாயிருக்கிறது" (3) Sir. பி. ராமநாதன்.— "பிரயோஜனப் படுமென்று காண்கிறது" (4) ரெவ். பாப்புலி:— "நற்பொருள் விருத்தி-தமிழ் மக்கள் முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது" (5) ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி, எம். எல். ஸி:— "எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" (6) பண்டிதை அசலாம்பிகை அம்மாள்:— "எவரே விரும்பார்?" (7) நவசக்தி:— "மணந்தக் கவர்ந்தக்க கட்டுரைகள் பல மிளிர்கின்றன" (8) நாடார் குலமித்திரன்:— "இதன் மேன்மையை விளம்புதல் முடியுமோ?" (9) ஸ்ரீ. வெ. ப. சு. முதலியார், ஜி. பி. வி. ஸி:— " "எல்லாவற்றையும் உத்தேசித்து, இப்பொழுதுள்ள தமிழ்ப் பத்திரிகைகளிலெல்லாம் இது தான் சிறந்தது. விஷயங்களின் பெருமையையும் சேர்த்தியையும் கவனித்தால், நான் எதிர் பார்த்ததை விட எவ்வளவோ விலை சுலபமாயிருக்கிறது." தமிழ் வீடு தோறும் இருக்கவேண்டியது.

குறிப்பு— பத்மாவதி சரித்திரம் மூன்றாம்பாகம், புதிதாக, சித்திரப்படங்களுடன், இப்பத்திரிகையில் வெளி வந்து கொண்டிருக்கிறது.

"பஞ்சாமிர்தம்" ஆபீசு, எட்வர்டு எலியட் ரோடு, மயிலாப்பூர்–சென்னை